Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 10 ஞாயிற்றுக்கிழமை (25-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:243

# வன்முறைகள் மேலும் தொடர்ந்தால் போர் மூள்வதைத் தடுக்க முடியாது!

## நோர்வே பிரதியமைச்சர் எச்சரிக்கை

ஒஸ்லோ,ஜூலை25

தற்போது தளம்பல் நிலையில் உள்ள போர்நிறுத்த உடன்படிக்கை, வன்முறைகள் மேலும் தொடர்ந்தால் முடிவுக்கு வரும் என்றும் - அதனால் இலங்கைத் தீவு மீண்டும் உள்நாட்டுப் போருக்குள் தள்ளப்படுமென்றும் - நோர்வேயின் வெளிவிவகாரப் பிரதியமைச்சர் விடர் ஹெல்கிஸன் எச்சரித்துள்ளார்.

'ரொய்டர்' செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே பிரதியமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் சமாதான முயற்சிகள் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் 'ரொய்டர்' செய்துச் சேவைக்கு அளித்த செவ்வியில் நோர்வே வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் போர் குறித்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்.

அந்தச் செவ்வியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கையில் அண்மைக்காலமாக நிலவிவரும் ஸ்திரமற்ற தன்மை மற்றும் வன்முறைகள் தொடர்பாக நான் மிகுந்த குழப்பமடைந்துள்ளேன். சில சக்திகள் நெருப்புடன் விளையாடுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. அது மிகவும் ஆபத்தானது. நெருப்புடன் விளையாடும் சிலரால் வெடிச் சம்பவங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (16ஆம் பக்கம் பார்க்க)

## நகரில் இருவருக்கு நேற்றிரவு அடி உதை!

யாழ்ப்பாணம்,ஜூலை25

யாழ். நகரப் பகுதியில் நேற்றுப் பின்னிரவு வீதியில் சென்றுகொண்டிருந்த நடைபாதை வியாபாரிகள் இருவரை மோட்டார் சைக்கிளில் வந்த குழுவொன்று வழிமறித்துக் கண்மூடித்தனமாகத் தாக்கியது.

நேற்றிரவு 11 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதி வழியாக நடைபாதை வியாபாரிகள் இருவர் சென்றுகொண்டிருந்தனர். அப்போது அந்த வீதிவழியே ரி.வி.எஸ். ரக மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அவர்களை வழிமறித்துக் கண்மூடித்தனமாகத் தாக்கினர். தாக்கிய (16ஆம் பக்கம் பார்க்க)

# சென்னை சென்ற ஈழவேந்தன் எம்.பியை இந்திய அதிகாரிகள் திருப்பி அனுப்பினர்



சென்னை,ஜூலை25

பெங்களூரில் இன்று இடம்பெறும் உலகத் தமிழர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று இந்தியா சென்ற தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் சென்னை விமான நிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரனும், ஈழவேந்தனும் நேற்று மாலை 3.30 மணிக்கு இந்தியன் ஏயர் லைன்ஸ் விமானத்தில் சென்னைக்குப் புறப்பட்டனர்.

சென்னை விமான நிலையத்தை அவர்கள் அடைந்ததும், சந்திரசேகரனை வெளியே செல்ல அனுமதித்த விமான நிலைய அதிகாரிகள் ஈழவேந்தனை வெளியே செல்ல அனுமதிக்க மறுத்தனர்.

"உயர் மட்டத்தில் இருந்து கிடைத்த உத்தரவுப்படி உங்களை வெளியே செல்ல அனுமதிக்கமுடியாது. மீண்டும் இலங்கைக்குத் திரும்புங்கள்" என்று விமான நிலைய அதிகாரிகள் ஈழவேந்தனிடம் தெரிவித்தனர்.

"நான் இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர். நான் இந்தியாவுக்குள் செல்ல அனுமதிக்கவேண்டும்" என்று அவர்களிடம் ஈழவேந்தன் கேட்டுக்கொண்டார்.

ஆனால், எதுவும் பயன்தராத நிலையில் விமான நிலைய அதிகாரிகள் நேற்றிரவு 9.30 மணியளவில் விமானம் ஒன்றில் ஈழவேந்தனை ஏற்றிக் கட்டுநாயக்கவுக்குத் திருப்பி அனுப்பினார்கள்.

ஈழவேந்தன் மிக முக்கிய விருந்தினருக்கான கடவுச்சீட்டு வைத்திருப்பவர். அவரைத் திருப்பி அனுப்பியபோது சென்னை விமான நிலைய அதிகாரிகள் அவரது கடவுச் சீட்டில் எந்த அடையாளமும் இடவில்லை.

இவர் பயணம் செய்த 'ஜெட் ஏயர்வேஸ்' விமான சேவையின் விமானநிலைய முகாமையாளரிடம் அதிகாரிகள் கடிதம் ஒன்றைக் கொடுத்தனர்.

"ஈழவேந்தன் நாட்டுக்குள் அனுமதிக்க முடியாதவர். எனவே, இவரை அடுத்த விமானத்தில் கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள்" என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

திரும்பும்போது தனக்குப் போக்குவரத்து ஏற்பாடுகள் ஏதும் செய்யவில்லை என்று ஈழவேந்தன் விமான நிலைய அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினார்.

"கொழும்புக்கு அறிவித்துள்ளோம். வேண்டிய ஏற்பாடுகளை அவர்கள் செய்வார்கள்" (16ஆம் பக்கம் பார்க்க)

## வரதர் தங்க இணங்கும் பாரதம் எம்மைத் தடுப்பது வியப்பானது

### கொழும்பு திரும்பிய ஈழவேந்தன் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை25

வரதராஜப் பெருமாள் போன்றவர்களுக்குத் தஞ்சம் அளிக்கும் பாரதம், இந்திய உறவை நாடும் எம்மைத் திருப்பி அனுப்பியமை வியப்பை அளிக்கின்றது.

- இப்படிக் கூறினார் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன்.

தமிழகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஈழவேந்தன் கட்டுநாயக்க விமான நிலையம் திரும்பியபின் 'உதயனுக்கு' இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் பதவியேற்றுள்ள புதிய அரசின் கொள்கைகளில் மாற்றம் இருக்கும் (16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வெள்ளியிரவு இரு இளைஞர் படுகொலை!

மட்டக்களப்பு,ஜூலை25

மட்டக்களப்பில் இருவேறு இடங்களில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த சம்பவங்களில் இரு இளைஞர்கள் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

கல்முனைப் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு மயானத்தில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது. சடலத்துடன் கைத்தொலைபேசி ஒன்றும் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் இருந்து கூட்டிச் செல்லப்பட்ட சிதம்பரப்பிள்ளை துஷ்யந்தன் (வயது-24) என்ற இளைஞனின் சடலமே அது என இனங்காணப்பட்டுள்ளது.

கல்முனையில் இயங்கும் கட்டடத் திணைக் (16ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்து குடாநாட்டில் இன்று துக்கம் அனுஷ்டிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை25

தமிழ்மக்கள் மீது சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்டு மேற்கொண்ட இன அழிப்பை நினைவு கூர்ந்தும் அதனைக் கண்டிக்கும் வகையிலும குடாநாடு தழுவிய ரீதியில் துக்கதினம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச, கூட்டுறவு, தனியார் நிறுவனங்கள், வாத்தக நிறுவனங்கள் அனைத்திலும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு எமது உள்ளக் குமு (16ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படைப் பாதுகாப்புடனேயே கருணா விமானநிலையம் சென்றார்

### சிவாஜிலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை25

இலங்கை அரசின் ஏற்பாட்டில் இரு அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் விமான நிலையத்தில் உள்ள பிரத்தியேகப் பாதையூடாகவே கருணா சிங்கப்பூருக்குச் சென்றார்.

- இப்படிக் கூறுகிறார் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்.

இதுபற்றி அவரிடம் கேட்டபோது அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் இருந்து கருணா அவரின் குடும்பத்தினரோடு சிங்கப்பூர் சென்றார். அவருக்குக் கூடவே இரு அதிகாரிகளின் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

அதே விமானத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் கூடப் பயணமானார். விமான நிலையத்தில் இருந்து (16ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன காசாளர் நவாலியில் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை25

கடந்த வியாழக்கிழமை இரவு முதல் காணாமற்போன மானிப்பாய் மக்கள் வங்கிக் காசாளர் நேற்றுச் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்.

மக்கள் வங்கியின் மானிப்பாய்க் கிளையில் காசாளராகப் பணிபுரிந்த சுந்தரம் பஞ்சலிங்கம் (வயது-54) கடந்த வியாழக்கிழமை வேலை முடிந்து வீடு திரும்பும் வழியில் காணாமற்போயிருந்தார்.

இவரது சடலம் நேற்று மாலை நவாலி கொத்துக்கட்டி தரவைப் பகுதியில் மண்பிட்டிக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

அவரது முகம் சிவப்புத் துணியால் மூடப் (16ஆம் பக்கம் பார்க்க)

# பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு ஈராக் தீவிரவாதிகள் புது நிபந்தனை

பக்தாத்,ஜூலை25

ஈராக்கில் தீவிரவாதிகள் 3 இந்தியர்கள், 3 கென்யா நாட்டவர்கள் உட்பட 7 பேரைக் கடத்திச் சென்றனர். ஈராக்கில் அவர்கள் பணியாற்றிவந்த குவைத் நிறுவனத்தினர் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் பணயக் கைதிகளை 72 மணி நேரத்துக்கு ஒருவர் வீதம் தலையைத் துண்டித்துக் கொலைசெய்வோம் என்று அவர்கள் நிபந்தனை விதித்து இருந்தனர்.

கடத்தப்பட்ட பணயக் கைதிகள் தங்களைக் காப்பாற்றும்படி கதறும் காட்சியை அல் அரேபியா தொலைக்காட்சி ஒளிபரப்பியது. கடத்தப்பட்ட 3 இந்தியர்களையும் மீட்க இந்திய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில், தீவிரவாதிகள் புதுப்புது நிபந்தனைகளை விதித்து வருகிறார்கள்.

ஈராக்கில் உள்ள குவைத் நிறுவனத்தினர் அனைவரும் 48 மணிநேரத்துக்குள் வெளியேற வேண்டும். அதுமட்டுமின்றி அமெரிக்காவிலும் குவைத்திலும் உள்ள சிறைகளில் உள்ள கைதிகளை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கப் படையின் தாக்குதலுக்குப் பலியானவர்கள் குடும்பத்துக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் அவர்கள் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

இந்த பதிய நிபந்தனைகளை முகமூடி அணிந்த தீவிரவாதி ஒருவர் 7 பிணைக் கைதிகள் முன்னிலையில் வாசிப்பதை அல் ஜெஸீரா தொலைக்காட்சி நேற்று ஒளிபரப்பியது.

தீவிரவாதிகளின் இந்தப் புதிய நிபந்தனைகளால் பணயக் கைதிகள் பிரச்சினையில் சிக்கல் மேலும் அதிகரித்துள்ளது. தீவிரவாதிகள் இப்போது ஈராக்கில் உள்ள எகிப்து தூதரக அதிகாரி ஒருவரையும் கடத்திச் சென்றுவிட்டனர். அந்த அதிகாரியுடன் கறுப்புக்கொடிகள் என்ற தீவிரவாத இயக்கத்தினர் முகமூடியுடன் நிற்கும் வீடியோ ஒளி நாடாவை அல் ஜெஸீரா தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

இதற்கிடையில், பணயக் கைதிகளை விடுவிக்க தீவிரவாதிகளின் கோரிக்கைகளை ஏற்கத் தயாராக இருப்பதாக குவைத் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(ஒ)

## 2 ஆயிர[illegible] அமெ. வீரர் ஈராக்கில் உயிரிழப்பு?

ஈராக்கில் பாதுகாப்புப் பணியிலும் மறுசீரமைப்புப் பணியிலும் அமெரிக்க வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் இதுவரை 900 அமெரிக்க வீரர்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆனால் இதுபற்றி ரஷ்யா கூறும்போது இதுவரை 2 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். 12 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் காயம் அடைந்து இருக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளது.

உலக அரங்கில்

# இராஜதந்திரி கடத்தப்பட்டதால் ஈராக்குக்கு உதவ எகிப்து மறுப்பு

கெய்ரோ,ஜூலை25

எகிப்திய இராஜதந்திரி ஒருவர் ஈராக்கில் தீவிரவாதிகளால் பணயக்கைதியாகப் பிடித்துச் செல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து ஈராக்குக்கு இராணுவ உதவி வழங்கப்போவதில்லை என்று எகிப்து அறிவித்துள்ளது.



தீவிரவாதிகளிடம் பணயக் கைதியாக எகிப்திய இராஜதந்திரி

ஈராக்கிய அரசுக்கு இராணுவ உதவி வழங்கப்போவதாக முன்னர் எகிப்திய அரசு தெரிவித்திருந்தது. இந்த நிலையில் எகிப்திய இராஜதந்திரி மொஹமட் மம்துகுத்ப் ஈராக்கில் நேற்றுமுன்தினம் மாலை மசூதியில் தொழுகை முடித்துவிட்டு வரும்போது தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அல்லா படையணிச் சிங்கங்கள் என்ற அமைப்பு இந்தக் கடத்தலுக்கு உரிமை கோரியுள்ளது.

ஏற்கனவே ஈராக்கில் பணியாற்றிய இரு எகிப்தியர்கள் பணயக் கைதிகளாகத் தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்டு அவர்களில் ஒருவர் சிலதினங்களுக்கு முன் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில் எகிப்திய இராஜதந்திரி கடத்தப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்தே ஈராக்குக்கு இராணுவ உதவி எதனையும் வழங்கப்போவதில்லை என்று ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் அஹமட் அபுல்கெய்ட் நேற்று அறிவித்துள்ளார்.

ஈராக்கிய இடைக்காலப் பிரதமர் இயட் அல்லவி கடந்தவாரம் எகிப்துக்கு விஜயம் மேற்கொண்டார். அப்போது ஈராக்கியப் படையினருக்கு எகிப்திய இராணுவத்தினர் பயிற்சியளிப்பது தொடர்பாக அவர் எகிப்திய அதிபருடன் பேச்சுநடத்தினார். இதுவே எகிப்தியர்களை ஈராக்கிய தீவிரவாதிகள் கடத்துவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து ஈராக்கில் சுமார் 12 வெளிநாட்டவர்கள் பணயக் கைதிகளாகப் பிடித்துச்செல்லப்பட்டனர். ஆனால் வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் கடத்தப்பட்டமை இதுவே முதற்றடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# உலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்க நெடுமாறனுக்கு நீதிமன்று அனுமதி

சென்னை,ஜூலை25

இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெங்களூரில் இன்று நடைபெறவுள்ள உலகத் தமிழர் பேரவையின் இரண்டாம் மாநாட்டில் பங்கேற்க உலகத் தமிழர் கூட்டமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் உட்பட 3 பேருக்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட நெடுமாறன், சுப.வீரபாண்டியன், தாயப்பன், சாகுல் ஹமீட் ஆகியோர் பின்னர் நிபந்தனைப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பெங்களூரில் நடைபெறும் உலகத்தமிழர் பேரவையின் மாநாட்டில் பங்கேற்க அனுமதி கேட்டு சாகுல் ஹமீட் தவிர மற்றவர்கள் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல்செய்தனர். தொழில் விடயமாக டில்லி செல்ல அனுமதி கேட்டு சாகுல் ஹமீட் மனு தாக்கல் செய்தார்.

நீதிபதிகள் பி.டி.தினகரன், என்.கண்ணதாசன் ஆகியோர் இம்மனுக்களை நேற்றுமுன்தினம் விசாரித்தனர்.

நெடுமாறன் பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது என்று விதிக்கப்பட்ட நிபந்தனையை நீதிபதிகள் நீக்கினர். நெடுமாறன் உட்பட 3 பேர் 24, 25, 26 ஆகிய திகதிகளில் பெங்களூர் சென்றுவர அனுமதி அளித்தனர்.

டில்லி சென்று வர சாகுல் ஹமீட்டுக்கு ஒரு வாரத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது. (ஒ)

# இந்திய அமைச்சரவையிலிருந்து பதவி விலகினார் சிபுசோரன்

புதுடில்லி,ஜூலை25

இந்திய மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் சிபுசோரன் மத்திய அமைச்சரவையிலிருந்து பதவி விலகினார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் நடந்த கொலை ஒன்று தொடர்பாக சிபுசோரன் மீது ஜார்க்கண்ட் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு அவர் எங்கு உள்ளார் என்று இதுவரை தெரியவில்லை.

இதற்கிடையே அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யுமாறு சிபுசோரனுக்கு பிரதமர் மன்மோகன் சிங் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டிருந்தார்.

பிரதமரின் உத்தரவையடுத்து ஜார்க்கண்ட் கட்சித் தலைவர்கள் கூடி விவாதித்தனர். சிபுசோரன் பதவி விலக வேண்டும் என்பது மிக வேதனையளிக்கும் முடிவாகும். இருப்பினும் பிரதமரின் ஆணைப்படி இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ)

# தமிழை அழிக்கவேண்டுமென்றே திரைப்படங்களை எடுக்கிறார்கள்

## பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் சாடல்



தமிழை அழிக்கவேண்டும் என்றே திரைப்படம் எடுக்கிறார்கள் என்று தமிழ்த் திரையுலகினரைச் சாடியுள்ளார் தமிழகத்தின் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் டாக்டர் ராமதாஸ்.

இதுதொடர்பாக அவர் நேற்றுச் செய்தியாளர் சந்திப்பொன்றில் கூறியதாவது:-

சினிமாவில் உள்ள பலர் அரசியலில் உள்ளனர். அவர்கள் மீது கோபப்படவில்லை. சினிமா புகழை வைத்துக்கொண்டு அரசியலில் நுழையப் பார்க்காதீர்கள் என்று சினிமாக்காரர்களே கூறியுள்ளனர். குறிப்பிட்ட நடிகர்களை எதிர்க்கும் நோக்கம் எங்களுக்கு இல்லை. சினிமா ஒட்டுமொத்த தமிழ் மக்களை சீரழிக்கிறது. நம் மொழி, கலாசாரம் பற்றி இவர்கள் கவலைப் படுவது இல்லை.

ரெட், சன், டைம், டுயட், பாய்ஸ், விசில், ஸடார், பிளாஸ் டூ, ஐ லவ்யூ, மிஸ்டரி, வின்னர், ஜங்ஷன், சிட்டிசன், குட்லக், சாக்லெட், ஜூன்ஸ், பிரண்ட்ஸ், அல்பம், ஒன்ஸ்மோர், யுனிவர்சிட்டி, ஒன் டு த்ரி, 12-பி, பைவ் ஸ்டார், லவ்பேர்ட்ஸ், ஹவுஸ்புல், பாப்கார்ன், பிக்பாக்கட், ஜென்டில்மன், தரி ரோஸஸ், டார்லிங் டார்லிங் டார்லிங், ஐ லவ் இண்டியா, ஆனஸ்ட்ராஜ், ஜூனியர் சீனி யர், ஐலவ்யூடா, சவுண்ட் பார்ட்டி இப்படி ஏறக்குறைய எனக்குத் தெரிந்து 54 படங்கள் உள்ளன. தமிழை அழிக்கவேண்டும் என்ற திட்டமிட்ட சதிதான் இது. படிக்காத 30 சதவீதம் பேருக்குத்தான் படம் எடுக்கிறார்கள். அப்புறம் எதற்கு ஆங்கிலம். வசனங்களில் கூட நிறைய ஆங்கிலத்தில்தான் பேசுகிறார்கள்.

வன்முறையும் ஆபாசமும் உள்ளன. பாடல்களிலும் ஆபாசம், வக்கிரக உணர்வை ஏற்படுத்துவதில் போட்டா போட்டி உள்ளது. பணம் பண்ணுவதுதான் இவர்கள் குறிக்கோள்.

வேலை இல்லாத இளைஞர்கள் நடிகர்களின் பதாகைகளைத் தூக்கிக்கொண்டு திரிகிறார்கள். அவர்கள் சக்தி வீணடிக்கப்படுகிறது. அதைப்பற்றிய கவலைதான் எங்களுக்கு. வேறு தகராறு இல்லை.

இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார். (ஒ)

# உலகில் சிறிய உயிரினம்!

உலகில் முள்ளந்தண்டு உடைய உயிரினங்களில் மிகச் சிறியதும் மெல்லியதுமான உயிரினத்தை இனங்கண்டுள்ளனர் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியக் கடல் ஏரிகளில் காணப்படும் ஒருவகை மீனினத்தின் குஞ்சுகளே உலகில் சிறியதும், மெல்லியதுமான எலும்புள்ள உயிரினம் என்று அவர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.



இந்த மீனினம் 8.4 மில்லி மீற்றர் நீளம் வரையே வளருகின்றன. இந்த மீன் இனத்தின் குஞ்சுகள் சாதாரண பென்சிலின் தடிப்பை விட நீளம் குறைந்தவை. இந்த மீனினம் இரண்டு மாதங்கள் வரையே ஆயுள்காலம் கொண்டவை.

ஆஸ்திரேலிய அருங்காட்சியகம் ஒன்றைச் சேர்ந்த ஜெவ்லீஸ் என்ற ஆய்வாளர் 1979 ஆம் ஆண்டு இந்த மீனினம் குறித்து முதன்முதலில் தகவலை வெளியிட்டார். அதன் அடிப்படையில் ஆய்வு நடத்திய அமெரிக்க விஞ்ஞானிகளான எச்.ஜே.வோக்கர், வில்லியம் வாட்சன் ஆகியோர் இந்த மீனினம் குறித்த விவரங்களை வெளியிட்டுள்ளனர்.

# அரபாத் நிர்வாகத்துக்கெதிராக பலஸ்தீன அமைப்பு போர்க்கொடி

ரமழா,ஜூலை25

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன நிர்வாகத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பலஸ்தீனத் தீவிரவாதிகள் காஸாவில் உள்ள பலஸ்தீன நிர்வாகக் கட்டடங்களைத் தாக்கிவருகின்றனர்.

கடந்த ஒரு வாரகாலமாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பலஸ்தீனத் தீவிரவாதிகள், பலஸ்தீனப் பாதுகாப்புத்துறையை யஸீர் அரபாத் மறுசீரமைப்புச் செய்ய வேண்டும் என்று கோரிவருகின்றனர். யஸீர் அரபாத்தின் பதாஹ் அமைப்புக்கு நெருக்கமான அல் அகுஸா மாவீரர் படையணியினரே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அதிகம் பங்கேற்கின்றார்கள் என்று கூறப்படுகிறது.

பலஸ்தீனப் பாதுகாப்புத் துறையில் ஊழல் மலிந்துவிட்டதாகவும் - இதனைக் கட்டுப்படுத்த பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் தவறிவிட்டார் என்றும் -

பலஸ்தீனத் தீவிரவாதிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பலஸ்தீனப் பிரதமர் அஹமட் குவாரி ஒரு வாரத்துக்கு முன்னர் தனது பதவிவிலகல் கடிதத்தை அரபாத்திடம் சமர்ப்பித்தார். இதனை அடுத்தே தீவிரவாதிகள் தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்தனர். ஆனாலும், யஸீர் அரபாத்தின் வேண்டுகோளை அடுத்து தொடர்ந்து பிரதமராகப் பதவிவகிக்க அஹமட் குவாரி இணங்கினார்.




கான்யூனுஸ் ஆளுநர் அலுவலகத்தில் தீவிரவாதிகள்.

இந்நிலையில் பலஸ்தீனப் பாதுகாப்புப் படையினருடன் பலஸ்தீனத் தீவிரவாதிகள் காஸாவில் மோதல்களில் ஈடுபட்டார்கள்.

யஸீர் அரபாத்தின் நெருங்கிய உறவினரான மெளசா அரபாத் என்பவர் பாதுகாப்புத்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அஹமட் குவாரி பதவி விலகினார் என்று கருதப்படுகிறது. மௌசா அரபாத் பாதுகாப்புத்துறைத் தலைமைப் பொறுப்பிலிருந்து பின்னர் விலக்கப்பட்டமை இதனை உறுதிப்படுத்தியது.

ஆனாலும், மௌசா அரபாத் பதவி விலக்கப்பட்டமை போதாதென்றும் -

அவர் காஸாப் பகுதிப் பாதுகாப்புக்கு பொறுப்பாளராகத் தொடர்கிறார் என்றும் - பலஸ்தீனத் தீவிரவாதிகள் கூறுகின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் சுவைடா நகரப் பொலீஸ் நிலையத்தை தீவிரவாதிகள் தாக்கித் தீக்கிரையாக்கினார்கள். கான் யூனுஸ் நகர ஆளுநர் அலுவலகத்தையும் அவர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

பலஸ்தீனப் பாதுகாப்புப் படையிலிருந்து மௌசா அரபாத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று பலஸ்தீன அதிகாரிகள் உறுதிமொழி வழங்கியதையடுத்து பொலீஸ் நிலையத்தை விட்டுத் தீவிரவாதிகள் நேற்றுக் காலை விலகினார்கள். அதேவேளை, காஸாப் பகுதியில் தீவிரவாதிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

(ஒ)

உதயன்

## சாத்தான் ஓதும் வேதம்....

கறுப்பு ஜூலை கொடூரத்தின் நினைவழியா நாள்கள் இவை.

இந்தச் சந்தர்ப்பத்தில் கறுப்பு ஜூலையை நினைவு கூரும் கருத்துகளை இந்த நாட்டின் தலைவி வெளியிட்டு வருகின்றார்.

அதிலும் கூட, முன்னுக்குப் பின் முரணாக - நாளொரு பேச்சு பொழுதொரு கூற்றாக - கருத்து வெளியிடும் தமது பண்பையும், போக்கையும் அவர் கைவிடவில்லை.

கடந்த வியாழனன்று கண்டி கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உரையாற்றும்போது, 1983 ஜூலைக் கலவரத்தை அவர் தனது அரசியல் எதிரிகளான ஐ.தே.கட்சியைத் தாக்குவதற்கு நன்கு பயன்படுத்தினார்.

1983 ஜூலைக் கலவரம் அரங்கேற்றப்பட்டபோது ஐ.தே.கட்சி அரசு ஆட்சிப் பீடத்தில் இருந்தது. என்றாலும் அந்தக் கலவரத்தையும், கொடூரத்துக்கான பொறுப்பையும் ஒரு தனி அரசியல் கட்சிமீது சுமத்திவிட்டு சிங்களம் தப்பிவிட முடியாது. அது அரச பயங்கரவாதத்தின் (State Terrorisim) வெளிப்பாடு.

அரச பயங்கரவாதத்துக்கான பொறுப்பை ஏற்று மன்னிப்புக் கேட்பதாயின் அரசுத் தலைமையே அதைச் செய்யவேண்டும். தார்மீக அடிப்படையில் அப்போதைய அரசில் இருந்த அணியை மன்னிப்புக்கோரும்படி கேட்பது வேறு விடயம். ஆனால், தவறுக்குப் பொறுப்பேற்று, தமிழினத்தின் முன் மண்டியிட்டு, மன்னிப்புக் கேட்க வேண்டியது சிங்கள அரசுத் தலைமையேயன்றி ஒரு கட்சித் தலைமை அல்ல.

ஆனால், வியாழனன்று கண்டியில் உரையாற்றிய ஜனாதிபதி, தமிழர் மீது 83 இல் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் மற்றும் பேரழிவுகளுக்காக அதனுடன் சம்பந்தப்பட்ட அரசியல் குழுவினரும், தலைமைத்துவமும் தமிழ்மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும் என்று குறிப்பிட்டு எதிரணி மீது, சேறு அள்ளிப்பூசும் தமது வழமையான கைங்கரியத்தை இந்த விடயத்திலும் தப்பாது காட்டிக்கொண்டார்.

ஆனால், நேற்றுமுன்தினம் தமது ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஆள்களில் ஒருதொகுதியினருக்கு நஷ்டஈடு வழங்கும் வைபவத்தில் உரையாற்றும்போது தனது சுருதியை மாற்றிக்கொண்டார்.

"தவறு செய்தது யார், எப்போது செய்தார்கள் என்பதை ஆராய்வதை விட இப்படியான தவறு மீண்டும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே புத்திசாலித்தனம். இன வன்முறையின்போது பாதிக்கப்பட்ட மக்களிடம் அதனோடு தொடர்புடையவர்கள் மன்னிப்புக்கேட்க வேண்டியது மனிதாபிமானமுமாகும்.

அரசின் தலைவி என்ற முறையில் நான் அவர்களிடம் மன்னிப்புக் கேட்பதற்குத் தயங்கவில்லை" - என்று கூறியிருக்கிறார் ஜனாதிபதி.

வெளிப்பார்வைக்கு ஜனாதிபதியின் பேச்சு பகட்டாகவும், கவர்ச்சியாகவும் இருக்கின்றது. ஆனால், அது உள்ளத்து எண்ணத்திலிருந்து - அடிமனதில் இருந்து - வெளிப்பட்டதா என்பதே தமிழர்களின் நெஞ்சை நெருடும் கேள்வியாகும்.

"1983 ஜூலைக் கலவரம் போன்ற வன்முறைகள் மீண்டும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே புத்திசாலித்தனம்" என்று அவர் கூறுவது உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறும் கூற்றாகவே தமிழர் நெஞ்சைத் தைக்கின்றது.

தாம் புத்திசாலித்தனம் என்று குறிப்பிடும் மார்க்கத்தில் அவர் செயற்படவில்லை என்பது ஊரறிந்த உண்மை.

இன வன்முறையும், யுத்தமும், பேரழிவும் இனிமேலும இந்த நாட்டில் இடம்பெறாமல் இருக்கவேண்டுமானால் இந்த நாட்டையே குட்டிச்சுவராக்கியிருக்கும் இனப் பிரச்சினைக்கு அமைதிமுறையில் - சமாதான வழியில் - நிரந்தரத் தீர்வு ஒன்று காணப்படவேண்டும்.

2001 டிசெம்பரில் அதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் பேராசை காரணமாக இதே ஜனாதிபதி சிங்களப் பேரினவாதத்துடன் கூட்டுச்சேர்ந்தார். அமைதிமுறையில் - விட்டுக்கொடுத்து - பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி வளர்த்து - அதன்மூலம் ஈழத்தமிழரின் நியாயமான அபிலாசைகளை நிறைவுசெய்யும் தீர்வு ஒன்று கிட்டும் வாய்ப்புக்கு அவர் வேட்டு வைத்தார். அமைதி முயற்சியில் ஈடுபட்ட அரசைக் கலைத்தார். அமைதி முயற்சிப் போக்கை அடியோடு எதிர்க்கும் பேரினவாதிகளை அணிதிரட்டி தமது பக்கம் சேர்த்துக் கொண்டார். அவர்களைச் சேர்த்துக்கொண்டு அரசைக் கைப்பற்றி அவர்களையும் அதிகாரபீடத்தில் ஏற்றினார். இதன்மூலம் சமாதான முயற்சிகளை பேராபத்துக்குள் மூழ்கடித்து இலங்கையின் எதிர்காலத்தையே கேள்விகுள்ளாக்கினார்.

போராபத்தை வருந்தி வரவழைத்திருக்கின்றார்.

பெரும் யுத்தத்துக்கும், வன்முறைகளுக்கும் வழி செய்யும் சூழலுக்குள் நாட்டையும், மக்களையும், எதிர்காலத்தையும் இழுத்து விட்டுவிட்டு, வன்முறை ஏற்படாத நிலையை உறுதிசெய்து கொள்வதே புத்திசாலிததனம் என்று அவர் தத்துவம் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதைத் போன்றதே என்று கொள்ள வேண்டி உள்ளது.

அரசின் தலைவி என்ற முறையில்

# கறுப்பு ஜூலை வன்முறைகளுக்காக மன்னிப்புக் கேட்கத் தயங்கவில்லை

## நஷ்டஈடு வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி சொல்கிறார்

கொழும்பு,ஜூலை25

தவறு செய்தவர் யார் எப்போது என்று ஆராய்வதைவிட, இப்படியான தவறுகள் மீண்டும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதே புத்திசாலித்தனம்.

கறுப்பு ஜூலை வன்முறையின்போது பாதிக்கப்பட்ட மக்களிடம் அதனோடு தொடர்புடையவர்கள் மன்னிப்புக்கேட்க வேண்டியது மனிதாபிமானமாகும். அரசின தலைவி என்ற முறையில் நான் அந்த மக்களிடம் மன்னிப்புக் கேட்பதற்குத் தயங்கவில்லை. மன்னிப்புக் கேட்பதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் மனதில் சிறிதளவாவது சாந்தியை ஏற்படுத்த முடியும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இன வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடுகளை வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

83 இன வன்முறைகள் குறித்து, ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் சர்வானந்தா தலைமையிலான உண்மை அறியும் குழு விசாரணைகளை நடத்தியது. அதன் சிபார்சுகளுக்கு அமையப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்குகின்றது.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து விண்ணப்பித்தவர்களுள் பாதிக்கப்பட்டதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்த 939 குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க இக் குழு சிபார்சு செய்திருந்தது.

அவர்களுள் தெரிவுசெய்யப்பட்ட 30 நபர்களுக்கான நஷ்டஈட்டுக் காசோலைகளை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் வழங்கின்ார். ஏனையவர்களுக்கு ஓகஸ்ட் மாத இறுதிக்குள் காசோலைகள் வழங்கப்பட்டுவிடும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இருபது வருடங்களின் முன் இனக் கலவரம் ஏற்பட்டபோதும் அதனால் ஏற்பட்ட பலாபலன்களை இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

இன வன்முறைகளை எந்தச் சமயமும எந்தச் சமூகமும் வரவேற்பதில்லை. கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை மறப்போம். நாளைய இலங்கையில அனைத்து இன, மத மக்களும் ஐக்கியததுடனும் பரஸ்பர நம்பிக்கையுடனும் வாழ வேண்டும். அத்தகைய ஐக்கிய இலங்கையைக் கட்டி எழுப்புவோம்.

அடுத்த ஆண்டு முதல் கறுப்பு ஜூலை தினத்தை இனநல்லிணக்கத் தினமாகவும துக்கதினமாகவும் அனுஷ்டிப்போம். அனைத்து இனமக்களும் ஐக்கிய இலங்கைக்குள் சமாதானத்துடன் வாழ ஒன்றுபடுவோம்.

இன வன்முறையினால் நாட்டின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதிசிறந்த மூளைசாலிகள் 18ஆயிரம் பேர் நாட்டைவிட்டு வெளியேறி உள்ளனர். இது எமது நாட்டிற்கு ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

கலவரத்தால் அதிகளவு வன் முறைகள் இடம்பெறும் நாடுகளில் ஒன்றாக இலங்கையும் சேர்க்கப்பட்டது எமக்குப் பெரிதும் இழுக்கைத் தேடித் தந்துள்ளது.

இப்பொழுது நாம் வழங்கி உள்ள நஷ்டஈடுகளால் ஏற்பட்ட பாதிப்புக்களை ஈடுசெய்ய முடியாது என்பதை நான் அறிவேன். என்றாலும் இத்தகைய சிறிய தொகையையாவது வழங்க முடிந்ததே என்று ஓரளவாவது திருப்தி அடைகிறோம் - என்றார்.

இந்த வைபவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஏ.எல்.எம். அதாவுல்லா, பேரியல் அஷ்ரப், லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரும் கலந்து கொணடனர். (எ-க)

### வகுப்பறைகள் நிர்மாணிப்பு

தென்மராட்சி, கல்வி வலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகளில் ஆரம்பக் கல்வித் திட்டத்தின் கீழ் வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன.

கைதடி எருதிடல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம், இயற்றாலை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை, மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றில் புதிய வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளன.

மாகாணக் கல்வி அமைச்சினால் இக்கட்டட நிர்மாணங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(எ-117)

## ஆயுள்வேத வைத்தியர்களுக்கு ஓய்வூதியம்; தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கை

வலிமேற்கு,ஜூலை25

நாடு முழுவதிலும் உள்ள ஆயுள்வேத வைத்தியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை சுதேச வைத்திய அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் டபிள்யு ஏ.கருணசேனா தனிச் சிங்களத்தினாலான சுற்றறிக்கையொன்றையும் ஆயுள்வேத வைத்தியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சுய விவரப் படிவங்களையும் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும், உதவி அரசஅதிபர் பணிமனைகளுக்கும் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பின்றி இந்த தனிச் சிங்களத்தினாலான சுற்றறிக்கைகளும், படிவங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த சுற்றறிக்கையினையும் சுயவிவரப்படிவங்களையும் வாசித்து விளங்கிக் கொள்வதில் சம்பந்தப்பட்ட அலுவலக அதிகாரிகள் திண்டாடுவதாகக் கூறப்பட்டது.

தனிச் சிங்களத்தினாலன படிவங்களை ஆயுள்வேத வைத்தியர்கள் எவ்வாறு பூரணப்படுத்த முடியும் என்றும் - அதிகாரிகள் வினா எழுப்பியுள்ளனர்.

தமிழ்மக்களின் உரிமைக்கான போராடடம் வலுவடைந்திருக்கும் இந்தக் கால கட்டத்தில் சில அமைச்சின் செயலாளர்கள் தனிச்சிங்களத்தில் சுற்றறிக்கைகளை அனுப்பி வைப்பது கடந்த பல வருடங்களாக தொடர்கதையாக உள்ளது என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சின் செயலாளர்களின் இந்த நடவடிக்கையினை நிறுத்துவதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-175)

பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோரின் வழியில்

# திரைப்படங்கள் மூலம் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்

## புதிய படத்தொடர்விழாவில் வை.கோ. அறிவுறுத்து



சென்னை,ஜூலை25

திரைப்படங்கள் மூலம் கலைஞர் கருணாநிதியும் பேரறிஞர் அண்ணாவும் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

அவர்களின் வழியில் திரையுலகினையும் அதன் மூலம் சமுதாயத்தையும் வளர்த்தெடுப்பதற்கு ஏனையோரும் பாடுபடவேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி.

கலைப்புலி எஸ்.தாணுவின் வி.வி.கிரியேன்ஸ் தயாரிக்கும் புதிய படம் தொட்டிஜெயா அதன் தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

துரை இயக்கும் இந்தப்படத்தில் சிம்புவும் கோபிகாவும் இணைந்து நடிக்கிறார்கள். இந்தப் படத்தின் ஆரம்பவிழா கடந்த 22ஆம் திகதி சத்யம் திரையரங்கில் நடந்தது.

இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர் ஆகியோர் குத்துவிளக்கேற்றி படத்தைத் தொடக்கி வைத்தனர். விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ. தொடர்ந்து பேசியதாவது:-

தமிழகத்தின் கலை உலகத்திற்கு நிகரான கலை உலகம் வேறெந்த மாநிலத்திலும் இல்லை.

நான் ஒரு நல்ல ரசிகன். தமிழ் திரைபடங்களைப் போல ஹொலிவுட் திரைப் படங்களையும் விரும்பிப் பார்ப்பேன். ஹொலிவுட்டை விட திறமையான நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள்.

ஸ்ரீதர், பீம்சிங், பாலச்சந்தர், பாரதிராஜா வரிசையில் இப்போது பல இளம் இயக்குநர்கள் திரை உலகத்தில் இருக்கிறார்கள். ஜப்பான், சீனாக்காரர்களால் முடியாத சிம்பொனி இசையை தமிழன் இளையராஜா தான் அமைத்தார் என்பதில் நான் பெருமை அடைகிறேன்.

தமிழ் நாட்டு கம்யூட்டர் பொறியியலாளர்களை அமெரிக்கா விரும்பி அழைபபதைப் போல தமிழ் திரைப்பட வல்லுநர்களையும் ஹொலிவூட் விரும்பி அழைக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

எனது துன்பத்தில், துயரத்தில் பங்கேற்றவர் தாணு. எனது உயிர் நண்பர். அவர் எங்களுக்கு இருக்க இடம் தந்து எனது வாழ்விலும், துயரத்திலும் உடனிருந்தவர். அவர் தயாரிக்கும் இந்தப்படம் வெற்றிபெற வேண்டும். அவர் வெற்றி பெற்றால் ஆயிரம் குடும்பங்கள் வாழும். வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாதவர் அவர்.

இதில் சிம்பு கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்தின் வெற்றி விழாவில் ஒரு ஓரத்தில் அமர்ந்து நான் ரசிக்க வேண்டும்.

திரையுலகில் அறிஞர் அண்ணா மாற்றத்தைக் கொண்டுவந்தார். தமிழை கலைஞர் உச்சிக்குக் கொண்டு சென்றார்.

பேரறிஞர் அண்ணா தனது படங்கள் மூலம் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தியவர். தனது அனலும் புனலும் நிறைந்த திரைப்பட வசனங்களால் சமுதாய மாற்றத்தை உருவாக்கி அதனை உச்சிக்குக் கொண்டு சென்றவர் கலைஞர்.

எழுச்சியூட்டும் துடிப்பால் உணர்ச்சியூட்டியவர் இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்கள் இன்றைக்குத் திரை உலகில் இருக்கும் இளைஞர்களும் தங்களது திறமையால் திரைப்படத்தின் மூலம் சமுதாய மாற்றத்துக்குப் பாடுபடவேண்டும்.

கலை உலகத்தின் மூலம் நாட்டுக்குத் தேவையான மாற்றங்களை கொண்டுவர வேண்டும். சமூகத்துக்கு பயன்படும் வகையில் கலை உலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### நாளை

ஆடி 11
திங்கட்கிழமை
(26.07.2004)
திதி : நவமி
பி.ப. 2.32 வரை.
நட்சத்திரம்: விசாகம்
பின்னிரவு 12.30 வரை.
சுபநேரம்: 12.02 - 1.32
ராகுகாலம்: 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆசையின்மையே தலைசிறந்த செல்வம்.

## துயரத்தைப் பகிர்ந்திடுவோம்



கைதடி சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகரும் அஷ்டலஷ்மி நிறுவன உரிமையாளருமான

**குலபதி ஆறுமுகம் கந்தையா ஜே.பி.**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருடைய துயரத்தைப் பகிர்ந்து கொள்வதுடன் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
**பிக்பென்ஸ் புத்தகசாலை,**
(34551) (33-26-16-12) கிளிநொச்சி.



உ

ஊர்காவற்றுறை - பருத்தியடைப்பு
ஸ்ரீ கதிரேசன் கோயில்

**மண்டலாபிஷேகப் பூர்த்தியும்**
**திருக்கல்யாண வைபவமும் தெப்பத் திருவிழாவும்**

*அடியார்களே!*

இன்று (25-07-2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகம். மாலை திருக்கல்யாணம் நடைபெற்று -

22 வருடங்களுக்குப் பின் தெப்பத் திருவிழா
ஊர்காவற்றுறைக் கடலில் இடம்பெறுகிறது.

உற்சவகுரு:
எழுதுமட்டுவாழ் சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள்
பிரம்மஸ்ரீ நா.கலாதர சர்மாவினால் நடைபெற்று வந்த
குமாரசம்பவம் தொடர் சொற்பொழிவுப் பூர்த்தியும்
இன்று இடம்பெறும்.
*அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!*

(34545) (33-26-16-12) - ஆலய பரிபாலனசபையினர்.



## தசாகக் கிரியையும் சபிண்டிகரண அழைப்பும்

மண் மகிழ 02 - 03 - 1944



கண் நெகிழ 17 - 07 - 2004

அமரர் ஸ்ரீலஸ்ரீ

**கைலாயக்குருக்கள் நமசிவாயக்குருக்கள்**

(பண்டிதர், ஓய்வுபெற்ற ஆசிரியர், பீடாதிபதி - சைவக்குருமார் அர்ச்சகர் சபை, சோதிடர்)

அவர்களின் தசாகக் கிரியைகள் நாளை (26.07.2004) திங்கட்கிழமை காலை 8 மணிக்கும் சபிண்டிகரணம் 27.07.2004 செவ்வாய்க்கிழமை பகல் 12.00 மணிக்கும் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் பங்குகொண்டு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (34550)(33-34-26-16-12)

திருமதி
**பு.நமசிவாயக்குருக்கள்**
**பிள்ளைகள்.**



## மரண அறிவித்தல்

**குலபதி கலாநிதி**
**ஆறுமுகம் கந்தையா B.A.**



*(கைதடி சைவச் சிறுவர் இல்ல ஸ்தாபகரும், அஷ்டலஷ்மி நிறுவன உரிமையாளரும், சமாதான நீதிவானும்)*

கைதடி கிழக்கைச் சேர்ந்தவரும் 320, செட்டித் தெரு, கொழும்பு 11ஐ வசிப்பிடமாகக் கொண்டவருமான குலபதி கலாநிதி ஆறுமுகம் கந்தையா அவர்கள் 21.07.2004 புதன்கிழமை இந்தியாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் செல்வப் புதல்வனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சிவமணி, காலஞ்சென்ற சிவகௌரி மற்றும் சிவகலா, சிவசக்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் முரளிதரன், குணசீலன் ஆகியோரின் அன்பு மாமனும் நிவேதிகா, நிருசியா, அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் அம்பலவாணர் பறுபதத்தின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை பொறளை மன்னம்பரி மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 26.07.2004 திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சன்னதி இல்லம்",*
*கைதடி கிழக்கு, கைதடி.*
*T.P.:0602213226* (சி-36347)(34-26-16-12)

தகவல்:
ச.வரதராசா (மருமகன்)
நகரசபை சாவகச்சேரி.


## சமய சந்நிதிகளில்

சங்கானை,ஜூலை25

சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 21ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் அடுத்தநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (10-29-204)

★ ★ ★

குருநகர்,ஜூலை25

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் 143ஆவது வருட நிறைவுத் திருவிழாத் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை காலை 6மணிக்கு முதலாம் திருப்பலியும் தொடர்ந்து 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் நடைபெறும். அன்றுமாலை 6 மணிக்கு புனிதரின் திருச்சொரூபப் பவனி குருநகரிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட வீதிகள் ஊடாக நடைபெறும். திருச்சொரூப பவனியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (10-51)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை25

இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் 125ஆவது ஆண்டு யூபிலித் திருவிழாத் திருப்பலி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர்கள், குழுக்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள் ஆகியோர் திருவிழாத் திருப்பலியில் கலந்து கொள்வார்கள்.

திருப்பலியின் நிறைவில் புனித யாகப்பர் ஆலய 125ஆவது ஆண்டுவிழா மலர் வெளியீடும் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு நாட்டுக்கூத்து மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (8)

## சிரமதான நிகழ்வு

வரணி,ஜூலை25

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வரணி பொது நூல் நிலைய வளாகத்தில் சிரமதான நிகழ்வொன்று நடைபெற்றது. நூலகர் வ.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் கனகதுரை, தொழில் நுட்ப அலுவலர் க.சபாபதிப்பிள்ளை, ஆசிரியர் செ. நவரட்ணசாமி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

வரணி மகாவித்தியாலய மாணவர்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். (10-170)

## கரவெட்டியில் வீரமுரசம் நிகழ்வு

வடமராட்சி,ஜூலை25

வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையால் இன்று ஞாயிற்றுக்கிழமை 6 மணிக்கு கரவெட்டி ராஜகிராமத்தில் 'வீரமுரசம்' நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்வர்.(எ-7-173)

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை25

போரினால் பாதிக்கப்பட்ட புங்குடுதீவுப் பிரதேச மாணவர்களுக்கு தெய்வக் குழந்தை இல்லத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை காலை புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாக மங்கள விளக்கினை புங்குடுதீவுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் வி. இசைச்செல்வன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பவராசா, சமாதான நீதிவான் எஸ்.பொன்னம்பலம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனையடுத்து சிறப்புரைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து புங்குடுதீவு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கற்றல் உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வு பாடசாலையின் உப அதிபர் செல்வி த.ஜுவகலா தலைமையில் நடைபெற்றது. (10-7)


## சுகாதாரப் பொதிவழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை25

வறிய சிறுவர்களுக்கும், பெற்றோர்களுக்குமான 'சுகாதாரப்பொதி' வழங்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கில் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையாவும், சிறப்புவிருந்தினர்களாக ஆய்வு உத்தியோகத்தர் செல்வி ஏ.விஜயகுமாரியும், மானிப்பாய் பதில் சுகாதார வைத்தியப் பொறுப்பதிகாரி வி.கே. வர்ணநாதனும், வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசச் செயலாளர் க.திருநாவுக்கரசுவும் கலந்துகொள்வர்.

மேற்படி 'சுகாதார பொதி' உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 125பேருக்கு வழங்கப்படவுள்ளதாக உள்ளூராட்சி உதவியாளர் தெரிவித்தார். (எ-185)







இலங்கை மழைநீர் சேகரிப்பு அமையம் கட்டடத் தொழிலாளர்களுக்கு மழைநீர் சேகரிப்புத் தாங்கிகளை அமைப்பது தொடர்பான பயிற்சியினை திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பயிற்சி நிலையத்தில் அண்மையில் வழங்கியது. பயிற்சியில் கலந்துகொண்ட கட்டடத் தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட மழைநீர்த் தாங்கியை முதலாவது படத்திலும் மழைநீர் பயன்பாடு அமையத்தின் இணைப்பாளர் பி.எஸ்.சுஜித்சிரோபன், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை, இணையத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் ஆகியோர் தாங்கியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் பயிற்சிபெற்ற ஒருவருக்கு உதவி விவசாயப் பணிப்பாளர் சான்றிதழ் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*


மொரட்டுவ பல்கலைக்கழக
தமிழ் இலக்கிய மன்றம் வழங்கும்
**தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் மற்றும்**
**கணனியியல் கருத்தரங்கு**

உயர்தரப் பரீட்சைக்கு அடுத்த படிமுறை நகர்வைப் பற்றிய தெளிவின்மையை மாணவர் மத்தியில் நீக்கும் முகமாக, மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் Lions Clup ஆதரவுடன் மேற்படி முழுநாள் நிகழ்வை இரண்டாவது கட்டமாக தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் நடத்த ஒழுங்குசெய்துள்ளனர்.

**இந்நிகழ்வில்:**
★ குழுநிலை தொழில்சார் கற்கைநெறி வழிகாட்டல் (Career Guidence - Group Level)
★ குழுநிலை கணனியியல் கருத்தரங்கு (Group Discussion of Computing)
★ ஆற்றல் மேம்படுத்துகை விவாதம் (Skill Development Programme)

என்பன உள்ளடங்கும்.

நடைபெறும் பகுதிகள்

**தென்மராட்சி**
இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி
காலம்: 27-07-2004 செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 8.30 மணி
*பிரவேசம் இலவசம்.*

**வடமராட்சி**
இடம்: நடங்கன் புளியடி ஸ்ரீமுருகன திருமண மண்டபம், நெல்லியடி
காலம்: 28-07-2004 புதன்கிழமை
நேரம்: காலை 8.30 மணி
*பிரவேசம் இலவசம்.*

குறிப்பு:
பாடசாலை மாணவப் பிரதிநிதிகளுக்கான அழைப்பிதழ்கள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

*இளைஞர்களின் எதிர்காலத் திட்டமிடலை இலகுவாக்கும் இந்நிகழ்வில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு வேண்டுகிறோம்.*

**தமிழ் இலக்கிய மன்றம் மொரட்டுவ பல்கலைக்கழகம்**

**மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள்.**

(சி-36342) (26)

# இறுதியாட்டத்தில் இலங்கை அணியுடன் முட்டிமோதப் போவது எந்த அணி?

கொழும்பில் நடைபெற்று வரும் 8 ஆவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு இலங்கை அணி ஏற்கனவே தகுதி பெற்றுள்ளதை அடுத்து இன்று இந்திய அணிக்கும் பாகிஸ்தான் அணிக்கும் இடையே நடைபெறவுள்ள ஆட்டம் மிகவும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டிகள் என்றால் அந்த இரண்டு நாடுகளின் ரசிகர்கள் மாத்திரமன்றி உலகில் உள்ள அனைத்து ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்க்கும் போட்டிகளாக அவை அமைந்துவிட்டன. இதற்கு இரு அணிகளும் சமபலமுடைய அணிகள் என்பதை விட இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல் பகைமையும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடர் கடந்த பெப்ரவரி மாதம் பாகிஸ்தானில் நடைபெற்றபோது 5-3 என்ற கணக்கில் இந்திய அணி போட்டியில் வென்று தொடரைக் கைப்பற்றி இருந்தது. இந்தத் தோல்வியானது பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரையில் தாங்க முடியாத ஒரு தோல்வியாக, வரலாற்றுத் தோல்வியாக அமைந்து விட்டது. அந்தத் தோல்வியின் மூலம் ஏற்பட்ட அவமானத்தைப் போக்கவும் இந்திய அணியை மண்கவ்வச் செய்யவும் இன்றைய போட்டியில் எப்படியும் வெற்றிபெற்றே தீரவேண்டும் என்ற நிலை பாகிஸ்தான் அணிக்கு இதனை உறுதிப்படுத்துவது போல பாகிஸ்தான் அணியின் புதிய பயிற்சியாளரான பொப்வூல்மரும் கருத்துத் தெரிவித்துள்ளார். இந்திய அணியை பாகிஸ்தான் அணி வீழ்ச்சியடையச் செய்யும் அந்த நாளைக் காண்பதற்கு பாகிஸ்தான் மக்கள ஆவலாக இருக்கிறார்கள் என்று அவர் கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தார்.



ஆகவே, இன்றைய ஆட்டம் பல விடயங்களில் பாகிஸ்தான் அணிக்கு முக்கியமான ஆட்டமாக அமைந்துவிட்டது. இந்த ஆட்டத்தில் இந்தியாவை வெற்றி பெற்றால் தான் இறுதியாட்டத்திற்குத் தெரிவாகக் கூடிய வாய்ப்பு பாகிஸ்தான் அணிக்கு. ஏற்கனவே இலங்கை அணியுடன் தோல்வியுற்றமையால் இன்றைய போட்டியில் எப்படியும் வெற்றி பெற்றேயாக வேண்டும். இன்றைய போட்டியில் தோல்வியுற்றால் இறுதியாட்டத்தில் இலங்கை அணியைச் சந்திக்கவுள்ள அணி இந்திய அணிதான் என்பது நிச்சயமாகிவிடும். ஏனெனில், இந்திய அணி ஏற்கனவே பங்களாதேஷ் அணியை வெற்றியீட்டிய நிலையிலேயே இன்று களமிறங்குகிறது. பாகிஸ்தான் அணி அப்படியல்ல. இந்திய அணியை வெற்றி பெற்றாலும் பங்களாதேஷ் அணியையும் வெற்றி கொள்ளவேண்டும்.

இந்திய அணி இன்றைய போட்டியில் பாகிஸ்தான் அணியிடம் தோல்வியுற்றால் இலங்கை அணியைக் கட்டாயம் வென்றேயாக வேண்டும். இலங்கை அணியை லீக் ஆட்டத்தில் வென்றால் தான் மீண்டும் இறுதியாட்டத்தில் இலங்கை அணியைச் சந்திக்க முடியும். அவ்வாறு இலங்கை அணியை வெற்றிபெற்றாலும் இரண்டு போட்டிகளில் வெற்றியீட்டிய பாகிஸ்தான் அணியா அல்லது இந்திய அணியா இறுதியாட்டத்தில் இலங்கை அணியைச் சந்திக்கும் என்ற நிலை உருவாகும். எனவே, இன்று நடைபெறவுள்ள ஆட்டம் இரு அணிகளுக்கும் பலப்பரீட்சை தான்.

இரு அணிகளிலும் பந்து வீச்சாளர்கள் திறமைகளைக் காட்டி வருகின்ற போதிலும் சில சமயங்களில் அவர்கள் 'டென்ஸனாகி' விடுகின்றனர். அதன் காரணமாக வைட்போல், நோபோல் என்று பந்து வீசி கணிசமான அளவு உதிரி ஓட்டங்களைக் கொடுத்து விடுகின்றனர். இந்த நிலைமை சில வேளைகளில் அணிக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி விடும். இந்தத் தவறை இரு அணிகளின் பந்து வீச்சாளர்களும் செய்து விடுகின்றனர். பங்களாதேஷ் அணியுடனான முதல் சுற்று ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியும் இலங்கை அணியுடனான ஆட்டத்தில் இந்திய அணியும் இந்தத் தவறைச் செய்தன. இந்தத் தவறும் இந்திய அணி இலங்கை அணியுடன் தோல்வியடைவதற்கு ஒரு காரணமாக அமைந்துவிட்டது. எது எப்படியாயினும் இரு அணிகளும் தமது தவறுகளைத் திருத்திக்கொண்டு அணி வீரர்கள தெரிவையும் சரியாக மேற்கொண்டால் இன்று மிகவும் விறுவிறுப்பான ஒரு ஆட்டத்தை ரசிகர்கள் கண்டுகளிக்கலாம்.

இந்தப் போட்டியில் நேற்றுமுன்தினம் இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நடைபெற்ற ஆட்டத்தில் இலங்கை அணி ஜயசூரியவின் அதிரடி ஆட்டத்தினால் 10 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை எடுத்தது. அணியின் சார்பில் முகமட் அஷ்ரபுல் 66 ஓட்டங்களையும் மன்சூரல் இஸ்லாம் 43 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணியின் சார்பில் சமிந்த வாஸ் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை எடுத்தார்.

**- ஜெயஸ்ரீ -**

191 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஜெயசூரியவும் அவிஷ்க குணவர்த்தனவும் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடினர். பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சாளர்களில் எவரையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. இதனால் 33.3 ஓவர்களில் இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 191 ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது. ஜயசூரிய ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்களையும் குணவர்த்தன ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் எடுத்தனர். இது ஜயசூரிய ஒருநாள போட்டிகளில் எடுத்த 17ஆவது சதமாகும். அண்மைக்காலமாக துடுப்பாட்டத்தில் அதிகம் பிரகாசிக்காததால் பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்த ஜயசூரிய சதமடித்ததன் மூலம் தன்னை விமர்சித்தவர்களுக்கு துடுப்பாட்டத்தில் என்றும் அதிரடி வீரர் தான் என்பதை நிரூபித்துள்ளார். ஆட்ட நாயகனாகவும் இவரே தெரிவானார். *

## மகாஜன, யூனியன் கல்லூரிகளின்

# பழைய மாணவர் சங்க லண்டன் உதைபந்தாட்ட அணிகள் வருகை

யாழ்ப்பாணம்,ஜூலை25

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் உதைபந்தாட்ட அணியும் யூனியன் கல்லூரியின லண்டன் வாழ் பழைய மாணவர்களது புதல்வர்களின் 17 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்ட அணியும் இலங்கைக்கு வருகை தந்துள்ளன.

இந்த இரு அணிகளும் இலங்கையின் பல பாகங்களிலும் உள்ள உதைபந்தாட்ட அணிகளுடன் சிநேகபூர்வ ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ளன.

இதன்படி மகாஜன அணி நேற்றுமுன்தினம வெள்ளிக்கிழமை யாழ்உதைபந்தாட்ட லீக் அணியுடனும் நேற்று மாலை யாழ்.பல்கலைக்கழக அணியுடனும் ஆட்டங்களில் கலந்துகொண்டது.

நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முல்லைத்தீவு விளையாட்டு மைதானத்தில் முல்லைத்தீவு மாவட்டத் தெரிவு அணியுடனும், செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கிளிநொச்சி மாவட்டத் தெரிவு அணியுடனும், எதிர்வரும் 30 ஆம் திகதி கம்பளை சஹிராக் கல்லூரி அணியுடன் கல்லூரி மைதானத்திலும், அடுத்த மாதம முதலாம் திகதி கொழும்பு சவுண்டேஸ் விளையாட்டுக்கழக அணியுடன் சுகததாஸ ஸ்ரேடியத்திலும், 2 ஆம் திகதி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணியுடன் கல்லூரி மைதானத்திலும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளது.

யூனியன் அணி இன்று மாலை 4 மணிக்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி அணியுடன் கல்லூரி மைதானத்திலும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நுவரெலியா மாவட்டத் தெரிவு அணியுடன் பொது விளையாட்டு மைதானத்திலும், எதிர்வரும் 28 ஆம் திகதி கண்டி மாவட்டத் தெரிவு அணியுடன் போகம்பரை மைதானத்திலும், 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத் தெரிவு அணியுடன் பொது விளையாட்டு மைதானத்திலும், 31 ஆம் திகதி யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியுடன் கல்லூரி மைதானத்திலும், அடுத்த மாதம் 2 ஆம் திகதி இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி அணியுடன் கல்லூரி மைதானத்திலும், 3 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி அணியுடன் கல்லூரி மைதானத்திலும், 4 ஆம் திகதி யூனியன் கல்லூரி அணியுடன் கல்லூரி மைதானத்திலும் போட்டிகளில் கலந்து கொள்ளும்.

உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வது மட்டும் இலங்கைக்கான தமது விஜயத்தின் நோக்கமல்ல எனவும், கொடியபோரினால பாதிக்கப்பட்டுள்ள சிறார்களையும் இடம்பெயர்ந்து கஷ்டங்களை அனுபவிக்கும் தமது சமுதாயத்தின் யதார்த்த நிலையையும் நேரில் கண்டறிந்து லண்டனில் வாழும் தமது இளந்தலைமுறையினருக்கு இவற்றைத் தெரியப்படுத்துவம் தமது விஜயததின் நோக்கம் என்று மகாஜன பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையினர் தெரிவித்துள்ளனர். (10)

# ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் பயனாளிகளுக்கான விளையாட்டு விழா

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நிறுவனத்தின் பயனாளிகளுக்கான விளையாட்டு விழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இந்த விளையாட்டு விழாவிற்கு யாழ்.ஜெய்ப்பூர் செயற்றிட்டப் பணிப்பாளரும் முகாமைத்துவக் குழுத்தலைவியுமான திருமதி தி.யோகநாதன் தலைமை வகித்தார்.

நேற்றுக்காலை பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஜெய்ப்பூர் அலுவலகத்தில் மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து போட்டிகள் அலுவலக முன்றிலில் ஆரம்பமாகின. ஆண்கள் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி மற்றும் முச்சக்கர வண்டி ஓட்டப் போட்டிகள் என்பன நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.எஸ். எயிட் மிஷனின் பணிப்பாளர் கலாநிதி கரல் பேக்கரும், கௌரவ விருந்தினராக மோட்டிவேசன், அறக்கொடை நிதியத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி இராணி சாமுவேலும் கலந்துகொண்டனர்.

போட்டிகளை பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். இந்த நிகழ்வில் பலர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பிற்பகல் யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இரண்டாவது கட்ட விளையாட்டு விழா ஆரம்பமாகியது.

கொடியேற்றலைத் தொடர்ந்து வலுவிழந்த பயனாளிகளுக்கான தடகள நிகழ்வுகள் நடைபெற்றன. இறுதியாகப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (10-7)

# விளையாட்டு

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை25

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வேலணை பிரதேசசபை நடத்திய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும், கலை நிகழ்வுகளும் நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் த.ஸ்ரீமுரளிதரன் தலைமையில் வேலணை திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளன.

மேற்படி நிகழ்வில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (10-190-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை25

லண்டனிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க உதைபந்தாட்ட அணியினருக்கும், 19 வயதிற்குட்பட்ட யாழ். உதைபந்தாட்ட லீக் அணியினருக்கும் இடையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் 1 : 2 என்ற கோல்கணக்கில் யாழ். லீக் உதைபந்தாட்ட அணியினர் வெற்றியீட்டினர். (10-190-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை25

வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு மாகாணமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணியினர் வவுனியா சென்றுள்ளனர். (10-190-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை25

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர்.விசாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (10-201)



நேற்று நடைபெற்ற ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் நிறுவனத்தின் பயனாளிகளுக்கான விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டவர்களை முதற் படத்திலும் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குபற்றியவர்களை இரண்டாவது படத்திலும் ஆண்களுக்கான முச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி ஆரம்பமாகவுள்ளதை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்:பிரபா)*

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

13 ஸ்ரீ தொடரிலக்கமுடைய Mitsubishi Car full A.c, Economic gear, auto Shutter உடன் நல்ல நிலைமையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இலக்கம் 200, பலாலி வீதி, கந்தர்மடச்சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம். தொ.பே. இலக்கம் 021 222 5680. (34430)

Computer (With printer, Scanner), TVS motor Cycle, கையடக்கத் தொலைபேசி (Allcatel), பாவனைககுரிய மில் (உழுந்து அரைக்கும் இயந்திரம்), 10" கிறைண்டர், No.7 Huller விற்பனைக்குண்டு. தொடர்பு: பிறேம். T.P.: 021 222 5745 (34514)

கண்ணகி அம்மன் வீதி, தும்பளை மேற்கு, தும்பளை, பருத்தித்துறையில் 16 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: V.இராதாகிருஷ்ணன், 357, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (சிவன் கோயில் அருகில்).
T.P.: 021 222 7599, 0777 183770 (34435)

ISUZU N.K.R. டிப்பர் லொறி 227-95 மொடல் (நல்ல நிலையில் உள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 556244. (34449)

நல்ல நிலையில் உள்ள மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜொய்லின், உடுவில் வீதி, மானிப்பாய். T.P.:021 222 2978 (34506)

எம்மிடம் பாவித்த SONY 21"T.V. மொடல் K.V.2183 - 14,500/=, Panasonic டெக் JAPAN - 5,500/= என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: S.மகேஸ்வரன், கே.கே.எஸ். றோட் (சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம். (34510)

கொக்குவில், பூநாறிமரத்தடியில் மர அரிவு ஆலை, அதற்குரிய தளபாடங்களுடன் England லிஸ்ரர் எஞ்சின் உட்படக் கொட்டகையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.தில்லைநாதன், மில் ஒழுங்கை, மல்லாகம். (34515)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் 2 பரப்பு 1குழி காணியுடன் கூடிய வீடும், ஏழாலை மத்தி பசுபதி கடையடியில் 2 பரப்புக காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P.: 077 6125140 (34426)

இலக்கம் 2, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண வீதியில் உள்ள 3 பரப்புக் காணியும் சகல வசதிகளுமுள்ள வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: ச.தேவராஜனுடன் தொ.பே. இலக்கம் 021-222-2490 என்ற எண்ணுடன் தொடர்புகொள்ளவும். (சி-36326)

யாழ். பழைய பூங்கா வீதியில் மறவன் குளத்துக்கு மேற்காக 5 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (சென்.ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகில்) தொடர்பு: 222 2888. (34389)

ஏழாலை தெற்கு, விழுசிட்டியில் 3 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. ஏ/அ.மி. பாடசாலைக்கும் ஏ/அ.மி. தேவாலயத்திற்கும் முன்பாக அமைந்துள்ளது. விலை விவரம் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: 011461947. (சி-36081)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi வட்டுக்கோட்டைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34323)

தரமான Prima Broiler குஞ்சுகள் (விலை 40/=) 02.08.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது சகல கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34526)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதிச் சந்திக்கு அருகாக இருபாலை வீதியில் அமைந்துள்ள 12 அடிப்பாதையுடன் வீடு கட்ட, தோட்டம் செய்ய உகந்த 6¾ பரப்புக் காணி (இருபாலை வீதியிலிருந்து சுமார் 100 அடி தூரத்தில்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 026 222 1848. (சி-36329)

பழைய பூங்கா வீதியில் சுண்டுக்குழி மற்றும் புனித பத்திரிசியார் பாடசாலைகளுக்குச் சமீபமாக மின்சார வசதியுடைய, இருபுறப் போக்குவரத்து வசதியுடைய சுற்றுமதில் கட்டப்பட்ட 9 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கொழும்பு.
தொ.பே.: 0112586692 (34529)

பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கையில் உள்ள 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி தர்மராஜா வனஜா, 82/2, 3ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 6569 (34525)

## தவறிவிட்டது

இரத்தினசிங்கம் அகிலன் என்பவரின் பல்கலைக்கழக வெளிவாரி அடையாள அட்டை 23.07.2004 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சசிரேகா ரேடிங்கோ, கல்வியங்காடு எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்(T.P.: 0777 222115). சன்மானம் வழங்கப்படும். (34513)

## மணமகள் தேவை

1965இல் பிறந்த யாழ்ப்பாண வர்த்தகருக்கும் (கிரகபாவம் 40), 1970இல் பிறந்த கொழும்பில் Firm Officer (கிரகபாவம் 30), செவ்வாய் தோஷமற்ற, அரச உத்தியோகத்தருக்கும் அழகிய மணப்பெண்கள் தேவை. 1969, சிங்கப்பூரில் Surgeon, இரண்டில் செவ்வாய் (கிரகபாவம் 35), சிங்கப்பூர் செல்ல விரும்பும் டாக்டா மணமகளும் தேவை. தொடர்பு: T.P.: 077 6140273. (34422)

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, சொந்தக்கடை உரிமையாளருக்கு, 32 வயதிற்குட்பட்ட, செவ்வாய் தோஷமற்ற, சைவபோசன மணமகள் தேவை. தொடர்பு: விள.இல.: 2329, மே/பா. உதயன். (34243)

ஜேர்மன் சிற்றிசன் உடைய, யாழ். வந்து நிற்கும் மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. தொடர்பு: ஆ.க.வே.கதிர்காமவேல், முருகையன் கோயில் வீதி, நெல்லியடி. T.P.: 077 6331522 (மருதத்துக்கு அருகில்). (34299)

லண்டனில் வசிக்கும், 29 வயதுடைய, பூச நட்சத்திம், 7இல் செவ்வாய்க் குற்றமும், 41¾ கிரக பாவமும் உள்ள, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு வெளிநாட்டில் சிற்றிசன் உடைய மணமகள் விரும்பத்தக்கது. தொடர்பு: இராசேந்திரம் உழத்தம்பி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
T.P.: 0773024387, 021 226 3329 (34509)

8இல் செவ்வாய், 77 பாவமுடைய லண்டனில் வசிக்கும் மணமகனுக்குச் செவ்வாய்க் குற்றமுடைய, பாவம் கூடிய, 25 வயதிற்குட்பட்ட, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: விளம்பர இல. 2334, மே/பா உதயன். (34530)

## மணமக்கள் தேவை

1972இல் பிறந்த, 19¾ பாவமுடைய, பரணி நட்சத்திரம், கொம்பியூட்டர் சயன்ஸ் முடித்த மணமகனுக்கும் 1971இல் பிறந்த, 12இல் செவ்வாய் 41¾ பாவமுடைய, பயிற்றப்பட்ட கணித ஆசிரியைக்கும் மணமக்கள் தேவை. அத்துடன், பட்டதாரிகள், டாக்டர்கள், லிகிதர்கள், வெளிநாடுகளில் பிரஜாவுரிமைபெற்ற மணமக்கள் உண்டு. தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை, நல்லூர். (34521)

## வீடு தேவை

இளைப்பாறிய அரச அதிகாரி குடும்பத்திற்கு மூன்று அல்லது நான்கு அறைகளுடன் வீடு இவ்வருட இறுதிக்குள் வாடகைக்குத் தேவைப்படுகின்றது. காங்கேசன்துறை வீதி, பலாலி வீதிகளை அண்மித்த பகுதிகள் விரும்பத்தக்கது. தொடர்பு: தி.சண்முகநாதன், மே/பா. இ.சிவராசா, 606/1, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம். (34373)


**சிறுகுறிஞ்சாப் பவுடர்**

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருளகளும் அடங்கும். தொடர்பு: Bio Tec International இல. 131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021 - 4590907. (34437)

**சாரதி தேவை**

எமது வைற் ஹவுஸ் அந்திய கால சேவை ஸ்தாபனத்துக்கு சாரத' ஒருவர் உடனே தேவை (குடிப்பழக்கமற்றவர்).
தகுந்த ஆவணங்களுடன் நேரில் வரவும்.
இல.181, பிரதான வீதி,
(34520) யாழ்ப்பாணம். (34-14-18-24)


### கிளைக்குழுத் தேர்தல்

வடமராட்சி,ஜூலை25

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத தேர்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இச்சங்கத்தின் 13 கிளைகளுக்கு இத்தேர்தல் இடம்பெறும். (எ-173)

### கலைநிகழ்வு

ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்திய பல்வேறு போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் கலை நிகழ்வுகளும் இன்று மாலை 7 மணிக்கு ஊர்காவறறுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் ஊர்காவற்றுறைத் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சிகள் நேற்று நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.(எ-16)

### சிரமதானம்

காரைநகர்,ஜூலை25

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் காரைநகர் வடக்கு மற்றும் தெற்கு உப அலுவலகங்கள் இணைந்து காரைநகரில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருநத மரக்கிளைகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய வீதிகளும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (எ-73)

## 31ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 10 - 05 - 1979



இறப்பு 25 - 06 - 2004

### செல்வி மகாலிங்கம் தங்கரத்தினம்

அம்மா தங்கா! நீ
எம்மை விட்டுப் போய்த் திங்களொன்று
ஓடி மறைந்தும் உன்சுவாசம்
உன்நேசம் உன்நினைவுகள்
எங்குமே ஓடி மறையவில்லையம்மா!
எத்தனை யுகமானாலும் உந்தன் திருமுகம்
எங்கும் ஓடி ஒளியாதம்மா - என்றும்
அது பசுமையாய் எம் மனங்களில்....
நாமெல்லோரும் துடிக்க உன்னோடு
கரம் கோர்க்க வந்த நெஞ்சமும் தவிக்க
ஆண்டவனைத் தேடியோடும் அவசரமென்னம்மா?
உன்னைநாம் மறக்க உந்தன் நிழல்படியாத
செயலொன்று கூட நம்மிடமில்லையே!
இனியென்ன காலந்தோறும் கண்ணீருடன்
உன் உறவுகள் வாழ்வோம் அம்மா.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் வாடிவருந்தும்:
ம.மகாலிங்கம் குடும்பத்தினர்.

கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு. (34528)(42-14-18-24)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் செல்வநாயகம் பொன்னம்மா

26.06.2004 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் உதவிகளை வழங்கியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நறுவிலி வீதி,
புலோலி தெற்கு, புலோலி.
(சி-36335)(34-14-18-24)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


## கோடைகால ஜில் சொப்பிங்

முகூர்த்தப்பட்டுப் புடைவைகள், வெளிநாட்டிலிருந்து புதிதாக உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன் சாறி வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், கோட் சூட், ஸ்கேட் அன் பிளவுஸ் வகைகள், பேபி கவுண் வகைகள், ரீசேட், ரீசேட், சூட் வகைகள், ஜம்பர் வகைகள், ரவுசர் துணி வகைள், கவுண் வகைகள் அத்தனையும்

தரமானதாகவும், ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள மலிவானதாகவும்
உடனே விஜயஞ் செய்யுங்கள்





மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்

இல.10, மின்சார நிலைய வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P 021 4590174


## தயவுசெய்து தகவல் தாருங்கள்



அராலி வடக்கைச் சேர்ந்த வரும் மானிப்பாய் மக்கள் வங்கி உத்தியோகத்தருமான

### திரு.சுந்தரம் பஞ்சலிங்கம்

22.07.2004 வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் வங்கி வேலைமுடிந்து வரும்போது காணாமற்போய்விட்டார். இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் சமீபத்தில் உள்ள பொலீஸ் நிலையத்துடனோ அல்லது என்னுடனோ தொடர்புகொள்ளுமாறு புணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி மஞ்சுளாதேவி பஞ்சலிங்கம் (மனைவி),
(பாடசாலை பற்சிகிச்சையாளர்,
யாழ். மத்திய கல்லூரி)

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (34519) (33-14-18-24)

## மரண அறிவித்தல்

### மேரி ஹெலன் இராசரட்டினம் (நேசம்)



மிருசுவில், றெயிஸ்ரார் வளவைச் சேர்ந்த மேரி ஹெலன் இராசரட்டினம் நேற்று (24-07-2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப் நீக்கிலாஸ் இராசரட்டினம் (யாழ. கச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மிருசுவில் றெயிஸ்ரார் சின்னப்பு பிலிப்புப்பிள்ளை - மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும் இராசாத்தி (வவுனியா), காலஞ்சென்றவர்களான தங்கம், இராசம், இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வம் (லண்டன்), ஜெயம், பாலா (பாலா ஸ்ரோர்ஸ் & கொமினிக்கேசன் - மிருசுவில்), றெக்ஸ் (மிருசுவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நிர்மலா (லண்டன்), பேபி (பெரிய விளான்), தேவி, வசந்தா ஆகியோரின் மாமியாரும் யூடி, செல்வினி, ரூபினி, நிமல், யூட், விமல், ராஜன்(கனடா), நிலானி, நிசாந்தினி, சத்தியன், ரூபியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26-07-2004) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக மிருசுவில் சன் நீக்கிலார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பி.சே.அன்ரன் இளங்கோ.

மிருசுவில்.
T.P.: 060-2213300. (34523)(42-14-18-24)

# இளவாலை புனித யாகப்பர் ஆலயம்

## 125ஆவது ஆண்டு விழாச் சிறப்புமலர் - 25.07.2004

## MESSAGE

The parishioners of St.James' church, Ilavalai are most privileged and have received the blessing of the Lord Almighty for the 125 years of existence of your place of worship and the apostolate that has been faithfully exercised over the years in so effective a manner.

You have followed the example of your patron, St.James, the younger brother of St.John, the Evangelist; both of them, sons of Zebedee, an outstanding fishermen of the lake of Galilee. Their mother Salome is belived by some authorities to have been a sister of our Blessed Mother herself. They were also in partnership in their fishing with Sts. Peter and his brother St.Andrew.

St.James was arrested in the year 43 and beheaded. Tradition has it that with him was martyred the very person who accused him before king Herod Agrippa I. It is further believed that his body was brought to Spain and become a popular pilgrimage center in.

"May the parishioners of St.James', Ilavalai grow in faith and virtue like their patron", is my prayer for them.

**Oswald Gomis,**
**ARCHBISHOP OF COLOMBO.**



ஆலய முகப்பின் புதிய தோற்றம்

## ஆயரின் செய்தி



'திராட்சையூர்' என அழைக்கப்படும இளவாலை புனித யாகப்பர் ஆலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவில் வாழ்த்துக்களையும் ஆசீரையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். ஒறற்றோறியன் சபைக்குருக்களால் இவ்விடத்தில் அமைக்கப்பட்ட பழைய ஆலயமானது 1876 ஆம் ஆண்டு எரிக்கப்பட்டதாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் 25 வருட கத்தோலிக்க முன்னேற்றம் என்னும் நூலின் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. தற்போதைய ஆலயமானது 1884 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1918 இல பூர்த்திசெய்யப்பட்டது. குருக்கள் தங்கிப் பணிபுரிவதற்கு வசதியான ஒரு குருமனையும் அமைக்கப்பட்டது. இளைப்பாறும் குருக்கள், குறிப்பாக மேலைநாட்டுக் குருக்கள் இங்கு தங்கியிருந்து இவ்வாலயப் பணிகளையும் திருக்குடும்பக் கன்னியர்மடத்தின் ஆன்மீகப் பணிகளையும் முன்பு ஆற்றிவந்திருக்கிறார்கள்.

அன்றுமுதல் இன்றுவரை இளவாலை புனித யாகப்பர் ஆலய மக்கள் பக்தி விசுவாசம் நிறைந்தவர்களாக ஆலயத்தின் மட்டில் மிகுந்த கரிசனையுடையவர்களாக விளங்கி வருகிறார்கள். இவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு இளவாலை கென்றியரசர் கல்லூரியும், திருக்குடும்பக் கன்னியர் மடமும் பெரும்துணை புரிந்தமையால் அறிவில வளர்ந்து இன்று பல அரச உத்தியோகங்களையும், உயர்பதவிகளையும் வகிக்கத்தக்க நிலையில் இவர்கள் இருக்கிறார்கள். குருக்களையும் கன்னியர்களையும் இந்தப் பங்கு காலத்திற்கு காலம் பிரசவித்துக் கொண்டே வந்திருக்கிறது. பங்கில் இயங்குகின்ற இல்லற சபைகள், பக்திச்சபைகள், இளைஞர், யுவதிகளுக்கான மன்றஙகள் என்பன எடுத்துக்காட்டாக விளங்கி குருக்களையும் கன்னியர்களையும் அர்ப்பணம் செய்வதற்கு அடித்தளம் இட்டிருக்கின்றது. இன்றும் இப்பங்கு மக்கள் குரு பக்தியிலும் தேவநேசத்திலும் சிறந்து விளங்கி வருவது பாராட்டுதற்குரியதாகும்.

இவ்வாலய மக்களின் கிறிஸ்தவ வாழ்வு உறுதியானதாக இருக்க உழைத்த முன்னாள் பங்குத் தந்தையர்களையும் உடன் உழைப்பாளர்களையும் பங்கின் வளர்ச்சிக்காகச் சேவை புரிந்தோரையும் இவ்வேளை நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

125 ஆண்டு நிறைவில் பங்குத் தந்தையையும் ஆலய மக்கள் அனைவரையும் வாழ்த்தி மண்ணும் மக்களும் இன்புற்று வாழவும் தே.அழைதல்கள் பெருகவும், ஆழமான விசுவாச முதிர்ச்சி கொண்ட அன்பிய வாழ்வு பெருகவும் வேண்டுமென இறையாசி வேண்டி நிற்கிறோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,**
**யாழ்.ஆயர்.**

## மன்னார் ஆயரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணத்தில் உள்ள இளவாலை என்னும் ஊரில் அமைந்துள்ள புனித யாகப்பர் ஆலயம் அமைக்கப்பட்டு 125 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அவ்வேளையில் புனித யாகப்பர் ஆலயப் பங்கு மக்கள் இதனை ஒரு பெரு விழாவாகக் கொண்டாடி மகிழ்கிறார்கள். அவர்களுடன் நானும் இணைந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1879 ஆம் ஆண்டு இளவாலைக் கிராமத்திலே அமைக்கப்பட்ட புனித யாக்கப்பர் ஆலயம் இன்று 125 ஆண்டுகளை நிறைவு செய்து எமது திருச்சபையின் அழியாச் சின்னமாக நிமிர்ந்து நிற்கின்றது.

இந்த ஆலயத்தின் மூலம் இப்பகுதி கத்தோலிக்க மக்களின் இறைநம்பிக்கையும், விசுவாசமும் கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் அவர்கள் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்ந்து கிறஸதுவுக்கு சான்று பகர்கின்றனர்.

புனித யாகப்பரின் அளவு கடந்த ஆசீரினாலும், இறையன்பினாலும் தூண்டப் பெற்றவர்களாக இன்று 125 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் அவர்களை நானும் வாழ்த்துகின்றேன்.

அவர்கள் கிறிஸ்தவ வாழ்வில் மென்மேலும் உயர்ந்து விளங்க இறையாசீரும், அன்பும், புனித யாகப்பரின் அருளும் என்றென்றும் இருப்பதாக.

நன்றி
**மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை,**
மன்னார் ஆயர்.



பொல்லா வினை தீர்க்கும் வல்லபரன் சீசன்
நல்லார் வினைதீர்க்க வல்லான்
இளவையில் கோயில் கொண்ட சந்தியோகு
வளமை நிதம் சேர்ப்பான் காண்.

## பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



ஆன்மீகம், கலை, கல்வி கலாசாரம் என்னும் ஒரு பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள திராட்சையூராம் புனித யாகப்பர் ஆலய தலத் திருச்சபை தமது பாதுகாவலராம் புனித யாகப்பர் ஆலய 125 ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் பொழுது அதற்கான இந்த ஆசிச்செய்தியைப் பங்குத் தந்தையாகவிருந்து எழுதுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

தமது மூதாதையரின் ஆழமான விசுவாசத்தில் கட்டி எழுப்பப்பட்ட இத்திருச்சபையானது ஒரு கத்தோலிக்க கிராமமாக விளங்குவதில மட்டுமல்ல, எட்டுக் குருக்களையும், இரு அருள்சகோதரிகளையும் திருச்சபைக்குத் தந்திருக்கிறது. போரின் அவலத்தினால் சிலகாலம் சிதறுண்டு சின்னாபின்னப் பட்டுப்போனபோதும் திரும்பவும் இவ் இடைக்கால சமாதானச் சூழலில் மீண்டும் 115 குடும்பங்களாக ஒன்று கூடியிருக்கும் இவர்கள் தமது வெளிநாடுகளில் உள்ள உடன்பிறப்புக்களோடு இணைந்து இந்த ஆலய, சமூக புதுப்பித் தலைமேற்கொண்டு 125 ஆவது ஆண்டு யூபிலியைக் கொண்டாடுவது, ஒரு சமூக உறவின் வெளிப்பாடும், ஆன்மீகத்தின் எழுச்சியுமாகும்.

ஆன்மீகத்திலும், பொருளாதாரத்திலும் இக்கிராமம் மேலோங்கி நிற்பதற்கு முக்கியமாக விளங்கும் நில, நீர்வளம் மாத்திரமன்றி இக்கிராமத்தின் முகப்பாக விளங்கும் புனிதயாகப்பர் ஆலயமும், கல்லூரியுமேயாகும், இதன் பயனாக அரச உத்தியோகத்திலும், தனியார் தொழிலதுறையிலும் முன்னேறி இருப்பது எடுத்துக்காட்டாகும். இக்கிராமத்திலிருந்து வெளியே செல்லும் போதும் உள்ளே வரும்போதும் இறையாசீர் புனித யாகப்பரின் பரிந்துரைவழி ஏராளமாகக் கிடைக்கின்றது. எனவே, இந்த யூபிலி நந்நாளில் ஒன்று கூடி இறைவனைப் புகழ்வோம், நன்றியோடு துதி பாடுவோம்.

"கடவுளே! சீயோனில் உம்மைப் புகழ்ந்து பாடுவது ஏற்பு டையது!
உமக்குப் பொருத்தனைகள் செலுத்துவதும் சால்புடையது!
மன்றாட்டுக்களைக் கேட்கின்றவரே மானிடர் யாவரும் உம்மிடம் வருவர்". (தி.பா. 65:1-2)"

**அருள்பணி பொனிபஸ் எவ்.பஸ்ரியாம்பிள்ளை.**
பங்குத்தந்தை,
இளவாலை.

மலர் அமைப்பு: இ.அ.தேவராஜன்

## இளவாலை புனித யாகப்பர் ஆலயம் பற்றி...

யாழ்.குடாநாட்டில் வடமேற்குப் பக்கமாக அமைந்துள்ள இளவாலையின் மத்திய பகுதியில் திராட்சையூர் என்னும் புனைபெயருடன் விளங்கும் இடத்தில் புனித யாகப்பரின் பெயரால் ஆலயமொன்று இங்கு வாழும் கத்தோலிக்க மக்களினால் அமைக்கப்பட்டது. இவ்வாலயம் 1879 ஆம் ஆண்டளவில் ஒரு தற்காலிக கொட்டிலாகத் தான் முதன்முதலில் அமைக்கப்பட்டது. பங்கு மக்களின் தளராத விசுவாசத்தினாலும் அயராத உழைப்பினாலும் 1884இல் அதே இடத்தில் அருட்திரு. லெஸ்லான்ஸ் அடிகளாரால் அடிக்கல் நடப்பட்டு. கல்லாலான பிரதான பகுதி கட்டிமுடிக்கப்பட்டது. இதற்கான மரங்கள் வவுனியா ஈரப்பெரியகுளத்திலிருந்து முல்லைத்தீவு கடல் வழியாக தோணிகளில் ஏற்றி சேந்தான்குளம் கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டது. கட்டட வேலைகளுக்குத் தேவையான மணல் 'வலிச்சை' என்னும் இடத்திலிருந்து தலைச்சுமையாகப் பங்கு மக்களினால் சேர்த்துக் கொடுக்கப்பட்டது. இவ்வாறு இவ்வாலயம் உருவாக இரவு பகல் பாராது இப்பங்கின் முன்னோர்கள் உழைத்தார்கள் என்பது வரலாறு கூறும் உண்மையாகும். இன்றும் 1890 இல் ஆலயத்தின் அருகில் 'சின்னநுவரெலியா' என்று இங்கு பணிபுரிந்த குருக்களினால் போற்றப்பட்ட அழகானதோர் பங்குப்பணிமனை கட்டப்பட்டது. மேலும் ஆலயத்தை மெருகூட்டுவதற்காக 1918 ஆம் ஆண்டில் வேலைப்பாடுகளுடன் கூடிய முகப்பு அருட்திரு. கிற்றோ அவர்களின் முயற்சியினால் உருவாக்கப்பட்டது. பின்பும் 1950 இற்கு பிற்பட்ட காலத்தில் முகப்பு மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

மேலும் பங்கு மக்கள் இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து பணிபுரிய பதின்மரைப் பணியாள்களாக அனுப்பியுள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் அறியத்தரு கின்றோம். இவர்களின் விடாமுயற்சி, தற்துணிவு, தன்னம்பிக்கை போன்ற நற்புண்புகளினால் பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு போன்ற பல துறைகளிலும் வளர்ச்சி பெற்று ஈழ மண்ணில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் பரந்து சிறந்து வாழ்கிறார்கள். எங்கிருந்தாலும் வருடா வருடம் நடைபெறும் ஆலயத் திருவிழாவிற்கு சமுகந்தந்து சிறப்பித்து இறைவனின் ஆசீரை புனித யாகப்பர் வழியாகப் பெற்று வளமாக வாழ்கிறார்கள் என்பதைப் பூரிப்புடன் கூறி நிற்கின்றோம்.

இன்னும் இவ்வருடம் 125 ஆண்டு யூபிலி விழாவை சிறப்பிப்பதற்காக இவ்வாலயம் முகப்புப் பகுதி உட்பட மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு தற்பொழுது ஒரு புதப்பொலிவுடன் விளங்குகின்றது. இவ்வேலைகள் சிறப்பாக அமைய அல்லும் பகலும் அயராத பாடுபட்டு வரும் எமது பங்கின் பிதா அருட்பணியாளர் C.F பொனிபேஸ் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவர் பணி மேன்மேலும் சிறக்க உடல், உள, ஆன்ம சுகத்தை ஆண்டவனிடம் உவப்புடன் வேண்டுகிறோம். இந்த யூபிலி விழாவிற்காக நிதியினை மட்டுமல்ல, தங்கள் ஒட்டு மொத்தமான உழைப்பினையும் மனமுவந்து நல்கும் பங்கின் உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு மக்களையும், சமூக நலன் விரும்பிகளையும் நாம் மறந்து விடமுடியாது. புதுமைமிகு பாதுகாவலர் படைமிரட்டிச் சந்தியாகப்பர் வழியாக இறைநாமம் போற்றப்பட நாம் என்றும் ஒன்றுபட்டு உழைத்து உயர்வோமாக ~ என்றும் எல்லோருக்கும் மங்களம் உண்டாகுக.

**மண்ணின் மகள்.**

## நூற்றிஇருபத்தைந்தாவது ஆண்டுவிழா - நல்வாழ்த்து

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால்
புனித யாகப்பர் ஆலயத்தின் நூற்றாண்டுவிழா -அந்த
இனிய எண்ணங்கள் கலைவதற்குள்
இன்று நூற்றி இருபத்தைந்தாவது ஆண்டுவிழா
ஆம் எத்தனை பேரானந்தம்!
இத்தனை ஆண்டுகளில் மனிதர்களிலும் மனங்களிலும்
எத்தனை மாற்றங்கள் - ஆனால்
மண்வாசனை மட்டும் மாறவில்லை.
எண்ணங்களில் புதிய பரிமாணங்கள்
எல்லோர் வாழ்விலும் புதிய கோணங்கள்
பழையன கழிதலும், புதியன புகுதலும்
இது காலத்தின் கட்டாயச் சுழற்சி
அந்தப் பழைய முகங்கள் முதிர்ந்த உறவுகள்
இன்றும் ஆங்காங்கே முகத்தில் முதுமை
சுருக்கங்களோடு,
ஆனால், உணர்வுகளைப் பரிமாற
அன்றைய இளைய முகங்கள் ஒன்றுகூட இல்லை,
வெற்றிலையும், திராட்சையும் வெறுமனே
ஓருணர்வு தாவரங்கள் தான் - ஆனால்
உள்ளுணர்வுகளைப் பரிமாற
அந்தப் பழைய ஆறுணர்வு உள்ளங்களைத் தேடும் பணியில்
ஏக்கம் தான் வெற்றி கொண்டது.
இளவாலைச் சந்திமுதல் ஆனைவிழுந்தான் வரை
இருந்த குறுகிய வட்டமான நமது ஊர்
இன்று பரந்து விரிந்து உலகில் நாலாபுறமும்
ஐந்து கண்டங்களிலுமாக
அந்த "சென்.ஜேம்ஸ்" எல்லையற்றிருப்பது
என் ஏக்கத்துக்கு ஓர் ஊக்கமருந்து.
இந்த இருபத்தைந்திற்குள் எத்தனை போராட்டங்கள்
உறவுகள், பிரிவுகள், ஏற்றங்கள், ஏமாற்றங்கள்,
வீழ்ச்சிகள், வளர்ச்சிகள்
ஊரை விட்டு உறவுகளைப்பிரிந்து
அகதிகளாய் ஆங்காங்கே சென்று
மிஞ்சிய உறவுகளோடு
ஊர்வந்து சேர்ந்த கதை ஒரு புறம்,
தாய் மண்ணைவிட்டு தரணியெங்கும் தடம் பதித்து
தன்னையும் முன்னேற்றி தன் சார்ந்தோரையும்
முன்னேற வைத்த சாதனைகள் மறுபுறம்,
எப்படியோ வலியின் பின் சுகப்பிரசவம்
எல்லாருக்கும் மகிழ்ச்சிதான்
வலிகளை, வடுக்களை மறந்து மனித நேயச் சுவடுகளால்
வரலாற்றுத்தடம் பதிக்க
நூற்றிருபத்தைந்து ஆண்டு விழாவில்
பரம தந்தையின் அருளைப் பெற்று
தூய ஆவியில் வல்லமையில் நிறைந்து
யேசுவின் அன்பில் வழிநடந்து
வேளாங்கன்னி அன்னையின் அரவணைப்பில்
புனித யாகப்பரின் பாதுகாவலில்
இறைகுலமாய் நாம் ஒன்றாகி
உடலில் நலமும் உள்ளத்தில் மகிழ்ச்சியும்
எண்ணத்தில் தூய்மையும் அமைதியும்
உழைப்பில் திருப்தியும் வெற்றியும்
குடும்பத்தில் நேசமும் பாசமும்
சமூகத்தில் மனிதமும் நேயமும்
எல்லா வளமும் நலனும் பெற்று
நிறைவாழ்வு வாழ்ந்திட வாழ்த்துகின்றேன்.

**டாக்டர்: ஜோசப் போல்.**

## யாழ்.பிரதேசத்துக்கான பேராளர் சங்கமம்

யாழ்.பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு இன்று மாலை 3மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முன்மொழிவுகள், கருத்துப் பகிர்வு, தீர்மானங்கள் எடுததல என்பன இடம்பெறும். சென்றவாரம் நடைபெறவிருந்த இந்தச் சங்கம நிகழ்வு தவிர்க்கமுடியாதகாரணத்தால் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (எ-30)

### பசுமை நிறைந்த நினைவின்
# நான்காம் ஆண்டு நினைவலைகள்



| அகம் மகிழ | அகம் நெகிழ |
|---|---|
| 31 - 07 - 1945 | 25 - 07 - 2000 |

அமரர் **கிருபைரட்ணம் ஜெயசீலன்**

*(முன்னாள் கிராம அலுவலர், துன்னாலை கிழக்கு ஜே/371)*

அன்பு செய்தீர் அரவணைத்தீர்
இன்பமாய் நாம் வாழ நீர் உழைத்தீர்
கல்வி தந்தீர், கலைகள் சொன்னீர்
கடின உழைப்புக்கு வழிகள் சொன்னீர் - நடுவழியில்
காலன் உம்மைக் கொண்டு சென்றான்
உங்கள் ஆத்மா எங்கள் நினைவுகளில்
என்றும் உலவுதையா.

அணிஞ்சிலடி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமகள், பேரப்பிள்ளைகள்.**

(சி-36302)(34-13-18)

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 - 12 - 1931 | 10 - 07 - 2004 |

அமரர் **பொன்னம்பலம் கதிர்காமநாதன்**

மனிதரில் மாணிக்கமாய்த் திகழ்ந்து புனிதரின் பொற்கழல் சேர்ந்த எமது குடும்ப விளக்கு அணைந்தவேளை அவரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் நேரில் கலந்துகொள்ள முடியாதவிடத்து! தமது அனுதாபங்களைத் தெரிவித்து பல்வேறு வழிகளில் எமக்கு உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

85, சிவன் கோயிலடி,
திருநெல்வேலி. (34501) (26-34-13-18)

**- குடும்பத்தினர்.**

# நான்காவது ஆண்டு நினைந்துருகல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 12 - 1936 | 07 - 08 - 2000 |

*நயினாதீவு அமரர்* **இரகுநாதன் சிவஞானசுந்தரம்பிள்ளை**

*(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம் – மன்னார்)*

அட்டமித் திதி: 25.07.2004

இல்லறத்தை நல்லறமாக்கிய இல்லறஞானி செயலிற் துறவு அந்தரங்கச் சுத்தி, அன்பு, பாசம், ஈகை என்பன நீங்கள் எமக்கு விட்டுச்சென்ற இனிக்கும் நினைவின் முத்திரைகள். உங்கள் ஆன்மாவும் ஆகிருதியும் அளவிடற்கரியது.

உங்கள் ஆன்மா சாந்தியடைய
நயினை நாகபூஷணித் தாயை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் நினைவில் உருகும்:
**மனைவி,**
சகோதரர்கள்: இ.தணிகாசலம்,
இ.சிவபாதசேகரம்
(முதல்வர், யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஸ்ண வித்தியாசாலை).

டாக்டர் **சாவித்திரிதேவி சிவஞானசுந்தரம்பிள்ளை**
ஆதாரவைத்தியசாலை, மந்திகை.
முதலாம் கட்டை, புலோலி கிழக்கு.
பருத்தித்துறை. (34507)(34-13-18)

## வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியில் உடற்பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்.ஜுலை25

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உடற்பயிற்சி நிலையம் ஒன்று 3 லட்சம் ரூபா செலவில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி நிலையத் திறப்புவிழாவில் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் என்.பாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு நிலையத்தைத் திறந்துவைத்தார்.

மேற்படி உடற்பயிற்சி நிலையத்திற்கான நிதியினை யாழ்ப்பாணக் கல்லூரியின் பழைய மாணவனான அகஸ்ரின் சேவியர் கனடாவில் இருந்து அன்பளிப்புச்செய்துள்ளார். (எ-185)

### சுட்டுக்கொல்லப்பட்ட பிரதேசசபைத் தலைவரின்
## சடலத்துடன் ஈ.பி.டி.பியினர் நேற்றுமுன்தினம் நோர்வேத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜுலை25

அக்கரைப்பற்றில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்ட, ஆலையடி வேம்புப் பிரதேசசபைத் தலைவர் வேலாயுதம் ரவீந்திரனின் (கமலநாதன்) சடலத்தைக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதுவராலயத்திற்கு முன்னால் வைத்துக்கொண்டு ஈ.பி.டி.பியினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் ஈ.பி.டி.பி. இயக்கத்தின் ஆதரவாளர்களும், அதன் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் சங்கர், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன், ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகியோரும் ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி), ஹெல உறுமய முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்றில் இருந்து கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட கமலநாதனின் சடலம், கொழும்பில் உள்ள ஈ.பி.டி.பி. தலைமை அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர், நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து மீண்டும் அவரது சொந்த இடமான அக்கரைபபற்றுக்கு எடுத்துச்செல்லப்படடது. (க)

## சமகால அரசியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜுலை25

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்படும் சமகால அரசியற் கருத்தரங்கின் 16ஆவது தொடர் நாளை திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் -சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

"திட்டமிட்ட தமிழர் கலாசாரப் பிறழ்வுகள்" எனும் தலைப்பில் வெளிவாரிப்பட்டப் படிப்புகள் கல்லூரியின் விரிவுரையாளர் அ.குமாரவேல இதில் கருத்துரை வழங்குவார். கருத்தரங்கில் ஆர்வலர்கள் எவரும் கலந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)


## தேவை

உணவுச்சாலையில் ரொட்டி தயாரிப்பவர், உணவு பரிமாறுவோர் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். தங்குமிட வசதி, சாப்பாடு வழங்கப்படும்.

தொடர்பு:
**புளூராக்கன் ரெஸ்றோரன்ற்,**
கண்டி வீதி, சாவகச்சேரி.
(சி.36327)

## விற்பனையாளர் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புபவர்களும் தேவை. தூரத்திலிருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு:
விளம்பர இல:2331
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(31239)

# 13

அனுமதி இலவசம்

யாழ்ப்பாணத்து ஓவியர்களின் ஓவியங்களின் காட்சி

20 யூலை - 18 ஓகஸ்ட் 2004 வரை
10.00 a.m. - 5.00p.m.
பிரெஞ்சு நட்புறவுக்கழகம்,
83, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில்

**SRI RAJAN FANCY HOUSE**
**65, 66 New Market, Jaffna.**

**மானிப்பாயில் புதிய பிரிவுகள் ஆரம்பம்**



**வியாழக்கிழமை 29.07.2004**
**காலை 10.00 மணி**

- மணப்பெண் அலங்காரம் (இந்து, கிறிஸ்தவ)
- பேசியல் ✻ தலையலங்காரம்
- புருவம் சீர்செய்தல் ✻ பூவேலைப்பாடு ✻ கேக் ஐசிங்
- கிறிஸ்ரல் கல் வேலைப்பாடு
- மட்பாண்ட அலங்காரம் ✻ துணியிலான பொம்மைகள்
- சாறி, சாறி பிளவுஸ், பஞ்சாபி வேலைப்பாடு
- முத்து ஆபரண வேலைப்பாடு

பயிற்சிமுடிவில் இலவச Facial (Herbal) செய்துவிடப்படும்

✻ சங்கீதம் ✻ வயலின் ✻ நடனம்

உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பதிவுசெய்யவும்.

*மணப்பெண் அலங்காரம், கேக் ஐசிங், வீடியோ, புகைப்படம், பந்தல், வான் சேவை போன்றனவும் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

**வேலைசெய்யும் பெண்களுக்கும் நேரம் ஒதுக்கித் தரப்படும்.**

குறைந்த செலவில் தரமான முறையில் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்:

# RTR

**பெண்கள் அழகுக்கலை பயிற்சி நிலையம்**

பிரதான வீதி, மானிப்பாய் (ஆஸ்பத்திரி அருகில்)
T.P.: 0777677079. (34512)(34-18-13)


# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



| ஆண்டவன் படைப்பு | அநியாய அழிப்பு |
|---|---|
| 12 - 03 - 1932 | 14 - 08 - 1994 |

அமரர் **ஆறுமுகம் லோகேஸ்வரன்**

(இளைப்பாறிய ஆசிரியர், அச்சுவேலி ம.வி.)


திதி: 25.07.2004

கொடூரங்கள் நிறைந்த நாட்டினிலே
கொடியவன் ஏவிய ஷெல்லொன்று
கொன்றது எமது தெய்வத்தை
கொடுமை இதுவென புலம்புகிறோம்!

பிரிவால் கலங்கும்:
**மனைவி, மகள், மகன், மருமகன், மருமகள் பேரக்குழந்தைகள்.**

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (34445)(34-13-18)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 – 02 – 1917 | 11 – 06 – 2004 |

அமரர் **வே.நமசிவாயம்**

(கட்டடக் கலைஞர் - இடைக்காடு)

தேவர் உலகுறை நமசிவாயம் ஐயா!
ஐ ஒன்பது நாள் உவ்விடம் நீர் உறைந்து - ஆனாலும்
கல்விக் கோயிலாம் இடைக்காடு மகாவித்தியாலய
வானோங்கு கல்வி நிழல் தரு கோபுரங்கள்
வள்ளல் நின் புனைவால் இன்றும்
நமசிவாயம்! நமசிவாயம்!! நமசிவாயம் !!! எனும்
நின் நாமமதை இயற்றிக் கொண்டிருக்கின்றன
கர்ணன் வழித்தோன்றிய வள்ளலே!
கரையிலாக் கல்விக்கு கரம்கொடுத்த கலங்கரை விளக்கே!
காலம் தந்த கல்விச் சமூகத்தின் கடவுளே!
பாத்திரம் அறிந்து இடும் பாரி வள்ளலே!
பாரினில் நின் நாமம் கூறிடும் வரலாறு
கிழக்குதிக்கும் ஆதவனை இப்பதி உதிக்க உந்தும்
வார்த்தைகள் இல்லை ஐயா! வள்ளல் நின்புகழ் புனைய
வரலாற்றில் இடம்பிடித்த செம்மலே!
பு,ஜிப்பதற்காய் என்றும் எம் இதயங்களில் நீர்.

என்றும் நின் நிழலில்:
**யா/இடைக்காடு மகா வித்தியாலய**
**பழைய மாணவர் சங்கமும், கல்விச் சமூகமும்.**

(34424)(34-13-18)

# கலைஞன் ஒருவன் உருவாக உகந்த சூழல்கள் மிகத் தேவை

பரதநாட்டியக் கலைஞர் ஜாகிர் உசேன் இந்தியாவில் பிரபல்யமான நாட்டியக் கலைஞர். பத்மஸ்ரீ சித்ரா விஸ்வேஸ்வரனின் மாணவர். உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்று தமது பரதநாட்டியக் கலையை யாவரும் ரசிக்கும் வண்ணம் நிகழ்த்திவருகின்றார்.

இருக்கு வேதம், குர் - ஆன், பைபிள் ஆகிய மும்மத நூல் அறிவு மட்டுமன்றி ஆகமங்கள், இதிகாசங்கள், சாஸ்திர நூல்கள் எனப் பல துறைகளிலும் ஆழ்ந்த அறிவு உடையவர்.

இப்போது யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையில் நடன விரிவுரைகள் நிகழ்த்த வருகைதந்துள்ளார்.

## புலம்பெயர் நாடுகளில் மரபுகளை மீறாது பரதநாட்டிய நிகழ்வுகள்



***கேள்வி:-*** பிறப்பால் முஸ்லிமாக இருந்தபோதும் எவ்வாறு பரதக்கலையில் ஈடுபாடு கொண்டீர்கள்?

***பதில்:-*** எனது சிறுவயதில் சினிமாவில் பார்த்த நாட்டிய நிகழ்வுகள் குறிப்பாக குமாரி கமலா, பத்மினி, வைஜயந்திமாலா போன்றோரின் அரிய நடன நிகழ்வுகள் என்னை நாட்டியம் கற்கத் தூண்டின.

கல்லூரிப் பருவத்தில் என் சொந்த ஊரான சேலத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது, திருமதி சித்ரா விஸ்வேஸ்வரனின் நிகழ்வினை நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாட்டியத்தில் அவருக்கு இருந்த ஈடுபாடும், இலவாகமும் அவரைக் குருவாக ஏற்கத் தூண்டியது.

சென்னை வந்தேன். நடிகர்கள் ரஜனிகாந்த், சத்தியராஜ், நல்லிகுப்புசாமிச் செட்டியார் போன்றோரின் உதவிபணம் பெற்றுக் குருகுல முறையில் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் அவர்களிடம் 5வருடங்கள் நாட்டியத்தை முழுமையாகக் கற்றுத் தேறினேன்.

***கேள்வி:-*** நவீன உலகில் வளர்ந்துள்ள தொழில்நுட்பம் பரதக்கலையில் எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகின்றது என நீங்கள் கருதுகின்றீர்கள்?

***பதில்:-*** பரத நாட்டியத்தைப் பொறுத்தவரையில் நவீன தொழில்நுட்பம் பெரிதாக எதனையும் செய்துவிட முடியாது; சாதித்துவிடவும் இயலாது. ஆடுபவர் அக்கலையில் ஆழ்ந்து, ஊறி, அனுபவித்து வெளிப்படுத்தும்போதுதான், அது பார்வையாளர்களை - சுவைஞர்களைத் தன்வசப்படுத்துகின்றது.

நவீன தொழில்நுட்பம் நாட்டிய நாடகங்களில் ஒலி, ஒளி அமைத்து அதன் தரத்தைச் சற்றே மேம்படுத்த உதவும். அவ்வளவுதான்.

***கேள்வி:-*** பர்தநாட்டியக்கலை இன்னமும் ஒரு மரபு சார்ந்த கலையாகக் கைக்கொள்ளப்படுகின்றதா அல்லது நவீன முறைகள் பின்பற்றப்படுகின்றதா?

***பதில்:-*** பரதநாட்டியம் இப்போதும் ஒரு மரபு சார்ந்த கலையாக மட்டும்தான் கொள்ளப்படுகிறது அதனுடைய அடிப்படைக் கூறுகள் எதனையும் மாற்றாமல் கலைஞன் தன்னுடைய கற்பனைத் திறத்தைப் புதுப்புது அனுபவங்களாகக் கொள்ளும் போது அது கலையின் வேறொரு பரிமாணமாக வெளியாகின்றது. நவீன முறைகள் என்று சொல்லப்படும் உத்திகளெல்லாம் நாட்டிய நாடகங்களில் மட்டுமே கைக்கொள்ளப்படுவதற்கு சாத்தியங்கள் உண்டு.

### பொருளாதார ஆதரவு கலைத்தேடலை ஊக்குவிக்கும்

***கேள்வி:-*** பரதக்கலை ஆற்றுகை செய்யும் பொழுது ஆற்றுகை செய்பவருக்கும் கலைஞர், சுவைஞர் ஆகிய இருசாராரும் வெற்றியடையும் உறவு முறையை (Win-Win Relationship) எவ்வாறு விருத்திசெய்யமுடியும்?

***பதில்:-*** கலைஞர்கள் நடனக்கலையை மேடையில் ஆற்றுகை செய்யும்பொழுது பார்வையாளர்கள் தங்களுடைய திருப்தியினைக் கைதட்டுதலின் மூலமாக - கரகோஷம்செய்து - வெளிப்படுத்தலாம். இது கலைஞனுக்கு மிகுந்த மனநிறைவைத் தருகின்றது. அதேசமயத்தில் கலைஞர்களது நிகழ்வுகளுக்கு பொருளாதார ஆதரவு அளிக்கும் பட்சத்தில், கலைஞனது அடிப்படைத் தேவைகள் நிறைவேறி அவன் தனது தேடலைக் கலைகளின் பக்கம் முழுமையாகத் திருப்ப முனைகின்றது. புதிது புதிதாக அளிக்கை செய்வதற்கு ஊக்குவிப்பதாகவும் அமையும்.

***கேள்வி:-*** பரதக்கலை விருத்தியில் ஊடகங்களின் பங்களிப்பு எத்தகையது என்று நீங்கள் கருதுகிறீர்கள்.

***பதில்:-*** பரதக்கலையைப் பொறுத்தவரையில் சினிமாக்கலையின் மூலம் பாமர மக்களையும் அது சென்றடைந்திருக்கின்றது. அந்த அளவில் பரதம் புகழ்பெற்றது. திரைப்படங்களின் மூலமே என்பது நிச்சயம். மேலும், புகழ்பெற்ற நடன ஆசிரியர்களான தண்டாயுதபாணிபிள்ளை, வழுவூர் இராமையாபிள்ளை, உதயசங்கர் போன்ற மேதைகள் திரைப்படத்துறையில் பங்காற்றியதால் இக்கலை இந்தியாவில் மட்டுமன்றி, உலகம் முழுவதற்கும் பரவக் காரணமாயிற்று. தற்போது தொலைக்காட்சி, பத்திரிகை என்ற இரு ஊடகங்களும் நாட்டியத்திற்கு ஓரளவு உதவி புரிகின்றன; உற்சாகம் அளிக்கின்றன.

**பிரபல நாட்டியக் கலைஞர் ஜாகீர் உசேன் உதயனுக்கு அளித்த விசேட செவ்வி**

### இளம் கலைஞர்களுக்கு

***கேள்வி:-*** இளம் நடன்கலைஞர்கள் அறிமுறை, செய்முறைகளில் மேலும் வாண்மை விருத்தியடைய உங்களது ஆலோசனை என்ன?

***பதில்:-*** நாட்டிய உருப்படிகளைக் கையாளும்போது, உருப்படியின் இலட்சணம், சொல்லவரும் உட்கருத்து, சூழல், அந்தப் பாத்திரத்துக்கு ஏற்படையதான அடிப்படைக் கூறுகள், கருப்பொருள் போன்ற பல்வேறு அம்சங்களைக் கருத்திற்கொண்டே நாட்டிய அமைப்புச் செய்யவேண்டும். நடனக் கலைஞன் தனது கற்பனைத் திறனுக்கு ஏற்ப, பாத்திரப் படைப்பை மீறாத புதிய யுக்திகளைக் கையாள்வதன் மூலம் பார்வையாளர்களைப் புதியதோர் உலகிற்கு இட்டுச்செல்லமுடியும்.

***கேள்வி:-*** கடந்த தசாப்த காலங்களில் மலர்ந்த எழுச்சிப் பாடல்களுக்கு நாட்டிய அமைப்புச் செய்வது குறித்துத் தங்களுடைய கருத்து என்ன?

***பதில்:-*** நாட்டியக் கலைஞர் ஒருவருக்கு, அடிப்படையில் பரந்துபட்ட அறிவு, இலக்கிய, இலக்கண நூலறிவு, சித்தாந்த தத்துவங்களைப் பற்றிய பார்வைகள், புராண, இதிகாசக் கதைகள், வரலாறு, சிற்ப, சோதிட சாத்திரங்களில் அறிவு சமகால இலக்கியத்தில் ஆழ்ந்த சிந்தனை, நடனத்தின் கூறுகளை அறிவியலோடு ஒப்பீடு செய்து ஆய்வுசெய்யக்கூடிய தன்மை இவற்றுக்கும் மேலாக மொழி அறிவு கற்பனை வளம் ஆகியன. தேவையாகும்.

எழுச்சிப்பாடல்களின் கருத்துக்களுக்கு அமைவாக, உகந்த நாட்டிய முத்திரைகள், அடவுகள் போன்றவற்றைப் பயன்படுத்தி, அத்துறைசார்ந்த வல்லுநர்கள் உணர்வுபூர்வமாக நாட்டிய அமைப்புச் செய்வதன் மூலம் சமூக விழிப்புணர்வை உருவாக்கமுடியும்.

***கேள்வி:-*** இன்றைய இயந்திரமயப்படுத்தப் பட்ட வாழ்க்கை முறையில் பரதக்கலை எத்தகைய ஆன்மீகப் பங்களிப்பைச் செய்யமுடியும்?

***பதில்:-*** ஆன்மீகத்தை முழுமையாக அனுபவித்து பரதக்கலையைப் பயிலும்பொழுது மட்டுமே ஆன்மீகத்துடன் ஒன்றமுடியும். அத்தோடு. பரதக்கலையைத் தொடர்ந்து கற்று ஆற்றுகை செய்வதன்மூலம் ஆன்மீக உணர்வைப் பெறுவதுடன், ரசிகர்களும் அவ்வுணர்வைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கலாம்.

### புலம்பெயர் நாடுகளில்...

***கேள்வி:-*** தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பரதநாட்டியக் கலை எவ்வாறு, எத்தகைய பண்பாட்டு, விழுமியங்களைப் பேணி நிற்கின்றது? உங்களது அபிப்பிராயம் என்ன?

***பதில்:-*** புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள் அளப்பரிய சேவையைச் செய்து வருகிறார்கள். பரதநாட்டிய மரபுகளை மீறாது ஆற்றுகை செய்து கொண்டிருக்கும் அதேவேளை, அவர்களின் ஊடாகத் தமிழ்மொழித் தொன்மை, கலாசாரம் மரபுகள் நிறையவே பாதுகாக்கப்படுகின்றன.



**செவ்விகண்டவர்:**
**ஞானசக்தி கணேசநாதன்**
(விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி)

***கேள்வி:-*** வாழ்வியல் முறையில் பரதநாட்டியத்தின் தாக்கம் எத்தகையது என்று கருதுகின்றீர்கள்?

***பதில்:-*** அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படும்பொழுதுதான் கலைநுகரப்படும். அகச் சூழலும் புறச்சூழலும் சரியாக அமையும்பொழுதே ஒரு கலைஞன் உருவாகமுடியும். அந்தவகையில் ஒரு கலைஞனின் வளர்ச்சிக்கு அவர் வாழும் சூழலே உதவி செய்கின்றது என்பது வலியுறுத்தப்படவேண்டிய ஒன்றாகும்.

*

# மணல் அனுமதிப்பத்திரத்தின் முடிவுகாலத்தை நீடிக்குக

## பொதுமக்கள் கோரிக்கை

வரணி,ஜூலை25

வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பணிமனை மூலம் மணல்பெறுவதற்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் ஒரு மாதம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

அதேவேளை, பத்திரத்தில் குறிப்பிட்ட கால கட்டத்தின் பின்பே மணல் வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. இதனால், தாம்பெற்ற அனுமதிப் பத்திரத்தின் கால எல்லையை புதுப்பிக்க மீண்டும் அதே உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு மணல்பெறுவோர் அலைக்கழிய வேண்டியுள்ளதாகப் பயனாளிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்பு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் கால எல்லை பற்றி எதுவும் கூறப்படவில்லை. தற்சமயம் மத்திய அரசினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமே பாவனையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. யாழ். அரச அதிபரின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் மூலமே இவ்வனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது.

எனவே, இவ்வனுமதிப்பத்திரத்தின் கால எல்லையைக் குறைந்தது 3 மாத காலத்திற்காவது நீடித்து வழங்கினால் பாவனையாளர்களின் சிரமம் குறையும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துப் பாவனையாளர்களின் சிரமத்தைக் குறைப்பார்கள் எனப் பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ஒ-170)

# டெங்கு ஒழிப்புத் தினத்தையொட்டி யாழ். வைத்தியசாலையில் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜூலை25

டெங்கு ஒழிப்ப நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சின் பணிப்பிற்கமைய யாழ். போதனா வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட இச்சிரமதானத் துப்புரவுப் பணியில் வைத்தியசாலைச் செயலாளர் இ.பத்மநாதன், கணக்காளர் மு.விஜயரகுநாதன், நிர்வாக உத்தியோகத்தர் ப.மகேந்திரதாஸன் உட்பட அனைத்து நிர்வாகப் பிரிவு உத்தியோகத்தர்களும் இணைந்து துப்புரவுப் பணியினை மேற்கொண்டனர்.

காலை 10மணி தொடக்கம் 12மணிவரை இடம்பெற்ற இச்சிரமதானப் பணியில் வைத்தியசாலை வளவின் ஒரு பகுதி புல், செடி வெட்டித் துப்புரவு செய்யப்பட்டதுடன், கழிவு நீர் வடிகாலும் துப்புரவு செய்யப்பட்டது.

இதுவரை நாளும் தடங்கியிருந்த கழிவுநீர் வாய்க்கால் நீர் ஓடக் கூடியவகையில் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து இருவாரங்களுக்கு ஒரு முறை வெள்ளிக்கிழமைகளில் இத்தகைய டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகச் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

இதேபோல வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவினரும் இப்பணியினை மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(4-15)

# சத்தியசாயி சேவா நிலைய ஏற்பாட்டில் சுழிபுரத்தில் இன்று மருத்துவமுகாம்

வட்டுக்கோட்டை,ஜூலை25

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள மூன்றாவது இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுழிபுரம் காட்டுப்புலம் அ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி மருத்துவ முகாமில் யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர்களால் உடல் நோய்கள் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகளும் வழங்கப்படவுள்ளன.

சிறுவாகள் உட்பட அனைவருக்குமான பரிசோதனைகள் இந்து மருத்துவ முகாமில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-161)

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வரும் மேற்படி கண்காட்சியில் இடம்பெறுவதற்காகப் புதிய வரவாகப் பல்வேறுபட்ட இந்திய வெளியீடுகள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன என்பதையும் சனி, ஞாயிறு வாரஇறுதி நாள்களிலும் வழமைபோல் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம்பெறும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-36319)(21-19-34-11)


## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலனசபைத் தர்மகர்த்தா

**செல்லத்துரை இராசையா (நடராசா)**

அவர்கள் 22.07.2004 இல் இயற்கையெய்திவிட்டார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம்.

(34443)
(26-21-11-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 12 - 08 - 1955



இறப்பு 05 - 08 - 2003

**திருமதி வேலாயுதம் தவமணிதேவி**

எங்கள் ஆலமரம் சாய்ந்ததுவோ! விழுதுகள் நாம்
கலங்கி நிற்கின்றோம். துளிர்த்து நிற்கின்றோம்
உங்கள் இடத்தை இனி யார் நிரப்புவர்?
நிரப்ப முடியும் கண்ணீர் வடித்துக் கதறி அழுகின்றோம்.
நீங்கள் எப்போதும் எம்முடன் கலந்து நிற்பீர்கள்,
நல்வழி காட்டுவீர்கள் என்று ஆறுதலடைவோமாக!

இன்று (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற முதலாம் வருட ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ராணி மில் ஒழுங்கை,
நெல்லியடி, கரவெட்டி.

அன்புக் கணவர் - தேசிங்கம்,
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள்.

(34345) (26-21-19-11)

பேச்சு மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தடையாக இருக்கும்

# ஜே.வி.பியின் போக்கைக் கண்டிக்கிறது அரசாங்கப் பொதுச் சேவைகள் சங்கம்

பாண்டிருப்பு,ஜூலை25

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாவதற்குத் தடையாக இருக்கும் ஜே.வி.பியின் போக்கை அகில இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் கண்டித்துள்ளது. ஜே.வி.பியின் இந்தப் போக்குக்கு எதிராகப் போராடவும் தயாராக உள்ளதாக சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகச் சங்கத்தின் செயலாளர் க.நடராசா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதான முன்னெடுப்புக்களின் வெளிப்பாடாக வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபையை உருவாக்கி, அதனைத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் முன்வரவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் செய்து கொண்ட சமாதான (புரிந்துணர்வு) ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு, சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலமே மீண்டும் ஒரு கொடிய யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியும். இத்தகைய பொறுப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கும், குறிப்பாக இக்கூட்டமைப்பின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்கும் உள்ளதென்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

இந்நாட்டில் குறிப்பாக தென்னிலங்கையின் கடந்த காலங்களில் விலை மதிக்க முடியாத - ஆயிரக்கணக்கான - அதுவும் தமது சொந்த இனத்தைச் சார்ந்த - உயிர்களையே கொலை செய்த ஜே.வி.பி. இன்று ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடிந்திருக்கிறது. இந்நிலையில் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயக அரசியலுக்குள் பிரவேசிப்பதை ஜே.வி.பி. போன்ற அரசியல் கட்சிகள் தடுக்க முற்படுவது வேடிக்கையானதாகும்.

இன்று நாட்டில் நிலவுகின்ற அமைதிச் சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி, தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதன் மூலம் தமிழ்மக்களின் மனிதாபிமான அவசர புனர்வாழ்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் - என்று அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



நல்லூர் வடக்கு விநாயகர் வீதியைச் சேர்ந்த

**திரு. அம்பலவாணர் இராஜரட்ணம்**

அவர்கள் கடந்த 22.07.2004 அன்று வட மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ கு.பொ.. சி.வரதராஜா அவர்கள் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணஞ்செய்து கொண்டார்.

இவர் ஓய்வுபெற்ற பொலீஸ் திணைக்கள எழுதுவினைஞரும் நிர்வாக உத்தியோகத்தரும் யாழ்ப்பாணம் ச.தொ.ச பதில் பிராந்திய முகாமையாளரும் ஆவார். இவரின் சேவை மேலும் மேன்மையுற வாழ்த்துகிறோம்.

உரிமையாளர்:
றாஜிகா நகைத் தொழிலகம்,
கல்வியங்காடு.

(34510)(26-21-11-19)

வாழ்த்துவோர்:
இ.குணராசா குடும்பம்.


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

PACKED BY:
ROYAL Industries Colombo
☎ : 0112334603




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
: 021 222 2567

(C/36310) சத்திரத்துச் சந்திக்கு அருகில் →


## நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**வெஸ்லி சுகேந்திரன் செல்வநாயகம்**

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



மண்ணில் 1937-01-05 விண்ணில் 2003-07-25

ஆறிரு மாதங்கள் சென்றகன்றதப்பா
ஆறவில்லை எம் நெஞ்சத்து நினைவலைகள்
மாறாத துயரத்தை எமக்களித்து
மறைவாகிச் சேர்ந்தீரோ இறைவன் பாதம்.

சாத்தனை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(34399)(21-11-19)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி இராசலட்சுமி
மகன்: டேவிட் சுதாகர்

## பலாலி வைத்தியசாலையில் புதிய விடுதித் தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை25

பலாலி இராணுவ வைத்தியசாலையில் புதிய விடுதித் தொகுதி ஒன்று கடந்த 21 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டிருப்பதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில்:-

தொடர் மாடிக் கட்டடத்தைக் கொண்ட இந்த விடுதித் தொகுதியை யாழ்.மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் சந்திரபாலா திறந்து வைத்தார்.

இந்த விடுதித் தொகுதியில் ஈ.சீ.ஜி. பிரிவு, வைத்திய அதிகாரி காரியாலயம், நோயாளர் உணவகம் என்பன அடங்குகின்றன.

இந்த மேல்மாடிக் கட்டடத்தில் பயிற்சி மண்டபம் ஒன்றும் மேலும் விடுதி ஒன்றும் இவ வருட இறுதிக்குள் அமைக்கப்படவுள்ளன - என்று உள்ளது.

## கனடா இலக்கியத் தோட்ட சிறுகதைப் போட்டி முடிவுகள்

கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும், 'காலம்' இலக்கிய இதழும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாவது பரிசு 'இலைகள்' என்ற சிறுகதைக்கும் (என்.சொக்கன் பெங்களூர், இந்தியா), இரண்டாவது பரிசு 'பேட்டை' சிறுகதைக்கும் (புகழ், சென்னை, இந்தியா), மூன்றாவது பரிசு 'ரோத்தான்' என்கின்ற சிறுகதைக்கும் (பழனிசாமி சுப்பிரமணியன், சிங்கப்பூர்) கிடைத்துள்ளன.

முதலாவது சிறுகதைக்கான பரிசுத் தொகையாக 10 ஆயிரம் இந்திய ரூபா கனடா இலக்கியத் தோட்டத்தினால் வழங்கப்படுகின்றது.

இரண்டாவது சிறுகதைக்கான பரிசுத்தொகையாக 6 ஆயிரத்து 666 ரூபா ரொறன்ரோ, கனடாவில் இயங்கி வருகின்ற ஞானம் ஸ்ருடியோவினால் வழங்கப்படுகிறது. மூன்றாவது சிறுகதைக்கான பரிசுத் தொகையாக 100 டொலர்களை ரொறன்ரோவில் இருந்து வெளிவரும் வாராந்த பத்திரிகையான சுதந்திரன் வழங்கியுள்ளது.

## ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பம்

அச்சுவேலி,ஜூலை25

ஜீ.ச.ஈ.சாதாரணதரம் - 2004 பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடவிரும்பும் ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்குப் பரீட்சைத் திணைக்களம் படிவங்களை அனுப்பி வைத்துள்ளது.

புதிதாகப் பணியில் ஈடுபடவிரும்பும் ஆசிரியர்கள் பாடசாலைக்ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பொதுப் படிவத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய இறுதித்தினம் எதிர்வரும் 30ஆம் திகதியாகும். (எ-11)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலி



**அமரர் குமாரவேலு தர்மலிங்கம்**

(முன்னாள் பிரபல வர்த்தகர்,
K.A. வேலுப்பிள்ளை ஸ்ரோர்ஸ் - பதுளை,
விநாயகர் ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

தோற்றம் 30-07-1934 மறைவு 25-06-2004

நாள்கள் தான் முப்பத்தொன்றாயினும்
ஆறவில்லை எம் துயர்
நீண்டதோர் சோகமாய் நிலைத்திட வைத்தீர்
கொண்டதோர் அன்பால்
புலம்புகின்றோம் நாம் மீண்டும்
எப்போ காண்போம் உங்கள் இனிய முகம்
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

115, ஓட்டுமடம் வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்.

(34432)(34)

| | | | |
|---|---|---|---|
| | ரா. | வெ. | சனி |
| | இராசிச் சக்கரம் | | சூரி. ▲ செவ். |
| | | | புதன் வியா. |
| | | கே. சந். | |

# இந்த வார இராசி பலன்

## 25.07.2004 – 31.07.2004

**மாற்றம்:**

அரசியலில் திடீர் திசைமாற்றம் ஏற்படும். புதிய நெருக்கடி ஒன்று வரும். உதவிகள் ரூபத்தில் உபத்திரவம் கொடுக்கும. இந்தியாவின் தலையீடு அதிகரிக்கும். தெற்கு அரசியலவாதிகள் தடுமாறி நிற்பர். அயல்நாடான இந்தியாவில் வன்செயல்கள் அதிகரிக்கும். மத்தியகிழக்கு நாடுகளில் கலகங்கள் மேலிடும். வன்செயலாளர்கள் - தீவிரவாதிகள் அழிவுகளைச் செய்வார்கள். இந்துசமுத்திரம், அரபிக்கடல் பகுதிகளில் திடீர் காற்றழுத்தம் ஏற்பட்டு அயற்பிரதேச நாடுகளில் மழை வீழ்ச்சி கொடுக்க இடமுண்டு எனக்கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

தொழிலில் மந்தநிலை, பணவரவு குறைவு, இடமாற்ற யோசனை ஏற்படும். பித்தக்குழப்பம் இருக்கும். எனவே இஞ்சி பாவித்துவரவும். தூரத்திலிருந்து பிள்ளைகளிடமிருந்தோ அல்லது சகோதரரிடமிருந்தோ நற்செய்திகள் வரும். புதிய திட்டங்களால் தொழில்நிலையில் மாற்றங்கள் ஏற்படும். தூரத்துப் பிரயாணங்களைத் தவிர்க்கவும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### இடபம்

பணவரவு, பெரியவர்கள் உதவிகள் செய்வார்கள். வீடு மனைச் சிறப்புக் கிடைக்கும். பிறரிடமிருந்து செய்திகள் வரும். பணம்வரும் எனச் சொல்வதற்கில்லை. புத்திரரால் நன்மை கிடைக்கும். புதிய முயற்சியால் பணவரவுக்கு வழிதேடுவீர்கள். இடமாற்றங்கள் காணி, பூமிச் சேர்க்கைக்கு வழிபிறக்கும். சளி, கிரந்தி, விறைப்புக் கொடுக்கும். வியாபாரிகள், சங்கீதக் கருவிகளைத் தொழில் துறையாகக் கொண்டவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### மிதுனம்

ஏன் குடும்பத்தவர்களுடன் வாக்குவாதப்படுகின்றீர்கள்? புதிய திட்டத்தால் பொருள்வரவு கொடுக்கும். சகோதர உதவிகள் கிடைக்கும். மறைமுக எதிரிகளால் தொல்லைகள் கிடைக்கும். பித்தக்கலக்கம் கொடுக்கும். தூர இடத்திற்குப் போய் இழப்பைச் சந்திக்காதீர்கள். நீதித் துறை, குருத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

### கடகம்

முயற்சிகள் பலக்கும். சகோதர உதவிகள் கிடைக்கும். போட்டிகள் ஏற்படும். புதிய நணபர்கள் வந்துசேருவார்கள். அடிக்கடி குடும்பத்தில் சகோதரங்களுடனோ அன்றிப் புத்திரருடனோ வாக்குவாதம் கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மை கிடைக்கும். அரச உதவிகள் கிடைக்கும். மந்திர;தந்திர வேலைகளில் நாட்டம் கொள்ளும். பல், வயிறு போன்ற இடங்கள் தாக்கப்பட்டு வைத்தியம் செய்வீர்கள். அரசியல்வாதிகள், ஆசிரியர்கள், பாதுகாப்புத் துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன்.*

### சிங்கம்

இவ்வாரம் போராட்டமான காலமாகும். தாய்வழிச் சகோதர வழியினர்கள் உதவிகள், ஆலோசனைகள் செய்வர். பணவரவு உண்டு. கொடுத்தது மெல்லமெல்லக் கிடைக்க இடமுண்டு. உங்கள் தொழிலில் ஊக்கமாக இருக்கவும். எதிர்ப்பாலார்கள் வீண்பழி சுமத்துவார்கள். தாயாரைப் போற்றுவீர்கள். தாய்வழியினர் உதவி புரிவார்கள். தொழில் ஸ்தானத்தில் கீழ்நிலை உத்தியோகத்தர்கள் உங்கள் சொற்களை மதிக்கமாட்டார்கள். அதனால், பிரச்சினைகள் கொடுகக இடமுண்டு. கால் உளைவு, காயங்கள் வரலாம். வியாபாரிகளுக்கு நன்மை உண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், சனி.*

### கன்னி

பணவரவு தடைப்படும். உறவினர் வரவு கொடுக்கும். பிரயாணத்தில் அலைச்சலுண்டு. உஷ்ணபீடைகள் கொடுக்கும். மாமன் வழியினர்கள், தாய்வழி உறவினர்கள் உதவிகள் கிடைக்கும். கால் விறைப்பு, சளித்தன்மை கொடுக்கும். நண்பர்கள், அரசதுறை அதிகாரிகள் உதவிகள் செய்வார்கள். வியாபாரிகள், ஆசிரியர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

எந்தவிஷயத்தையும் தைரியத்துடன் செயற்படுத்தி வெற்றி அடைவீர்கள். இரகசியமாகக் காரிய மாற்றுவீர்கள். குடும்பத்தினருக்கு சுபகாரிய அனுகூலங்கள் ஏற்பட இடமுண்டு. தாயாருடன் கருத்து வேற்றுமை ஏற்படும். புதிய முயற்சி வெற்றிதரும். சளி, வாய்வுத் தொல்லைகள் சர்வசாதாரணம். இடமாற்றங்கள் செய்யாதீர்கள் பின்பு வருந்துவீர்கள். தொழிலில் ஊக்கத்தைப் பொறுத்து வருமானம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியா., வெள்., சனி.*

### விருச்சிகம்

புதிய நண்பர்களால் ஏமாற்றங்கள் ஏற்படும். திட்டமிட்ட செயற்பாட்டில் மந்தநிலை தோன்றும். அரச அதிகாரிகளால் உதவிகள் கிடைக்கும். கொண்டாட்டங்கள், இனஜன உதவிகள் என்பன கொடுக்கும். கால்வருத்தம், சலவருத்தம், கட்டுப்பாடற்ற தன்மை, மூலநோ என்பன கொடுக்கும். தகுந்த வைத்தியம் செய்துவரவும். தாரவழி அல்லது தந்தைவழியினரின் தொல்லைகள் ஏற்படும். வியாபாரிகள் சிறப்பு அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், வெள்ளி, சனி.*

### தனுசு

திட்டமிட்டுச் செயற்படுத்த முடியாதநிலை தோன்றும். பெரியவர்கள், நண்பர்கள் உதவிகள் கிடைக்கும். ஓடியாடித் திரிந்து மற்றவர்களுக்கு உதவுவீர்கள். தூரதேசத்திலிருந்து செய்திகள்வந்து மனதைக் குழப்பும். வீட்டுச செலவுகள் அதிகரிக்கும். கடற்றுறை, கமிஷன்துறை போக்குவரத்துத் துறையினர்கள் நன்மை அடைவார்கள். கால்பிடிப்பு, சளித் தொல்லைக்கு வைத்தியம்செய்யச் சுகமாகும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியா., வெள்., சனி.*

### மகரம்

புதிய உத்தியால் - தொழில் முயற்சி செய்வீர்கள். பிறருக்கு அடிக்கடி ஆலோசனை சொல்லுவீர்கள். ஆனால், நீங்கள் அதனபடி நடக்கமாட்டீர்கள். தாய்வழியினர், சகோதர வழியினர் உதவிகள் செய்வார்கள். சளி, கிரந்தி, கிருமித்தாக்கம், கால் வருத்தம் கொடுக்கும் வைத்தியஞ்செய்யவும். இடமாற்றமுயற்சி வெற்றியளிக்காது. குருத்துறை, கடற்றுறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியா., வெள்., சனி.*

### கும்பம்

தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவார்கள். பணவரவு சுமாராக இருக்கும். இடமாற்றங்கள் நன்மை கொடுக்கும். சகோதரர்களுடன் கருத்துவேற்றுமை ஏற்படும். வீடுமனையில் சிறப்புவரும். தாய்வழியில் உதவி கிடைக்கும். புத்திரரால் மகிழ்ச்சி அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உதவிகள் கிடைக்கும். சட்டத் துறை, பாதுகாப்புப் பதவி, குருத்துறையினர் நன்மை அடைவர். சளி, விறைப்பு வைத்தியம் செய்யவும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியா., சனி.*


### மீனம்

திட்டமிட்டு ஊக்கமாக இருந்தால நன்மைகள் அதிகரிக்கும். பணவரவு அதிகரிக்கும். வெளிநாட்டுத்தொடர்பு அல்லது வெளியார் நிறுவனங்களால் நன்மைகள் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் நிதானமாக இருக்கலாம். அடிக்கடி உடல்நிலை தாக்கம், படபடப்பு, பலவீனம் கொடுக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை கொடுக்கும். சலவருத்தம், சளி கொடுக்கும். வியாபாரம் சிறக்கும். கூலித் தொழில், போக்குவரத்துப் பகுதியால் வருமானம் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியா., சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

---



புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் நவீன வசதிகள் கொண்ட கட்டடத்தை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் திறந்துவைத்தபின் அங்குள்ள மருத்துவ உபகரணங்களைப் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.

# புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் நவீன வசதிகளுடனான கட்டடம் திறக்கப்பட்டது

புதுக்குடியிருப்பு,ஜூலை25

புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட நவீன வசதிகளைக் கொண்ட கட்டடம் நேற்றுமுன்தினம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

டாக்டர் சிவபாலன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நாடா வெட்டிக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை நிதிப பொறுப்பாளர் பாலதாஸ் ஏற்றிவைத்தார். வைத்திய கலாநிதி அமரர் பொன்னம்பலத்தின் திருவுருவப்படத்துக்கு வைத்தியகலாநிதி கெங்காதரன் மலர்மாலை அணிவித்தார்.

விருந்தினர் உரையை விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் கா.வே.பாலகுமாரனும சிறப்புரையை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் நிகழ்த்தினர். உரைகளைத் தொடர்ந்து மேற்படி கட்டடத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களுக்கு மருத்துவமனையின் பணிப்பாளர் மனோஜ் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

மருத்துவப்போராளி அன்பழகனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. (10)

## 'மலரின் கட்டுரை' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை25

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் செல்வி மலர் சின்னையா எழுதிய 'மலரின் கட்டுரை' என்ற நூலின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர், நாவலர் மணி மண்டபத்தில் சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

விழாவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திருமதி ப.இரத்தினவேல் ஆசியுரையையும், யாழ். பல்கலைக்கழகக் கல்வியியல்துறை விரிவுரையாளர் கலாநிதி ரி.கலாமணி வெளியீட்டையும், வெளியீட்டுரையையும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆய்வுரையையும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வே.ஞானகாந்தன் மற்றும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி தியாகலிங்கம் ஆகியோர் மதிப்புரைகளையும் நூலாசிரியை செல்வி மலர் சின்னையா ஏற்புரையையும் நிகழ்த்துவர்.(எ-201)

## பாடசாலைக்குப் பெயர் வளைவு

வலி.தென்மேற்கு,ஜூலை25

சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் பெயர் வளைவு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இப்பெயர் வளைவு அமைப்பதற்காக 30 ஆயிரம் ரூபா நிதியினைச் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வசித்து வருபவருமான சிவசங்கரப்பிள்ளை தயாபரன் என்பவர் அன்பளிப்புச் செய்துள்ளார். என கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

(எ-135)

## மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு உள்ளகத் தொலைபேசி இணைப்பு

குருநகர்,ஜூலை25

மந்திகை ஆதாரவைத்தியசாலையில் 61 உள்ளக இணைப்புக்களைக் கொண்ட தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இவ் உள்ளகத் தொலைபேசி பரிவர்த்தனை இணைப்புக்களை (Intercom) யுனிசெவ் அமைப்பு வழங்கியுள்ளது.

கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு யாழ். பிரதி மாகாண சுகாதாரச் சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த இத்தொலைபேசி இயந்திரத்தை மந்திகை ஆதார வைத்தியசாலை அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

தற்போது அதனை மந்திகை ஆதார வைதத்தியசாலையின் விடுதிகளில் பொருத்தும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி, தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தை இயக்குவதற்கென யாழ்.பிரதி மாகாண சுகாதாரச் சேவைகள் பணிமனையில் கடமையாற்ந்த தொலைபேசி இயக்குநர் எஸ்.தில்லைநாதன் மேற்படி வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (எ-51)

## படைச் சிப்பாய்கள் 90 பேருக்கு விசேட காலாட்படைப் பயிற்சிகள்

யாழ். பாதுகாப்புத் தலைமையகத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள நிரந்தரப் படைப்பிரிவில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட இராணுவ வீரர்களுக்கு விசேட காலாட்படை பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரிகள் 3 பேரும், சாதாரண சிப்பாய்கள் 90 பேரும், பங்குபற்றி இந்த விசேட பயிறசிகளை முடித்துள்ளனர்.

பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறும் நிகழ்வுகள் கடந்த 21 ஆம் திகதி காலை மேஜர் ஜெனரல் எம்.டி.எஸ்.சந்திரபாலாவின் தலைமையில் வசாவிளான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றன - என்று அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4)

## வீடு வாடகைக்கு

கோப்பாய், இராச வீதியில் பலாலி வீதிக்கும், பருத்தித்துறை வீதி இருபாலைச் சந்திக்கும் அண்மித்து விசாலமான அறைகள், மண்டபம் ( Hall), இணைந்த குளியல் அறை, மலசல கூடங்களைக் கொண்ட சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகத்திற்கோ/வதிவிடத்திற்கோ உகந்தது. டாக்டர்கள் எஞ்சினியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு ஏற்ற வசதியான வீடு.

தொடர்புகளுக்கு: P.ஜெயம்,
இராச வீதி, கோப்பாய்.
(34534) தொலைபேசி இல. 0777493846 (21-19-18)



## பிற்போடப்பட்டுள்ளது

சங்கத்தானை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் 16-07-2004 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு வரும் தீபாவளி தினத்தன்று (11. 11. 2004) அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

(34536) (21-19-18)



## 24 மணிநேர உடனடி அழைப்பு

திவ்ய மருத்துவரிடம் உங்கள் குறையை கூறி இப்போதே விடுதலை பெற நாம் உங்களை அழைக்கிறோம்.

**ஜெப கோபுர தொலைபேசி - 2555400**

**திவ்ய மருத்துவரிடம் உங்கள் இருதயத்தை பரிசோதித்துக் கொண்டீர்களா?**

★ பாரம் தேவையற்ற மனபாரத்தை குறைத்துக்கொள்ள வேண்டுமா?
★ துடிப்பு- திடமான தொனியுடன் கூட துடிப்புடன் துதியினை தொடர்கிறீர்களா?
★ இரத்த அழுத்தம் - மன அழுத்தத்தை விட விசுவாசம் அழுத்தமாயிருக்கிறதா?
★ போசனம் - வாழ்வு தரும் பதார்த்தமான இறை வசனத்தை சந்தோஷத்துடன் ஏற்கிறோமா?

**ஆவிக்குரிய வளர்ச்சிக்கான சஞ்சிகைகள்**

★ இயேசு அழைக்கிறார் -குடும்ப சஞ்சிகை
★ விலையுயர்ந்த முத்து - பெண்களுக்காக (ஆங்கிலம் / தமிழ் / சிங்களம்)
★ நல்ல நண்பன் - வாலிபர்களுக்கு
★ இளம்பங்காளர் திட்டம் -25 வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்கு
★ ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பி.ப 5.30 மணிக்கு அற்புத சுகமளிக்கும் ஆராதனை **இயேசு அழைக்கிறார், இல.15 /1பீ, ஜோசப் ஒழுங்கை, கொழும்பு- 4** இடத்தில் நடைபெறுகிறது.
★ மாதத்தின் இறுதி வெள்ளியன்று உபவாச ஆராதனை மு.ப 9.00 மணி - பி.ப 7.30 மணி வரை
★ மாதத்தின் முதலாவது சனியன்று அற்புத சுகமளிக்கும் ஆராதனை 12 ஏ. லேடி இவ்லின் டி சொய்சா வீதி, இடம. மொறட்டுவையில் நடைபெறும்.
★ எஸ்தர் ஜெபக்குழு ஒவ்வொரு மாதமும் 2ம் சனிக்கிழமை பி.ப 3 மணி முதல் 5 மணி வரை நடைபெறும்.

TALENT

JESUS CALLS MINISTRIES PRAYING FOR THE WORLD

**இயேசு அழைக்கிறார்**
15/1 பீ ஜோசப் ஒழுங்கை,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 4
தொலைபேசி - 2555400
மின் தந்தி - 2598251 (பெக்ஸ்)
காரியாலய தொலை. - 2502520


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 24 - 05 - 1948



மறைவு 25 - 06 - 2004

### அமரர் கந்தையா அமிர்தலிங்கம்

(ஓய்வுபெற்ற களஞ்சிய முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி)

பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் சிகரமாய்
அன்பின் நண்பனாய், சகோதரனாய், நல்லாசானாய் வாழ்ந்த
எங்கள் குலவிளக்கு அழியா நினைவில் நின்று எம்மை விட்டுப்பிரிந்த
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (25-07-2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

குடும்பத்தினர்.

*கிராமசபை ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*
(34538)(42-21-18-19)

தகவல்:
திருமதி அ.மனோரஞ்சிதம் (மனைவி).

## பிரதேச செயலருக்கு மகஜர்

தென்மராட்சி,ஜூலை25

உசன் பகுதியில் படையினர் நிலை கொண்டுள்ள பொதுமக்களின் 19குடியிருப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்கள், பேக்கரி ஆகியவற்றிலிருந்து வெளியேறிய குடியிருப்புக்களின் உரிமையாளர்கள் ஓகஸ்ட் ஐந்தாம் திகதி வரைக்காலக்கெடு விதித்து தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்.

இந்தக் காலக்கெடுவுக்குள் வீடுகளிலிருந்து படையினர் வெளியேறாதுவிடின் ஐந்தாம் திகதி பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (10-117)

## மாணவர்களுக்கு காலை உணவு

தென்மராட்சி,ஜூலை25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்குக் காலை உணவு வழங்குவது ஓகஸ்ட் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

மாணவர்களுக்கு உணவூட்டல் தொடர்பாக வழங்கப்பட்ட படிவத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கூட்ட அறிக்கையினையும் இணைத்து சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு சகல அதிபர்களையும் கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கேட்டுள்ளார். (10-117)

## வெங்காயப் பயிரில் குமிழ் அழுகல்

வலிகாமம்தெற்கு,ஜூலை25

யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்முறை செய்கை பண்ணப்பட்டுள்ள வெங்காயப் பயிரில் குமிழ் அழுகல் நோய்த்தாக்கம் அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்மாவட்டத்தில் உள்ள உடுவில், கீரிமலை, கைதடி, புத்தூர் போன்ற கமநலசேவை நிலையங்களுக்குட்பட்ட விவசாய நிலங்களிலே இதன் தாக்கம் அதிகரித்துள்ளது.

கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர்களால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் 40சதவீத வெங்காயப்பயிர்கள் குமிழ் அழுகல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

குமிழ் அழுகல் நோய் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்குப் பாரிய அச்சுறுத்தலாக விளங்குவதாகவும் இதனைக்கட்டுப்படுத்தாதுவிடின் வெங்காய உற்பத்தியில் இம்முறை 40சதவீதத்தை இழக்க வேண்டி ஏற்படும் எனவும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்த நோயின் தாக்கத்தினால் விவசாயிகள தமது முதலீட்டின் பெரும் பகுதியை இழக்க நேரிடலாம் எனவும் பாரிய நஷ்டத்தை வெங்காயச் செய்கையில் எதிர்நோக்க வேண்டி ஏற படும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (10-152)


## வீடு வாடகைக்கு

*138, கனகரத்தினம் வீதி, யாழ்ப்பாணத்தில் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடன் குளியலறைகள் இணைக்கப்பட்ட ஆறு படுக்கை அறைகளுடன் கூடிய புதிய மாடி வீடொன்று வாடகைக்கு உள்ளது. பத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் தரிக்கக்கூடிய இட வசதி உண்டு. நேரில் அல்லது தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளவும்.*

தொலைபேசி இலக்கங்கள்: 0777 - 897795
(34540)(21-19-18) 0777 - 062005



## வீடு விற்பனைக்கு

இல.15/8, ஓட்டுமடம், செபஸ்தியார் வீதியில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதி களுடனும் அமைந்த மாடி வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
த.கனகரத்தினம்,
இல. 234/6, செபஸ்தியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(34447)



நீர்வேலி
ஐக்கிய விளையாட்டுக் கழகம்
நடத்தும்

## சுற்றுப் போட்டி

எமது கழக விளையாட்டு வீரன்
அமரர் **செ.பரணீதரன்**

அவர்களின் ஓராண்டு ஞாபகார்த்தமாக நடத்தப்படும் (மாவட்ட ரீதியில்) கரபந்தாட்ட, கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*கிரிக்கெட் – 11 பேர், 20 பந்து பரிமாற்றம்*
*6 பேர், 5 பந்து பரிமாற்றம்*
*கரபந்தாட்டம் – செற் அப், ஓவர்கேம்*

விண்ணப்ப முடிவு திகதி: 2004-08-20

தொடர்பு:
**சிவா இரும்பகம்**
குறுக்குறோட்.
நீர்வேலி வடக்கு.
0777-250881

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

(34533)


## கண்ணீர் அஞ்சலி

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின்
செய்தி ஆசிரியர் திரு.கா.குமாரதாஸன்
அவர்களின் அன்பு மாமியார்

திருமதி **உஷாதேவி திருவிளங்கம்**

அவர்களது மறைவையொட்டி கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம். பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

*ஹேமா இல்லம்,*
*நவாலி வடக்கு.*

*செ.ரமேஷ் குடும்பம்* (HSCMF).


## HOUSE TO LET

A modernised house with spacious rooms, hall attached bathroom, toilet etc. is available for rent at Rasa Veethi, Kopay closer to Palali Road, Pt.Pedro Road - Irupalai Junction. Ideal House for N.G.O.O for office or residence. Suitable to Doctors, Engineers , University Lecturers. Contact P.Jeyam on TelephoneNo.0777493846 of Rasa Veethi, Kopay.

(34534) (21-18-19-21)



## கேபிள் T.V. வழங்குபவர்களுக்காக

கேபிள் மூலம் T.V. இணைப்புக்கள் கொடுப்பவர்களுக்காக சிறந்தமுறையில் தயாரிக்கப்பட்ட Power guard உடன் இணைந்த Timer ஓடருக்குச் செய்துகொடுக்கப்படும். இதனைப் பெற்றுக் கொள்ளவும்.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களுக்கும்:

**A.M. Winding Works**
பருத்தித்துறை சாவகச்சேரி வீதி,
அல்லையம்பதி, துன்னாலை.
தொலைபேசி: 0776 157123
(சி-36336) (34-21-18-19)



## டோஹா கட்டார்

## கொரியா கம்பனி சேவைக்காக

| வேலைவாய்ப்பு | தொகை | சம்பளம் |
|---|---|---|
| சிவில் போமன் | 04 | QR 900 (25650/-) |
| மேசன்மார்கள் | 40 | QR 750 (21375/-) |
| தச்சன் (செடலிம்) | 40 | QR 750 (21375/-) |
| பார் வலைஞர் (STEEL FIXCER) | 40 | QR 750 (21375/-) |
| பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் (கட்டிடம்) | 40 | QR 700 (19950/-) |

- மொத்த செலவீனம் ரூபா 45000 மட்டுமே
- கொந்தராத்து இரண்டு வருடங்கள்
- உணவுக்கான செலவீனம் சம்பளத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது.
- தங்குமிடம், வைத்திய வசதிகள் இலவசம்.
- சென்று வருவதற்கான விமான டிக்கட்.
- 8 மணித்தியாலங்கள் படி 6 நாட்களுக்கு வேலை.
- மேலதிக வேலை நேரத்திற்கும் சம்பளம்.

வங்கி கடன் வசதியுண்டு

ஏனைய சட்ட திட்டங்கள் டோஹா கட்டார் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும்.
பாஸ்போட்,பாஸ்போட் அளவிலான புகைப்படங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

TALENT

App: NO: AL/750/Advt/02/04

**ஹேவாஸ் அசோஸியேட்ஸ் (பிரைவட்)லிமிட்**
#05, பிகரிங்ஸ் ரோட்,கொழும்பு 13
License. No : 750 (எட்டியாவத்தை சந்தி அருகாமையில்)


## ஹிருதய பூர்வமான அஞ்சலி

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலய தர்மகர்த்தா

### செல்லத்துரை இராசையா
(நடராஜா)

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத தெரிவித்துக்கொள்வதுடன், அமரரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*கோயில் வீதி,*
*கொக்குவில்.*
(34547) (24-21-18-17)

பிரம்மஸ்ரீ ச.ஸ்ரீசந்தானக்குருக்கள்
குடும்பத்தினர்
(நந்தாவில் அம்மன் ஆலயப் பிரதம குரு).

## நெஞ்சகலாத நினைவஞ்சலி

தோற்றம் 16 - 08 - 1952



மறைவு 22 - 07 - 1993

செல்வி **ஆறுமுகம் ரூபரஞ்சினிதேவி**

பல ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் – உம்
நினைவுகள் எனது நெஞ்சை விட்டு அகலவே அகலாது
ஊரார் இருந்து என்ன? உற்றார் இருந்து என்ன?
சொந்தம் இருந்து என்ன? பந்தம் இருந்து என்ன?
அன்புத் தங்கையே – உன்னைப் போல் ஆகுமா?

பிரம்படி லேன்,
கொக்குவில்.

என்றும் பாசமுள்ள அக்கா:
திருமதி சறோஜினிதேவி

(34531)(34-21-18-19)

# சோழப் பேரரசின் செல்வாக்கு உச்சமாய் இருந்த யாழ்ப்பாணம்

இந்து சமுத்திரத்தின் மத்தியில் மேலை நாட்டையும் கீழை நாட்டையும் இணைக்கும் வர்த்தகப் பாதையின் இதயப் பகுதியில் அமைந்திருக்கும் ஈழத்தின் வடதலைப் பிரதேசமாக விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாடு, பண்டைக் காலந்தொட்டே தமிழ் அரசர்களின் ஆட்சிக்குட்பட்ட ஒரு நனி சிறந்த இராச்சியமாக மிளிர்ந்தது.

புவியியல் நிலையமைப்பின்படி, ஏறத்தாழ

## ஒரு வரலாற்று ஆய்வு


வட அகலாங்கு 9°30' - 9° 50' இற்கு இடையிலும் நெட்டாங்கு 78° 38' - 80° - 35' இற்கும் இடையிலும் அமைந்திருப்பதாலும், மூன்று பக்கமும கடலால் சூழப்பட்டு, தென்திசையில் மட்டுமே நிலத்தொடர்பால் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டிருப்பதாலும் தென்பரத கண்டத்திற்கு மிக அருகில் இருப்பதாலும் யாழ். குடாநாடானது வரலாற்று ரீதியிலும், பொருளாதார, சமூக ரீதியிலும் இலங்கையின் ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது.

இலங்கையின் வரலாற்றுக்கு முந்திய இயக்கர், நாகர் காலம் தொட்டே பல்வேறு ஆட்சிகளால் சிறப்புப் பெற்ற யாழ்ப்பாண இராச்சியம், சோழர்காலத்திலும் பெரும் சிறப்புப் பெற்று விளங்கியிருக்கும் என்பது கண்கூடு.

தொடர்ச்சியான தொல்பொருள் ஆய்வுகள் நிகழ்த்தப்படாமையும், சில அரிய தொல்பொருள் சிதைவுகள் அழிந்துவிட்டமையும், யாழ்ப்பாண இராச்சியத்தின் சோழர் காலம் பற்றிய வரலாறு மழுங்கடிக்கப்பட்டமைக்குரிய காரணங்களாகும்.

### சோழரின் விஸ்தரிப்புக்கொள்கை

அவ்வப்போது நடைபெற்ற தென்னிந்தியப் படையெடுப்புகளுள் ஒன்றாகக் காணப்பட்ட சோழரின் படையெடுப்பு யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டிலும் சரி, இலங்கையைப் பொறுத்த



நாரந்தனையிற் கிடைத்த முதலாவது இராஜராஜனின் நாணயங்கள்

மட்டிலும் சரி ஒரு குறிப்பிடத்தக்க தீர்க்கமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய படையெடுப்பாக விளங்கியது.

தென்னிந்திய இராச்சியங்களுக்குரிய மன்னர்கள் அவ்வப்போது தமது படைகளுடன் இலங்கையின்மீது படையயெடுத்துத் தத்தமது ஆட்புல விஸ்தரிப்புக் கொள்கையினுள் இத்தீவையும் உள்ளடக்கிக் கொண்டனர். கி.பி. 9ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் முதன்முறையாக இவ்வாறான படையெடுப்பொன்றைப் பாண்டிய மன்னனாகிய ஸ்ரீமாற ஸ்ரீவல்லவன் மேற்கொண்டு அநுராதபுரத்தைக் கைப்பற்றி இப புதிய கொள்கையை ஆரம்பித்து வைத்தான். பாண்டியப் பேரரசின் முன்மாதிரியைப் பின்பற்றி பின்னர் இந்தியாவில் எழுச்சிபெற்ற எல்லாப் பேரரசுகளுமே இலங்கையைக் கைப்பற்றுவதைத் தத்தமது திக்விஜயத்தில் இணைத்துக் கொண்டன.

தென்னிந்திய வரலாற்றில் இலங்கையின் பெரும்பகுதியை, தமது ஆட்சியின்கீழ் கொண்டுவர்த பெருமை சோழப் பேரரசையே சாரும். சுமார் 77 வருடங்கள் தொடர்ச்சியான நிலையான ஆட்சியை இலங்கையில் ஏற்படுத்திய சோழர், அவ்வளவு காலமும் தலைநகராக விளங்கிய அநுராதபுரத்தை அழித்து பொலன்னறுவையைத் தலைநகரமாக்கினர்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் பல்லவ வம்சம் வலிமை இழக்க, தொண்டை மண்டலத்தில் சோழர் பிரகாசிக்கத் தொடங்கினர். விஜயாலயச் சோழன் தஞ்சையில் வலிமை குன்றிக் கொண்டிருந்த 'கோ இளங்கோ' என்ற புகழ்பெற்ற முத்தரையரைத் தோற்கடித்து கி.பி. 850இல்

தொகுப்பு:
**தங்கராசா ஜெயகாந்த்**
யாழ். மருத்துவபீடம்

தஞ்சாவூரில் தலைநகரை நிறுவினான். பலமான சோழ இராச்சியம் உருவாவதற்கு இந்த வெற்றி அடிப்படையாக அமைந்தது.

பல்லவ மன்னனான அபராஜித வர்மனும், பாண்டிய மன்னனான இரண்டாம் வரகுணனுக்குமிடையில் நடந்த கடும் போரில் தனக்கு ஆதரவாகப் பங்கேற்ற விஜயாலயச் சோழனுக்கு நன்றிப் பரிசாக அபராஜீதவர்மன் மேலும சில நிலப்பகுதிகளைக் கொடுத்தான். இது தஞ்சையில் உருவாகிய சோழப் பேரரசை மேலும் விரிவுபடுத்த உதவியது.

கி.பி.880இல் 'திருப்புறம்பியப்' போரில் எதிர்பாராத விதமாகச் சோழரால் பாண்டியர், சிங்களவர், கங்கர் ஆகியோரது கூட்டுப்படையணிக்கெதிராகக் கொண்ட வெற்றியானது சோழவம்சத்தின் புதிய உத்வேகத்திற்குக் காரணமானது.

பல்லவ ஆதிபத்தியத்தின் தளர்ச்சியிலிருந்து தொண்டை மண்டலத்தின் தலைமையை முதலாம் ஆதிபத்தியன் மிகவும் சாதுரியமாக திருப்புறம்பியப போரினூடாகக் கவர்ந்து கொண்டான். சோழ வம்சத்த வரின் ஆதிக்க எழுச்சி அயல் நாடான இலங்கையையும் பாதித்தது. பராந்தகனின் படையெடுப்பினால் ஆரம்பிக்கப்பட்ட சோழர் இலங்கையுடன் கொண்டிருந்த தொடர்பு சோழப் பேரரசில் பதவி வகித்த பெருமன்னர்களான இராஜராஜன், இராஜேந்திரன் காலத்தில் பெருவளர்ச்சியடைந்தது.

### அநுராதபுரத்தின் வீழ்ச்சி

முதலாம் இராஜராஜனின் படையெடுப்பினால் ஏறத்தாழ ஆயிரக்கணக்கான வருடங்களாக இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் வீழ்ச்சியுற்றது. இலங்கையின் வடபகுதி கைப்பற்றப்பட்டு மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயருடன் சோழப்பேரரசின் ஒரு மாகாணமாகமாற்றப்பட்டது.

இலங்கையின் தலைநகர் அநுராதபுரத்திலிருந்து இராஜராஜனின் விருதுப்பெயர்களில் ஒன்றான 'ஜனநாத மங்கலம்' என்றுபெயர் சூட்டி பொலன்னறுவைக்கு மாற்றப்பட்டது.

இலங்கை மீதான சோழரின் படையெடுப்பு தமிழ் நாட்டு சாசனங்களுடன் ஒப்பு நோக்கி ஆராய்கின்ற பொழுது இரு கட்டங்களாக நடந்தேறியுள்ளது எனக் கருதப்படுகிறது. ஒன்று இராஜராஜன் காலத்திலும், மற்றையது இராஜேந்திரன் காலத்திலும் நடந்தேறியமைக்கான அகச் சான்றுகள் கிடைத்துள்ளன. இப்படையெடுப்புக்கள் தரைப் படையும் கடற்படையும் இணைந்த வகையில் மேற்கொள்ளப்பட்டது என வரலாறு கூறுகிறது.

### யாழ்ப்பாணத்தில் சோழர் சான்றுகள்

தரைப்படைகள் மாந்தைத் துறைமுக வழியாகவும், குடாநாட்டிலுள்ள 'கௌத்தன்' துறைமுக வழியாகவும் அநுராதபுரத்தை நோக்கி முன்னேறியமைக்கும், கடற்படையணிகள் திருகோணமலையிலும் காலியிலும் தரித்து நின்றமைக்குமான வரலாற்றுச் சான்றுகள் கிடைத்துள்ளன.

முதலாம் இராஜேந்திர சோழனின் ஆட்சியாண்டுக்குரிய சாசனம் ஒன்று ஊர்காவற்றுறையிலுள்ள உறமன் கீல் கோட்டையில் கிடைத்துள்ளது. இச்சாசனம் இராஜேந்திரனின் இலங்கை மீதான படையெடுப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

இலங்கை மீதான இப்படையெடுப்பு இராஜேந்திரனின் படைத்தளபதிகளுள் ஒருவரான 'மூவேந்த சோழவேளாண்' தலைமையில் நடந்ததாக இச்சாசனம் கூறுகிறது. ஒரு பேரரசின் தரைப்படைகள் வந்திறங்குமளவுக்கு அந்தக் காலத்திலேயே வசதிகளைக் கொண்டமைந்ததாக கௌத்தன் துறைமுகம் அமைந்திருந்ததும், படையெடுப்பை மேற்கொண்ட தளபதி பற்றிய கல்வெட்டு யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளமையும், யாழ்.குடா மீதான சோழரின் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது.

யாழ்ப்பாணக்கோட்டையிலிருந்து மீட்கப்பட்ட சோழர் கால சாசனம் ஒன்று "நல்லூரான் ஈஸ்வரமுடையார்க்கு அவ்வூர் சாத்தன் வழங்கிய சாவா மூவாப் பேராடுகள் பத்து" என்று குறிப்பிடுவதிலிருந்து நல்லூரில் சிவன் கோயில் இருந்தது என்பது புலனாகின்றது.

யாழ்ப்பாணத்தில் சோழரின் செல்வாக்கு மலிந்திருந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் ஏராளமாக உள்ளன. ஏட்டிலும் கல்வெட்டுகளிலும் உள்ள இந்த தொல்பொருள் சாசனங்களை சிதைவுறாமற்பேணுவது நமது தலையாய கடமையாகும்.

வரலாற்றுடன் மிகுந்த தொடர்புடைய ஏட்டுப் பிரதிகள் மற்றும் தொல்பொருள்கள் உள்ள



ஊர்காவற்றுறையில் கிடைத்த முதலாம் பராக்கிரமபாகுவின் தமிழ்க் கல்வெட்டு.

வர்கள் அவற்றைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கி அவற்றை வெளிக்கொணர முன்வரவேண்டும்.

★

### உசாத்துணை நூல்கள்

இலங்கை வரலாறு - திரு. செ. கிருஸ்ணராசா
சோழர்காலமும் ஆதிகோணேஸ்வரமும் - திரு. க. வேலாயுதம்
கோணநாயகர் கோயில் வரலாறு - பண்டிதர் ஐ. சரவணமுத்து
கோணேஸ்வரம் - திரு. செ. குணசிங்கம

***படங்கள் உதவி:***
யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு: பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்

# மனிதனை உயர்வடையச் செய்வது தாழ்ச்சி என்னும் உயரிய பண்பு

ஒரு மனிதனின் ஆளுமையை அழகு செய்வது அவனில் காணப்படும் தாழ்ச்சி என்னும் சுபாவம் என்றால் எவராலும் மறுக்க முடியாத உண்மை. ஒருவரின் வாழ்வின் உயர்ச்சிக்கு முதற்காரணமாகத் திகழ்வது அவனது தாழ்ச்சி என்னும் பண்பே ஆகும். தாழ்ச்சி என்னும் புண்ணியத்தை எம்மில் வளர்த்துக் கொள்ளுமிடத்து அது உயர்ச்சியையே வாழ்

**ஞாயிறு நற்பிரசாதம்**

வில் காட்டிக்கொண்டு செல்கின்றது.

இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு நோக்கத்தோடு வாழ்கின்றான். ஒவ்வொருவனும் இந்த உலகில் தன்னுடைய வாழ்வின் இலட்சியத்தினை அடைய வேண்டும், வாழ்வில் உயர்ச்சி பெறவேண்டும், சமுதாயத்தில் நன்மதிப்பு அடைய வேண்டும், என்றும் வாழ்வில் அமைதி அடைய வேண்டும் என்று நாளும் பொழுதும் அலைந்து திரிகின்றான். தனக்குள் இருக்கும் உயர்ந்த சக்தியைப் பற்றிச் சிந்திக்க மறுக்கின்றான். இந்த வேளைகளில் அவன் இழப்புகளைச் சந்திக்க நேரிடுகின்றது. ஒருவன் எப்போது தற்பெருமை மறந்து, ஆணவம் அழிந்து தான் வாழ்கின்ற ஒவ்வொரு கணமும் தன்னை ஏதோ ஒரு இறை சக்தி தன்னை வழி நடத்திக்கொண்டு இருக்கின்றது என்று உணர்கின்றானோ அவனே உயர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைகின்றான்.

தாழ்ச்சி என்பது இறைவனின் கொடை. தாழ்ச்சி குடிகொண்டிருக்கும் இடத்தில் தற்பெருமைக்கு இடமில்லை. தாழ்ச்சியை விரட்டி அடிப்பது இந்தத் தற்பெருமையே. முழு மனித நிறைவைக் கொண்டிருப்பது இந்த தாழ்ச்சி என்ற பண்பே. 'பொறுத்தார் அரசாழ்வார், பொங்கினார் காடாழ்வார்' என்பது முது மொழி. இந்த மண்ணில் விண்ணைக் கட்டியெழுப்ப எமக்கு வழிசெய்வது இந்தத் தாழ்ச்சி என்னும் புண்ணியமே. இதை எம்வாழ்வில் நாம் சில வேளைகளில் மறக்கின்றோம்.

எமது மனித வாழ்வில் பல உயர்ந்த வானத்தைத் தொடுமாப்போன்ற கட்டடங்களைக் கண்டு களிகூருகின்றோம். ஆனால், மண்ணுக்குள் புதைந்திருக்கும் அதன் அத்திவாரத்தைப்பற்றி யாரும் சிந்திப்பது இல்லை. பிரமாண்டமான விருட்சங்களில் நாம் களைப்பாறுகின்றோம்; பெருமிதம் அடைகின்றோம். ஆனால், அதன் வேர்கள் நிலத்துக்கு அடியில் இருப்பதை மறக்கின்றோம்.

எனவே, இந்தத் தாழ்ச்சி என்னும் புண்ணியத்தை நாம் ஒவ்வொருவரும் எம்மில் வளர்த்துக்கொள்ள முனைப்பாக இருக்கவேண்டும். எந்த வேளையிலும் என்னை உயர்ச்சிக்கு இட்டுச் செல்வது இந்தத் தாழ்ச்சியே. இந்த மேலான

*சகோ. எம். செபமாலை பெரேரா*
*அ.ம.தி.*

புண்ணியத்தை இறைவேண்டல் மூலம் எம்மில் அதிகரித்துக்கொள்ள முடியும். தாழ்ச்சியைக் கடைப்பிடித்தால் உயர்ச்சிக்குப் பஞ்சம் என்றும் இல்லை.

★

## மாணவர்களுக்குச் சலுகை

வலி.தெற்கு,ஜூலை25

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பொது நூலகங்களில் அங்கத்தவர்களாகச் சேர்வதற்கு பாடசாலை மாணவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

வழமையாகக் கைக்கொள்ளப்படும் நூலக அங்கத்துவ சட்டதிட்டங்களில் சிலவற்றைப் பிரதேச சபை விலக்கி, மாணவர்கள் இலகுவாக அங்கத்தவர்களாக இணைந்து நூல்களைப்பெற்றுப்படிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (10-152)

## உரக்களஞ்சியமும் உள்ளீடுகள் விற்பனை நிலையமும்

கொழும்புத்துறை,ஜூலை25

அரியாலை தபாற்கட்டைச் சந்திப்பகுதியில் நிக்கொட் அமைப்பின் நிதி உதவியுடன் விவசாயத் திணைக்களத்தினால் உரக்களஞ்சியமும் விவசாய உள்ளீட்டுக்குப் பொருள்கள் விற்பனை நிலையமும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான கட்டடம் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் அமைந்த காணியொன்றில் நிறுவப்பட்டுவருகிறது. இந்த ஆண்டு இறுதிக்குள் இந்த நிலையம் திறந்துவைக்கப்படும் என அரியாலை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (10-30)

# குடாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக!

## அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கு கடிதம்

கொக்குவில்,ஜூலை25

குடாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரச அதிபர் சகல பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்களைக் கேட்டுள்ளார்.

இது விடயமாக அரச அதிபர் பிரதேச செயலர்களுக்கும் உதவி அரச அதிபர்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு சகல பாடசாலைகள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பான தீர்மானங்களை எடுத்தல் வேண்டும்.

மேலும், இந்த நிறுவனங்களுடன் இணைந்து ஒன்றிணைந்த நடவடிக்கையாக மேற்கொண்டு டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

★ ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவினையும் வலயங்களாகப் பிரித்தல்.

★ மக்களிடையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றை பயன்படுத்துதல்.

★ பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் பொது இடங்கள் போன்றவற்றில் நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அடையாளம் காணுதல்.

★ நீர் தேங்கக்கூடிய பேணிகள், வெற்றுப் பாத்திரங்கள், ரயர்கள் போன்றவற்றைச் சேகரித்து அழிப்பதற்கு சகல நிறுவனங்களினதும், தனிநபர்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுதல்.

★ இந்த வேலைத்திட்டத்தை நீண்ட காலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு திட்டமிடுதலும் நடைமுறைப்படுத்தலும்.

★ சுகாதாரமான சுற்றாடலை அமைத்துக் கொள்ளல்.

பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற டெங்கு நோயைக் கட்டுப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைப்பதுடன் இச்செயற்பாடுகளில் முன்னேற்றம் பற்றி மாதாந்தம் 11ஆம், 28ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்குமாறும் அரசஅதிபர் பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார்.

(எ-76)

## வீதிகளாக மாறிவரும் தீவுப்பகுதித் தரவைகள்

ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்.நோக்கிச் செல்லும் இரு பிரதான வீதிகளும் மோசமாகச் சேதமடைந்துள்ளதால் வாகனங்கள் வீதியை விட்டு விலகி தனியார் காணிகளூடாகவும் தரவைப்பகுதிகளூடாகவும் பயணம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, புளியங்கூடல், கரம்பன், சுருவில், அம்பிகைநகர், நாரந்தனை வடக்கு ஆகிய பகுதிகளில் மேற்படி இரு பிரதான வீதிகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

இதனால், பயணிகள் மற்றும் வாகனங்களின் நலன்கருதி சாரதிகள் வீதிக்கு அருகிலுள்ள தரவைப்பகுதி மற்றும் தனியார் காணிகளூடாகவே வாகனங்களைச் செலுத்திவருகின்றனர்.

இதேவேளை, அம்பிகை நகர்ப்பகுதியிலுள்ள தரவையில் அப்பகுதி இளைஞர்கள் உதைபந்தாட்டப் பயிற்சியில் ஈடுபட்டுவருவதால் தரவைப் பகுதியூடாக வாகனங்கள் செல்வதைத் தடுக்கும் பொருட்டு குறுக்கே பனங்குற்றிகளை அடுக்கியும் கிடங்குகளை வெட்டியும் தடை ஏற்படுத்தி உள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இதேபோன்று தனியார் காணி உரிமையாளர்களும் தமது பகுதியூடாக வாகனங்கள் செல்வதைத் தடுக்கும்பொருட்டு தடைகளை ஏற்படுத்தி உள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எதிர்வரும் மழைகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் மேற்படி வீதிகள் திருத்தம் செய்யப்படல் வேண்டும். இல்லையேல், வீதிகளிலுள்ள குழிகளினுள் நீர்தேங்கி அவை வாகனப் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவிற்கு சேதமடையும் வாய்ப்பு உள்ளதாக வாகனச் சாரதிகள் தமது கவலையைத் தெரிவித்துள்ளனர். (எ-16)




யாழ். குடாநாட்டு மக்களுக்கு நற்சேவை ஆற்றிவரும்

"பவர் செலூலர் ரேடிங் கம்பனி"

யாழ்.குடாநாட்டு மக்களின் நன்மை கருதி அதன்சேவையை விரிவுபடுத்தி உள்ளது. 24 மணிநேரத்தில் இணைப்புகளை வழங்கிவருகின்றோம். இலங்கையின் எப்பாகத்துக்கும் இணைப்புகள் பொருத்தித்தரப்படும்.

இது ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் துணைநிறுவனம் மொபிடெல்

உள்வரும் அழைப்புகள் முற்றிலும் இலவசம்

கையடக்கத்தொலைபேசி Unlock மற்றும் சீர்செய்து தரப்படும்.

உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

விற்பனை நிலையம்:
205/1, ராஜா தியேட்டர் கம்பிளக்ஸ்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அலுவலகம்:
185, லலிதா மாடிக் கட்டடம்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 0712 399220, 021-222 7070 (சி-36197)(29-17-18-15)


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான
**அஷ்டலக்ஷ்மி நிறுவன ஸ்தாபகர்**
**'குலபதி' ஆறுமுகம் கந்தையா J.P.**

அவர்கள் 21.07.2004 இல் இந்தியாவில் அமரத்துவம் எய்தினார்.

இவர் கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபர்வத வர்த்தினி அம்பாள் சமேத இராமலிங்க சுவாமியின் (சிவன்) கொடித்தம்ப ஸ்தாபகரும் கொடியேற்ற உபயகாரருமாவார்.

அன்னார் எமது ஆலயத்துக்குச் செய்த திருப்பணிகளையும் சேவைகளையும் நினைவுகூர்ந்து நாம் நன்றிப்பெருக்குடன் அமரருக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

அவரது ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல வீரகத்திப் பிள்ளையாரை இறைஞ்சுகின்றோம். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு விநாயகப் பெருமானின் திருவருள் துணை நிற்கப் பிரார்த்திக்கின்றோம்.

**சி.சுப்பிரமணியம்**

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய
கோயில்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை, கைதடி.

(34555)(40)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
# குமாரவேலு தர்மலிங்கம்

(முன்னாள் K.A. வேலுப்பிள்ளை ஸ்ரோர்ஸ் - பதுளை,
முன்னாள் விநாயகர் ஸ்ரோர்ஸ் ஸ்தாபகரும்,
பிரதம பங்காளரும் யாழ்ப்பாணம்)

தோற்றம் 30-07-1934 | மறைவு 25-06-2004

மாம்பழத்தின் உள்ளே - வண்டு
சென்றதை யார் சொல்வார் கண்டு,
ஐயா! உங்கள் குணம் கண்டு
கொண்டோம் நட்பு நன்றாய்,
போகட்டும் பல ஆண்டுகள்
உங்கள் உன்னத நினைவுகள்
எங்கள் உள்ளங்களில் போகாது மாண்டு!

அமரரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு நாம் ஆறுதல் கூறுவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்
தில்லைக்கூத்தனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உரிமையாளர்கள்:*
ஸ்ரீ விக்கினேஸ்வரா களஞ்சியம் - சாவகச்சேரி,
றூபா பன்முக வர்த்தக நிலையம் - யாழ்ப்பாணம்,
சுப்பர் சூ பலஸ் - யாழ்ப்பாணம்.

(34517)(34-18)

## பொதுத்துறையில் வேலைவாய்ப்பு

# நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோரை சத்தியக்கூற்று அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை25

பொதுத்துறை வேலைவாய்ப்பிற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய 3700 பட்டதாரிகளுக்கு சமாதான நீதிவானின் சத்தியக்கூற்றைப் பெற , தனித்தனியாகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

திறைசேரியின் பிரதிச் செயலாளர் எஸ்.பி. திவாரத்ன மேற்படி கடிதங்களை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

- இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில், சம்பந்தப்பட்ட வேலையற்ற பட்டதாரி தான் அரச, தனியார் கூட்டுத்தாபனங்களில வேலை செய்கிறாரா?, இல்லையா? என்பதனை தெளிவுபடுத்தி -

அதனை சமாதான நீதிவான் முன்னிலையில் உறுதிப்படுத்தி எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், 3ஆவது மாடி, திறைசேரி, கொழும்பு-1" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விவகாரம் குறித்து உதயன் ஏற்கனவே விரிவான செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தமை தெரிந்ததே. (எ-185)

## பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜுலை25

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த தமது சங்கப் பொதுக்கூட்டம், குடாநாட்டில் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுவதன் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்று வலி.தென்மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் அறிவித்துள்ளது. (ஒ-3)

# புலிகளுக்கு உலகவங்கி நிதியுதவி செய்யவில்லை

## வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு,ஜுலை25

உலகவங்கி நேரடியாகவோ மறைமுகமாகவோ விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கமாட்டது என்று உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான உதவிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான 2004 ஆம் ஆண்டுக்கான உலகவங்கியின் அறிக்கையின் தமிழ் பிரதியை விடுதலைப் புலிகளிடம் உலக வங்கி சமர்ப்பித்திருந்தது.

இதைக் கண்டித்து தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நீண்டகடிதம் ஒன்றை பீற்றர் ஹரோல்டுக்கு அனுப்பியிருந்தது.

அக்கடிதத்துக்கு அளித்துள்ள பதிலிலேயே பீற்றர் ஹரோல்ட் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்துள்ளோம். ஆனால், எந்தவொரு நிதி உதவியையும் விடுதலைப் புலிகளுக்கு வழங்கவில்லை என்று தனது பதிலில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகவங்கியின் வெளியீடுகளின் தமிழ் பிரதிகள், விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் வைத்து கடந்தவாரம் வெளியிடப்பட்டிருந்தது.

அந்நிகழ்வுக்கு எதிராக தெற்கில் பல அமைப்புகள் கண்டனங்களைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# கதிர்காமம் சென்ற வானுடன் பஸ்மோதி 10 பேர் மரணம்!

அம்பாந்தோட்டை மாவட்டம், எத்திரிவெவ என்னும் இடத்தில் இருந்து கதிர்காம யாத்திரிகர்களுடன் சென்ற வான் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதில் 10 பேர் உயிரிழந்தனர்; எட்டுப் பேர் காயம் அடைந்தனர்.

கதிர்காமத்துக்கு 20 கிலோமீற்றருக்கு அப்பால் திஸ்ஸமகாராம என்னும் இடத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் ஒரு குழந்தை மற்றும் 3 பெண்கள் உட்படப் 10 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 7 பேர் விபத்து நடந்த இடத்திலும ஏனையோர் அம்பாந்தோட்டை மருத்துவமனையிலும் மரணமானார்கள்.

காயமடைந்தவர்களும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-3-13)

## இறந்த வயோதிபரை இனங்காண மருத்துவமனை ஊழியரிடம் விசாரணை

யாழ்.மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு மரணமான அடையாளம் தெரியாத வயோதிபர் ஒருவரை இனங்காண ஆஸ்பத்திரி ஊழியரை விசாரணை செய்யும்படி யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா யாழ்.பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி தலையில் படுகாயம் அடைந்த வயோதிபர் ஒருவரை அவரது பெயர் விவரம் தெரியாத நிலையில் சிலர் யாழ்.மருத்துவமனையில் சேர்த்திருந்தனர். அவர் பின்னர் அங்கு இறந்துவிட்டார்.

அவரது மரணம் குறித்து யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, நேற்று விசாரணை நடத்தினார்.

பிரஸ்தாப வயோதிபரை மருத்துவமனையில் சேர்த்தவர்கள் தங்கள் விவரங்களை தெரிவிக்காததால் வயோதிபர் தொடர்பான விவரங்களை அறியமுடியவில்லை என்று பொலீஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். வயோதிபரை அனுமதித்தவர்களைக் கண்டுபிடிக்க, அவரை மருத்துவமனையில் சேர்க்கப் பதிவு மேற்கொண்ட மருத்துவமனை ஊழியரிடம் வாக்குமூலம் பெற்று விசாரணைகளைத் தொடரவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி சட்ட வைத்திய அதிகாரிக்கும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-3)

## குழு மோதலில் நான்கு பேர் கொலை!

கொழும்பு,ஜுலை25

அம்பாந்தோட்டை, வீரஹெட்டிய என்னும் இடத்தில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் நால்வர் கொல்லப்பட்டனர்.

இரு குழுக்களுக்கு இடையில் நீண்டகாலமாக நிலவிய முரண்பாடு காரணமாக நேற்று ஏற்பட்ட மோதலின்போது துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாகவும் -

அதில் இவர்கள் உயிரிழந்தனர் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

அம்பாந்தோட்டைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-3-13)

## இன்றைய நிகழ்வுகள்

வலி.தெற்கு,ஜுலை25

சித்தன்கேணி பிரம்மஸ்ரீ சோ.வாசுதேவக் குருக்கள் எழுதிய 'விரதமஞ்சரி' நூல் வெளியீடும், 'வாழ்வியற்கிரியைகள்' நூல் அறிமுக விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் திருமதி வசந்தா வைத்தியநாதன தலைமையில் நடைபெறவுள்ளது.

கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வர ஆலய அறங்காவலர் டி.எம்.சுவாமிநாதன் இதில் பிரதமவிருந்தினராக கலந்துகொள்வார். பிரம்மஸ்ரீ. பா.சண்முகரட்ணசர்மா (கப்பித்தாவத்தை பாலவிநாயகர் ஆலயம்) கௌரவவிருந்தினராக கலந்துகொள்வார். (3-152-175

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை25

புங்குடுதீவு சர்வமத சங்கத்தின் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலை விளையாட்டு விழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புங்குடுதீவு கிழக்கு 10 ஆம் வட்டாரம் சங்கக்கிளை மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பொதுமக்கள், சகல பாடசாலை மாணவர்கள் ஆசிரியைகள் ஆகியோரை பங்குகொள்ளுமாறு சர்வமத சங்கத்தினர் கேட்டுள்ளனர். (3-201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை25

மயிலங்கூடல் ஞானவைரவர் ஆலயத்தின் முக்கிய பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

அனைத்து அடியார்களையும் சமுகமளிக்கும் வண்ணம் ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (3,201)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை25

மானிப்பாய் பரிஷ் மற்றும் யாழ். மத்திய கல்லூரி லியோக் கழகங்கள் நடத்தும் சிகை அலங்கரிப்பாளர்களுக்கான மாபெரும் இலவச சுகாதாரக் கருத்தரங்கும், மருத்துவப் பரிசோதனை முகாமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

அனைத்து சிகையலங்கரிப்பாளர்களையும் இந்நிகழ்வில் சமுகமளிக்கும் வண்ணம் மேற்படி கழகங்கள் கேட்டுள்ளன. (3-201)

மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்தினால் நடத்தப்படும்

மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

முதலாம் பரிசு தங்கப்பதக்கம்

இன்று
25/07/2004
ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 2.00மணி



இடம்: கந்தரோடை சவாரித்திடல்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
- கழகத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் நடராசா



பருத்தித்துறை, 4 ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி கேணிக்கரை வைரவர் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் நடராசா அவர்கள் 22.07.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கம் தங்கச்சியம்மாவின் அன்பு மகனும் கந்தசாமி பொன்னம்மாவின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சிறிஸ கந்தராசா (கிறைண்டிங் மில் - அல்லையம்பதி துன்னாலை, கேணிக்கரை - அளவெட்டி), கலைமதி (கலா), மோகனராசா (இந்தியா), நிர்மலாதேவி (மாலா), நேசராசா (நேசன்) (ரொசான் U.K. லிமிட்டெட் - லண்டன்), பிரசான் (எக்ஸ்போட் லிமிட்டெட்- இலங்கை), விமலா (டெய்சி), நீதிராசா (லண்டன்), சோதிராசா (இநதியா) ஆகியோரின் தந்தையும் பத்மலீலா, பரராஜசிங்கம், யசோதா (இந்தியா), குமாரகுலசிங்கம், சுரேந்தினி (லண்டன்), சக்திவேல் (லண்டன்), தர்சனா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தர்சினி, அஸ்வினி, ஜயப்பிரபாகரன் (லவன்), கம்ஷா (கனிஸ்றா), கபிலன், சஞ்சீவன், சிந்துஜா, சிரோமி, சாருஜா, சோபிகா, சந்துஜா, சிந்துவர்மன் (விஜயன்), இந்துஜா, பானுஜா, ரொசான், பிரசான், விதுசான், சந்திகா, யதுர்ஷன் ஆகியோரின் பேரனும் இராசையா (புத்தளம்), காலஞ்சென்றவர்களான நல்லம்மா, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி - மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணிக்கரை,*
*அளவெட்டி மத்தி,*
*அளவெட்டி.* (34541)(29-40-12)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கனகம்மா பரமலிங்கம்

காரைநகர், வலந்தலையைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா பரமலிங்கம் அவர்கள் நேற்று (24.07.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பரமலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் ஆச்சிமுத்து - ஞானசுந்தரம் தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பரிமளம் தம்பதிகளின் மருமகளும் விமலாதேவி, உதயமலர் (கனடா), குணராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸவரன், மகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவரஞ்சினி, ரமணன், சிவசாம்பவி, மாதங்கி, சங்கீதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கனகரட்ணம், சபாரட்ணம், யோகரட்ணம், ராஜேஸவரி, Dr.விஜயரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.07.2004 செவ்வாய்க்கிழமை 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கந்தரோடை, சுன்னாகம்.* (34557)(29-12-16) - பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி

சிறந்த தொழில் மேதையும் சமய, சமூகத் தொண்டரும், அஷ்டலக்ஷ்மி பதிப்பக உரிமையாளருமான

**குலபதி ஆறுமுகம் கந்தையா**

அவர்கள் இந்தியாவில் காலமாகிவிட்டார். அவரின் மறைவால் துயரிலாழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கும் தமிழ் சமூகத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-ஸ்ரீலங்கா புத்தகசாலை.
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/36350)(40-29-12)

## மரண அறிவித்தல்கள்

### பரராஜசிங்கம் பாலசிங்கம்



யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் பாலசிங்கம் நேற்று (24.07.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - மாரிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும ஜெயலக்ஷ்மியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ப.இராஜரட்ணம், திருமதி க.குணபூசணி ஆகியோரின் சகோதரரும் தனேஸ்வரி, கணேஷ், புவனேஸ்வரி, லோகநாதன், சோமநாதன், மகேஸ்வரி, ஜெயதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2004) திங்கட்கிழமை காலை (பழைய நேரப்படி) 10 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள அவரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யோகா கொமினிக்கேசன்,*
*இல.315, பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*
*(கம்பஸ் சந்திக்கு சமீபமாக)* (சி-36352)(29-40-12)

தகவல்:
பா.லோகநாதன் (மகன்).

### ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய விவசாய ஓவசியர் - அம்பன்)

புலோலி, சாரையடி - குஞ்சியொல்லையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை 23.07.2004 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் முத்துலட்சுமி (ஜேர்மனி) அவர்களின் அன்புக் கணவரும் சந்திரவதனா, சந்திரகாந்தி (ஜேர்மனி), காலஞ்சென்ற இராமநாதன் (மகன்), அமரர் சந்திரராணி (மகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னம்பலம், தர்மகுலசிங்கம் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), இலட்சுமணன் சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் யுகன், உதயராணி, திலீபன், ராதிகா (ஜேர்மனி), ரசீகரன் (ஜேர்மனி), அமரர் ரட்சிகர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக புலோலி, ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*குஞ்சியொல்லை,*
*சாரையடி,*
*புலோலி.* (சி-36353)(29-40-12)

தகவல்:
பொ.தர்மகுலசிங்கம்
(மருமகன்).

# கோஷ்டி மோதலில் ஒருவர் காயம்!

மந்துவில் குமக்கனக்குளம் சந்தியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் நடந்த கோஷ்டி மோதல் ஒன்றில் ஒருவர் காயமடைந்தார். மந்துவில் கிழக்கைச் சேர்ந்த சிவானந்தம் சசிகரன் (வயது-19) என்ற இளைஞரே கழுத்திலும், தலையிலும் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-15-74)

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுக்காணப்பட்டது. மோதிரம், மணிக்கூடு, அவரது சைக்கிள் ஆகியனவும் அங்கு மீட்கப்பட்டன. மானிப்பாய் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரஸ்தாபநபர் வீடு செல்லும் வழியில் கடத்தப்பட்டு அவரிடம் இருந்த திறப்புக் கோர்வை மூலம் வங்கி திறக்கப்பட்டதும் - வங்கிக் கதவுகள் திறக்கப்பட்டபோதும் அங்கு எதுவும் திருடப்படவில்லை என்பதும் - தெரிந்தவையே. (ஒ-3)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களத்தில் சமயாசமய ஊழியராகக் கடமையாற்றும் இவரது சடலத்தில் வாய்க்குள் சுட்ட காயம் காணப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் இருந்து அழைத்துச்செல்லப்பட்ட மற்றொரு இளைஞரின் சடலம் நேற்றுக்காலை மண்டூர் நாகதம்பிரான் ஆலயத்தடியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. மண்டூரைச் சேர்ந்த அழகையா கிருபைராசா (வயது-20) என்ற இளைஞரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டது. இவர் கூலி வேலை செய்பவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3-13)

## நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களின் கைகளில் கராத்தே தாக்குதல் சாதனங்கள் காணப்பட்டன. வட்டத் தொப்பிகளை அணிந்திருந்தவர்கள் சிங்கள மொழியில் பேசினர். தாக்குதலுக்குள்ளான இரு இளைஞர்களும் அவலக்குரல் எழுப்பினர். இதனைத்தொடர்ந்து கடைக்காரர்கள் பொலீஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு யாழ் பொலீஸார் வந்தபோது தாக்குதல் நடத்திய மூவரும் மோட்டார் சைக்கிள்களில் சென்றுவிட்டனர்.

தாக்குதலுக்குள்ளான இரு இளைஞர்களையும் பொலீஸார் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று அங்கு பாதுகாப்பாகத் தங்க வைத்தனர். (ஒ-13)

## அதிரடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருணாவை அழைத்துச் செல்கையில் வழமையாக பிரயாணிகள் செல்லும் வழியோ, விசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் பாதையோ உபயோகிக்கப்படவில்லை. மெய்ப்பாதுகாவலரின் உதவியோடு தனிவழி ஊடாக அவர் விமான நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டார். இந்த நடவடிக்கைகள் அரசின் ஏற்பாட்டிலேயே இந்த வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டன என்பதைத் துல்லியமாகக் காட்டுகின்றன.

சிங்கப்பூர் சென்ற கருணா அங்கிருந்து லண்டனுக்கு புறப்பட்டார் எனத் தற்போது தெரிய வருகின்றது. ஆனால் அதை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

கருணா வெளிநாடு சென்ற விடயம் நம்பத்தகுந்த வட்டாரத்திடம் இருந்து எமக்குக் கிடைத்தது. அந்த மூலத்தை வெளிவிடுவது இப்போதைக்குப் பொருத்தமற்றது.

- இப்படி மேலும் தெரிவித்தார் சிவாஜிலிங்கம் எம்.பி. (ஒ-3)

## வன்முறைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசு மற்றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரும் தாம் என்ன செய்யவேண்டும் என்பது குறித்து கவனமாக உள்ளனர். யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாகத் தமக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் உறுதியாக உள்ளோம் என்று இரு தரப்பினருமே கூறுகின்றனர்.

ஆனால், கள நிலைவரத்தில் காணப்படும் ஸ்திரமற்ற தன்மை சமாதானப் பேச்சு மீண்டும் ஆரம்பிக்கப்படுவதைச் சிக்கலாக்கியுள்ளது.

இரு தரப்பினரிடையே உயர் மட்டப் பேச்சு எதுவும் இடம்பெறாமலேயே 16 மாதங்கள் கழிந்துவிட்டன. இது மிக நீண்ட காலமாகும். இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தற்போது நம்பிக்கை நூலிழையில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் அவர்களை பேச்சு மேசைக்கு மீண்டும் அழைத்து வரமுடியும் என்ற எதிர்பார்ப்பு எமக்கு ஏற்படவில்லை.

வன்முறைகள் முற்றாக நிறுத்தப்படாமல் சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது என்பது முடியாத காரியம்.

சிறிய அளவு சமாதானம், சிறிய அளவு வன்முறை என நீங்கள் கொண்டிருக்க முடியாது. ஆகவே, சமாதான நடவடிக்கைக்கும் வன்முறைக்கும் நடுவே ஒரு வழி கிடையாதென்பதை இரு தரப்புகளுமே உணர்ந்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு செவ்வியில் தெரிவித்தார் நோர்வேப் பிரதியமைச்சர். (ஒ-3-13)

## சென்னை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று இந்திய அதிகாரிகள் ஈழவேந்தனிடம் தெரிவித்தனர்.

ஆனால், ஈழவேந்தன் நேற்றிரவு 10.30 மணியளவில் கட்டுநாயக்கவில் வந்திறங்கிய சமயம் எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவிலலை.

ஈழவேந்தனைத் திருப்பி அனுப்பியமைக்கான காரணத்தை அதிகாரபூர்வமாக இந்திய அரசு வெளியிடாதபோதும், விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்ற காரணத்தால் அவர் திருப்பி அனுப்பப்பட்டிருக்கலாம் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

'சார்க்' அமைப்பில் அங்கம்வகிக்கும் நாடு ஒன்றின் நாடாளுமன்ற உறுப்பினர், அந்த அமைப்பில் அங்கம்வகிக்கும் மற்றொரு நாட்டுக்கு விஸா இன்றிச் சென்றுவர முடியும். இந்த நிலையில் இலங்கையின் எம்.பி. ஒருவர் இந்தியாவில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டமை இலங்கை எம்.பிக்களுக்கு எதிரான அநீதியான செயல் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தியாவின் பிரதமராக மன்மோகன் சிங் பதவியேற்றபின் அவரை வாழ்த்திக் கடிதம் ஒன்றை ஈழவேந்தன் அனுப்பியிருந்தார். அதற்கு நன்றி தெரிவித்து மன்மோகன் சிங் பதில் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார்.

நீண்டகாலமாகத் தமிழகத்தில் வசித்து வந்த ஈழவேந்தன், 2000ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி அவரது வீட்டில் இருந்து அழைத்து வரப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3-13)

# வரதர் தங்க இணங்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறப்பட்டது. அந்தச் செய்தி திருப்தி தருவதாக அமைந்தது எனக் கருதினேன்.

பிரதமராக மன்மோகன் சிங் தெரிவுசெய்யப்பட்டதும் வாழ்த்துச் செய்தி ஒன்றை அவருக்கு அனுப்பியிருந்தேன். இலங்கைத் தமிழர் விவகாரத்தில், தமிழ் மக்கள் தொடர்பான நிலைப்பாட்டில் புலப்படக்கூடிய மாற்றம் இருப்பதாக அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருந்தேன். எனது செய்திக்கு அன்பான நன்றியுடன் கூடிய பதிலை அவர் அனுப்பியிருந்தார். அத்துடன், எனக்கு வாழ்த்தும் கூறியிருந்தார்.

இந்தக் கடிதத்தின் பின் இந்திய அரசின் நோக்கில் நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்ற எதிர்பார்ப்புடன் அங்கு போனேன். அங்கு நடந்த விடயங்கள் எனக்கு ஏமாற்றத்தை அளித்தன.

மன்மோகன் சிங்குக்குத் தெரிந்து நேரடியாக நடக்காமல், ஆசாரி விடைதந்தும் பூசாரி இடம்கொடுக்காதது போல, கீழ்மட்ட நிலையில் உள்ள அதிகாரவர்க்கத்தினர் எடுத்த முடிவாக இது இருக்கலாம் என நினைக்கிறேன்.

'சார்க்' நாடுகளளுக்கு மிக முக்கிய விருந்தினர் கடவுச்சீட்டுடன் முன் அனுமதி 'விஸா' இன்றிச் செல்லமுடியும் என்று விமான நிலைய அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டினேன். தற்துணிவு அதிகாரத்துடன் அரசு முடிவுகளை எடுக்க முடியும் என அவர்கள் தெரிவித்தனர்.

"தமிழக அரசினதோ அல்லது வேறு எவரிடமோ இருந்து உத்தரவு வரவில்லை. புதுடில்லியில் இருந்துவந்த முடிவுப்படியே செயற்படுகின்றோம்" என்று அவர்கள் கூறினர்.

கடந்த தடவை போன்று குண்டுக்கட்டாக தூக்கி என்னை நாடுகடத்தவில்லை. மிகவும் அன்பாகவும் பண்பாகவும் நடத்தினார்கள்.

சர்ச்சைக்குரிய வரதராஜப் பெருமாள் போன்றவர்களுக்குத் தஞ்சம் அளிக்கும் பாரதம் இந்தியாவின் நலனில் அக்கறையுள்ள என் போன்றவர்களை நாடு கடத்தியதுதான் வியப்பாக இருந்தது.

இந்தியா இப்படி என்னை அகௌரவப்படுத்தி நடந்துகொண்டமைக்காக ஆத்திரப்படப் போவதில்லை. இயேசுபிரான் கூறியது போல, பிதாவே அறியாமல் தவறு செய்யும் இவர்களை மன்னிப்பீராக! என்பது போல ஆத்திரப்படாமல் செயற்படுவோம். - என்றார் அவர். (ஒ)


புதிய பிரிவு
ஆரம்பம்: 01.08.2004 10.00 a.m.

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Ms Office | 3 Months | 1800.00 |
| Diploma in Internet Technology | 3 Months | 3000.00 |
| Diploma in Hardware Engineering | 4 Months | 3750.00 |
| Diploma in Desk Top Publishing | 3 Months | 2400.00 |

★மிகக் குறைந்த கட்டணம்.
★அதிநவீன வசதிகளுடன் கூடிய கற்பித்தல் முறைமை.
★தவணை முறையிலான கட்டண வசதி.
மேலதிக விவரங்களுக்கு: இயக்குநர் IBMS
(சி-36038) # 410, K.K.S. Road Jaffna.


# குடாநாட்டில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றல்களை இன்று உலகிற்கு வெளிக்காட்டுவோம்.

இயல்பு நிலை குன்றாத வகையிலும், மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையிலும் போக்குவரத்துச் சேவைகளை வழமை போன்று நடத்துமாறு வேண்டுகின்றோம். அனைத்து வாகனங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு சேவையில் ஈடுபடுமாறு வேண்டுகின்றோம்.

அதேவேளை, மருந்து விற்பனை நிலையங்கள், மீன், மரக்கறிச் சந்தைகள் வழமைபோல் இயங்கலாம்.

தமிழர்களை அழித்துச் சிங்கள பௌத்த நாடாக இலங்கையை மாற்ற இன்று முயன்றுகொண்டிருக்கின்றனர். இதனை தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மீண்டும், மீண்டும் ஜூலைக் கலவரத்தைத் தமிழர்கள் தங்கள் நினைவில் கொள்வார்கள். இதற்குரிய பதிலை நிச்சயம் கொடுப்பார்கள் என்பதை வலியுறுத்தும் வகையில் இன்றைய துக்க நாளை அனைத்துத் தரப்பினரும் அனுஷ்டிக்கும் வகையில் கறுப்புப்பட்டி அணிந்தும், வீடுகள், வேலைத்தளங்களில் கறுப்புக்கொடி பறக்கவிட்டும், கறுப்பு ஜூலை நினைவுக் கூட்டங்கள் நடத்தியும் துக்கநாளை முன்னெடுக்குமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப் பூரண ஆதரவு வழங்குமாறு யாழ். மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம், தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் ஆகியவை உட்படப் பொது அமைப்புக்கள் பலவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

**திருமலையில்**

1983ஆம் ஆண்டு நடந்த வெலிக்கடைச் சிறைப் படுகொலை நினைவாக திருகோணமலை மாவட்டத்திலும் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு, அன்றாடச் செயற்பாடுகளை நிறுத்தி இத்துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதேவேளை - வெலிக்கடைத் தியாகிகள் நினைவாக அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறவுள்ளது.

கவிஞர் வ.வில்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய்க்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று விஜயம் மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)


பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)

வீட்டு வகுப்பு
O/L 2004, தரம் 10, 9, 8, 7
வகுப்புகளுக்குரியது
கணிதம்
சங்கர்
உங்கள் வீடுகளுக்கு வந்து கணிதம் A சித்திபெற கற்பிக்கப்படும்.
11/2 மணித்தியால ஒரு வகுப்புக்குரிய கட்டணம் 100 ரூபா மட்டுமே!
தொடர்பு: DIRECTOR
New Science Hall,
Kannathidy Road, Jaffna.
T.P.: 0777-917611 (34542)(12-16-30)








இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தினகரன்   உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

25-07-2004

# அரசின் இழுத்தடிப்பால் நோர்வேக்கு அலைச்சல் புலிகளுக்கு எரிச்சல்

சமாதானச் செயற்பாடுகள் தொடர்பான தமது முயற்சிகளில் மனம்தளராமல் நோர்வே அனுசரணையாளர் குழுவின் தலைவரும். நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கஸன் இன்று முதல் ஐந்து நாள் விஜயம் ஒன்றை இலங்கையில்



மேற்கொள்கின்றார். ஜனாதிபதி. சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இணைந்து ஆட்சியைப் பிடித்தபின் உத்தியோக பர்வமாக அனுசரணைப் பணியை மேற்கொள்ள ஜனாதிபதி நோர்வேயை அழைத்திருந்தார். அதன் பின் ஹெல்கிசனும். எரிக் சொல்ஹெய்மும் அடிக்கடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். கொழும்பு. வன்னி என்று மாறி மாறிச் சென்ற அவர்கள் அரசுத்தரப்பு மற்றும் எதிர்த்தரப்புத் தலைவர்களுடனும் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடனும் பேச்சுகள் நடத்தினர். ஆனால். சமாதானச் செயற்பாடுகள் அடுத்த கட்டத்துக்கு நகர்வதாயில்லை. மாறாக இறுக்கமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

## யுத்தத்தை நோக்கி...

எந்த நேரத்திலும் சமாதானத்துக்கு விடைகொடுத்து யுத்தத்தை வரவேற்கும் நிலையில் இலங்கைத் தீவு இருப்பதை கடந்தகால நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. விடுதலைப் புலிகளினால் தமது அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்து. கிழக்கில் படுகொலைகளை மேற்கொண்டு வருவதில் அரசும். அரசுப்படைகளும் தீவிரமாக இருக்கின்றன. அத்தகைய செயற்பாட்டை அரசு நிறுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இலங்கை அரசுக்குச் செய்தி அனுப்பினார்கள். இந்த விடயத்தில் அரசு உருப்படியாகச் செயற்படாவிட்டால். யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் சமாதானச் செயற்பாடுகள் கேள்விக்குறியாகும் நெருக்கடிக்குள்ளாகும் என்று அச் செய்தியில் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். ஆனால். அந்த எச்சரிக்கைக்கு அரசு உருப்படியான நடவடிக்கை எதனையும் எடுத்ததாகத் தகவல் இல்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கையும். சமாதானச் செயற்பாடுகளும் நெருக்கடி நிலைக்குள் சிக்கியிருக்கும் நிலையில். அதிலிருந்து மீண்டும். சமாதானச் செயற்பாடுகளை உறுதியாக முன்னெடுப்பதற்குப் பதிலாக அரசு புதிய கதை ஒன்றைக் கிளப்பிவிட்டிருக்கின்றது.

## அரசின் கதை

இராணுவம் நெருங்க முடியாத அளவுக்கு திருமலைத் துறைமுகம் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ளது என்ற புதிய 'பூச்சாண்டியை' அரசு கசியவிட்டுள்ளது. இன்று இலங்கை வரும் நோர்வே அனுசரணையாளர்களிடம் இந்த விவகாரத்தைப் பிரஸ்தாபிக்கப் போவதாக அரசுத் தரப்பு கூறுகின்றது. ஏப்ரல் 2ஆம் திகதி நடந்த தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த சந்திரிகா தலைமையிலான சிறுபான்மை அரசு இன்னமும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிருபிக்கமுடியாத நிலையில் அல்லாடிக்கொண்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளை ஏற்று. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகப் பேச்சுக்களை ஆரம்பித்தால். ஆட்சி கவிழ்வதைத் தவிர்க்க முடியாது என்ற யதார்த்த நிலையைத் தவிர்ப்பதற்காக. சமாதானச் செயற்பாடுகளை சாக்குப் போக்குக் கூறி தாமதப்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை அரசு இறங்கியுள்ளது என்று கூறப்படுகின்றது. அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிப்பதாக இருந்தால். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றி முதலில் பேசவேண்டும். அப்பேச்சின் மூலம் உருவாக்கப்படும் இடைக்கால நிர்வாகம் மூலம் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்க வேண்டும். அதன்பின் நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசலாம் என்றும் - வெட்டு ஒன்று துண்டு இரண்டு - விடுதலைப் புலிகள் தெரிவித்துவிட்டனர். இந்த நிலைப்பாட்டில் விடுதலைப் புலிகள் மிகவும் உறுதியாகவும் இருக்கின்றனர். ஆனால். இடைக்கால நிர்வாகம் பற்றி முதலில் பேசக்கூடாது. இடைக்கால நிர்வாகத்தைப் புலிகளிடம் வழங்கினால் ஈழம் வழங்கியதாகிவிடும் என்று அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. உரத்துக்குரல் எழுப்புகின்றது. இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட மாட்டாது என்ற உறுதிதந்தால் அரசு கவிழாமல் தொடர ஆதரவு தருவோம் என்று நிபந்தனை போடுகின்றது ஹெல உறுமய. விடுதலைப் புலிகளுடன் முதலில் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசாமல். இடைக்கால நிர்வாகம் பற்றியும் இறுதித்தீர்வு பற்றியும் சமாந்தரமாகப் பேச்சுக்கள் என ஆட்சியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் இடைஇடையே குரல் கொடுக்கின்றனர். ஆட்சியைத் தொடர்வதா? பங்காளிக் கட்சிகளின் சொல்லை ஏற்றுப் பேச்சுக்கு நிபந்தனைகள் விதிப்பதா? அல்லது சாக்குப் போக்குக்கூறி சமாதானச் செயற்பாடுகளை இழுத்தடித்துச் செல்வதா?

## அரசின் குழப்பம்

இவற்றுக்கு விடை காணமுடியாத நிலையில் சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களும் நாட்டின் தலைவியும் உள்ளனர் என்பது வெள்ளிடை மலை.

## புதிய துரும்புச் சீட்டு

கருணாவை வைத்து கிழக்கில் குழப்பங்களை ஏற்படுத்தி வந்த அரசும் அரசுப் படைகளும் இப்போது. திருகோணமலைத் துறைமுகம் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ளது என்ற புதிய துரும்புச் சீட்டு ஒன்றை வீசியுள்ளன. ஜனாதிபதியின் விசேட அழைப்பின் பேரில் இன்று வரும் நோர்வே அனுசரணையாளரிடம் இந்த விவகாரத்தைக் கிளப்ப அரசு முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால். நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிஸனின் தற்போதைய விஜயம் முக்கியத்தும் பெறுகின்றது. சமாதானச் செயற்பாடுகளின் நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதில் முக்கிய பங்கை அவர் வழங்கப் போகின்றார் என அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால கருத்து ஒன்றை வெளியிட்டுள்ளார். கடந்த சில மாதங்களில் அடிக்கடி நோர்வே அனுசரணையாளர்கள் வந்து போனார்கள். அவர்கள் வருகைக்குமுன் சமாதான முயற்சிகளின் அடுத்தகட்ட நகர்வாக நிகழ்ச்சி நிரல் பற்றிப் பேசுவார்கள். பேச்சுக்கான திகதியை அறிவிப்பார்கள் என்று 'ஓஹா ஆஹா' என பேச்சுக்கள் அடிபடும்.

## சமாதான முயற்சிகள் தொடருமா? அல்லது 4ஆவது ஈழப்போர் வெடிக்குமா?



ஆனால். அரசுத் தலைவர்கள் மற்றும் விடுதலைப் புலிகளுடன் அவர்கள் பேசிவிட்டு. வெறுங்கையுடன் நாடு திரும்புவதைத் தான் காணமுடிந்தது. அதே நேரத்தில் அவர்கள் இந்தியாவுக்குச் சென்று. பேச்சு முன்னேற்றம் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறுவார்கள் என்றும் ஒரு செய்தி வெளியாகும். அரசு பதவியேற்று நான்கு மாதங்களை எட்டும் நிலையிலும் இவைதான் வழமையாகிவிட்ட நிகழ்ச்சிகளாகும். அரசின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளரின் கூற்றுப்படி. ஹெல்கிஸனின் வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தால். சமாதானச் செயற்பாடுகள் அடுத்த கட்டத்துக்கு நகரும். இல்லையேல் நெருக்கடி நிலைக்குள் சிக்கும் என்பது மட்டும் உறுதி. சமாதானச் செயற்பாடுகள் சீராக முன்னெடுக்கப்படுமா? அல்லது நாலாவது ஈழப் போருக்கு வழி திறக்கப்படுமா? இவைதான் இன்று மக்கள் மத்தியில் எழும் கேள்விகள்.

## ஜூலைக் கலவரம்

நாடும் மக்களும் இப்படியான ஓர் இருண்ட சூழ்நிலையில் சிக்கியிருக்கும் போது மற்றொரு கறுப்பு ஜூலை வந்துள்ளது. 1983ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பாரிய இன அழிப்பு யுத்தம் ஒன்றின் 20 வருட காலப் பூர்த்தி இன்றாகும். 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி திருநெல்வேலியில் நடந்த இராணுவ வாகனத் தொடரணி மீதான தாக்குதலை அடுத்து. தெற்கில் வெடித்த இன அழிப்பு யுத்தத்தின் வடு இன்னமும் தமிழ் மக்களின் மனதில் இருந்து அகலவில்லை. சுட்டும். வெட்டியும். உயிருடன் நெருப்பில் போட்டு எரித்தும் தமிழர்கள் கொல்லப்பட்டதும் அவர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டதும் என

**குகா**

தமிழ் மக்களுக்கு எதிராக பெரும் அராஜகம் அரங்கேறியிருந்தது. அதில் சிக்கியவர்களில் பலர் இன்னமும் அந்தக் கொடூர நிகழ்வுகளில் இருந்து வெளியே வரவில்லை. பயங்கரவாதத்துக்கு அடிக்கல் நாட்டிய சிங்களப் பேரினவாதம் தொடந்து வரும் காலங்களிலும் தமது அராஜகப் போக்கை அரங்கேற்றி வந்ததை தமிழ் மக்கள் இன்னமும் மறக்கவில்லை.

## அராஜகச் சட்டம்


1979ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் மக்களுக்கு எதிராக ஆரம்பித்த கடும் போக்குக் காரணமாக உருவானதுதான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற அராஜகச் சட்டம் கடந்த 25 வருட காலமாக அச்சட்டம் தமிழ் மக்களின் குரல்வளையை நெரித்து வந்துள்ளது. சட்டம் நிறைவேற்றப்பட்ட கையோடு. படை அதிகாரி ஒருவரை யாழ்ப்பாணம் அனுப்பி இளைஞர்களைக் கைது செய்து. சித்தரவதைகளுக்கு உட்படுத்தியதை ஈழத்தமிழர் இன்னமும் மறக்கவில்லை. மிளகாய்ச் சாக்குக்குள் முகத்தைச் செலுத்தியும். தலை கீழாகத் தொங்கவிட்டும். தண்ணீர் தொட்டிக்குள் முகத்தை அமிழ்த்தியும். சிகரட்டால் சுட்டு வடுக்களை ஏற்படுத்தியும் பேரினவாதம் தமிழ் இளைஞர்களுக்கு எதிராக மேற்கொண்ட கொடூரத்தை இன்று நினைத்தாலும் நெஞ்சம் அதிரும். அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு கால்நூற்றாண்டு கழிந்துள்ள இன்றைய நிலையில் இந்தக் கொடூர நிகழ்வுகளை மீட்டுக்கொள்ளும் அதே நேரத்தில். மீண்டும் அத்தகைய கொடூரம் இந்த மண்ணில் இடம்பெற அனுமதிக்கமாட்டோம் என்று தமிழர்கள் சபதம் எடுத்துள்ளனர். இதில் இலங்கைக் கல்வியியலாளர்களும் கைகோத்துள்ளனர் என்பது மனதுக்கு இதமளிக்கும் ஒரு விடயம்.

## நிம்மதி எப்போது?

ஆனாலும். மீண்டும் எப்படியாவது அமைதிப் பேச்சு ஆரம்பிக்கப்பட்டு சமாதான ஒளிக்கீற்று தெரிய ஆரம்பித்தாலேயே மக்கள் ஓரளவாவது நிம்மதி அடைய முடியும். ஆனால். அரசு தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளில் உறுதியான நிலைப்பாடொன்றை எடுக்காது. இழுத்தடித்தால் நோர்வே அனுசரணையாளர் களுக்கு அலைச்சலும் விடுதலைப் புலிகளுக்கு எரிச்சலுமே மிஞ்சும். ஆனால். அதன் முடிவில் அழகிய இந்தத் தீவில் எது மிஞ்சும் என்பதுதான்... ★

# ஜே.வி.பி.வளர்கிறது சுதந்திரக்கட்சி தேய்கிறது

## மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் குறித்தபார்வை



இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற 6 மாகாண சபைகளுக்குமான தேர்தலில் அவதானிக்கவேண்டிய முக்கிய விடயம் ஒன்று உள்ளது ஜே.வி.பி. ஈட்டியுள்ள வெற்றியே அது வாகும்.

ஆறு மாகாணங்களிலும் மொத்தமாக ஜே.வி.பியின் சார்பில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட 73 வேட்பாளர்களில் 71 வேட்பாளர்கள் மாகாண சபைகளுக்கு உறுப்பினர்களாகத் தெரிவாகியுள் ளனர்.

ஜே.வி.பியின் சார்பில் மாத்தறை மாவட்டத் தில் நிறுத்தப்பட்டிருந்த ஐ.எஸ்,யு மௌலானா என்பவரும், கண்டி மாவட்டத்தில் நிறுத்தப் பட்டிருந்த சிசிர சேனாதீர என்பவரும்-மொத்த மாக இருவர் மட்டுமே தோற்றனர்.

அத்துடன், ஜேவி.பி. வேட்பாளர்கள் கொழும்பு, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட் டங்களில் அதிகூடிய வாக்குகளைப் பெற்று முதலாமிடத்தில் நின்றனர்.

2004 ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. 39 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றி ருந்தது. தற்பொழுது ஆறு மாகாண சபைகளி லும் மொத்தமாக 71 மாகாண சபை உறுப்பினர் களைப் பெற்றிருக்கிறது.

இந்த ஆறு மாகாணங்களிலும் மொத்தமாக வுள்ள 15 மாவட்டங்களில் 23 அரசியல் கட்சி களையும் 35 சுயேச்சைக் குழுக்களையும் சேர்ந்த 4ஆயிரத்து 134 வேட்பாளர்கள் மாகாண சபைகளுக்கான தேர்தலில் நிறுத்தப்பட்டிருந்த னர். இந்த வேட்பாளர்களில் இருந்து ஆறு மாகாணங்களுக்கும் மொத்தமாக 316 மாகாண சபை உறுப்பினர்கள் தெரிவாகினர்.

**- டன்ஸ்ரன் லூயிஸ் -**

மொத்த உறுப்பினர் எண்ணிக்கையான 316 பேரில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. ஆகி யவற்றுடன் முஸ்லிம் கட்சிகள், இடதுசாரிகள் ஆகியோர் உள்ளடங்கும் ஐக்கியமக்கள் சுதந் திர முன்னணி (UPFA) 189 மாகாணசபை உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டது. இந்த 189இல் ஜே.வி.பி. 71 ஆசனங்களைப் பெற்றுள் ளது. கொம்யூனிஸ்ட் கட்சி இரு உறுப்பினர்க ளையும் மகாஜன எக்சத் பெரமுண (MEP) ஒரு உறுப்பினரையும் பெற்றன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் ஏனையோர் சேர்ந்து மொத் தமாக 115 உறுப்பினர்களைப் பெற்றுள்ளனர்.

### ஐ.தே.கவின் பரிதாபநிலை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆறு மாகாண சபைகளையும் கைப்பற்றிக்கொண்டது. மாகாணசபை வரலாற்றில் முதன்முறையாக ஐக்கிய தேசியக் கட்சி ஒரு மாகாணசபையைத் தானும் தனது ஆட்சியின்கீழ் வைத்திருக்க முடியாத துர்ப்பாக்கியமான அரசியல் தோல்வி யைத் தழுவியது. தான் ஏற்கனவே ஆட்சி செலுத்திய மேல் மாகாணசபை, மத்திய மாகாண சபை, ஊவாமாகாணசபை ஆகியவற்றையும் ஐக்கிய தேசியக்கட்சி இழந்தது.

கடந்த பொதுத் தேர்தல் நடந்து முடிந்த சிலநாள்களுக்குள் நடந்த வயம்ப மாகாணத் துக்கான மாகாணசபைத் தேர்தலிலும் மொத்த மாகவுள்ள 52 ஆசனங்களில் 31 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியே கைப்பற் றியிருந்தது.

இலங்கையில் உள்ள மொத்தம் எட்டு மாகாணசபைகளிலும்- ஆளுனர் ஆட்சி நடை பெறுகின்ற வடக்கு -கிழக்கு மாகாணசபையைத் தவிர- ஏழு மாகாண சபைகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியே தற் பொழுது நடைபெறுகிறது.

### வாக்காளரின் ஆர்வக்குறைவு!

அண்மையில் நடைபெற்று முடிந்த ஆறு

**மாகாணசபைத் தேர்தல் - முடிவுகள் 2004**

| கட்சிகள் | ஆசனங்கள் |
|---|---|
| **வயம்ப மாகாணசபை** | |
| சுதந்திர முன்னணி | 31 |
| ஐ. தே. க. | 19 |
| மு. காங். | 02 |
| மொத்த ஆசனங்கள் | 52 |
| **மேல் மாகாணசபை** | |
| சுதந்திர முன்னணி | 57 |
| ஐ. தே. க. | 39 |
| மு. காங் | 04 |
| மே. ம. மு. | 01 |
| ஜனநாயக ஐ. மு | 01 |
| மொத்த ஆசனங்கள் | 102 |
| **வடமத்திய மாகாணசபை** | |
| சுதந்திர முன்னணி | 20 |
| ஐ. தே. க. | 10 |
| மு. காங். | 01 |
| மொத்த ஆசனங்கள் | 31 |
| **தென் மாகாணசபை** | |
| சுதந்திர முன்னணி | 34 |
| ஐ. தே. க. | 19 |
| மொத்த ஆசனங்கள் | 53 |
| **ஊவா மாகாணசபை** | |
| சுதந்திர முன்னணி | 19 |
| ஐ. தே. க. | 12 |
| ம. ம. மு | 01 |
| மொத்த ஆசனங்கள் | 32 |
| **சப்பிரகமுவா மாகாணசபை** | |
| சுதந்திர முன்னணி | 26 |
| ஐ. தே. க. | 15 |
| இ. தொ. கா. | 01 |
| மொத்த ஆசனங்கள் | 42 |
| **மத்திய மாகாணசபை** | |
| சுதந்திர முன்னணி | 28 |
| ஐ. தே. க. | 26 |
| ம. ம. மு. | 02 |
| மொத்த ஆசனங்கள் | 56 |

மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை, கடந்த ஏப்பிரலில் நடைபெற்ற 13 ஆவது நாடாளு மன்றத் தேர்தலுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் மாவட்ட ரீதியாக அளிக்கப்பட்ட செல்லுபடி யான வாக்குகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) மாகாண சபைகளுக்கான தேர்தலில் மாவட்ட ரீதியாகப் பெற்ற வாக்குக் கள், நாடாளுமன்றத் தேர்தலில் மாவட்ட ரீதியா கப் பெற்றிருந்த வாக்குகளிலும் பார்க்க வீழ்ச்சி நிலையைக் கண்டுள்ளது.

இதற்கான பொதுவான காரணம் நடந்து முடிந்த 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிப்பில் காட்டிய ஆர் வத்தை இம் மாகாணசபைகளுக்கான தேர்தலில் காட்டவில்லை. வாக்களிக்கும் தகுதியுடைய பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள் வாக்க ளிப்பில் பங்குகொள்ளவில்லை.

### ஐ.தே.க. ஆதரவு ஊடகங்கள் கருத்து

இவ்வாறாக வாக்களிப்பில் ஆர்வம் காட்டா மூன்று மாதகால ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி (UPFA) ஆட்சியில் மக்கள் அதிருப்தியும் சலிப்பும் அடைந்தமையே என்று ஐக்கிய தேசி யக்கட்சி ஆதரவு ஊடகங்கள் குறிப்பாக ரணில் குடும்பத்தினருக்கு சொந்தமான இலத்திரனியல் ஊடகமொன்றும் அவரது உறவினர்கள், ஆதர வாளர்களால் நடத்தப்படும் அச்சு ஊடகங்க ளும் சுட்டிக்காட்டுகின்றன. இந்த முடிவுக்கு வருவது எவ்வளவு தூரம் சரியாகும் என்பது வெறும் கணித ரீதியான எண்ணக்கருக்களில் மட்டுமல்லாமல் பொருளாதார, அரசியல் ரீதி யான விடயங்களிலும் சமூகவியல் அடிப்படை யில் வாக்காளர்களின் மனித நடத்தைக் கோலங் கள் சார்ந்த விடயங்களிலும் பெரிதும் தங்கியுள் ளது.



### குறுகிய காலத்துக்குள் மாற்றம் நிகழாது

2001 இல் நடைபெற்ற 12ஆவது நாடாளு மன்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 109 ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்தி ருந்தது; ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை தாங்கிய பொதுஜன ஐக்கிய முன்னணி 77 ஆசனங்களைப் பெற்றிருந்தது.

பின்னர் 2002 இல் இடம்பெற்ற உள்ளு ராட்சித் தேர்தலில் மொத்தம் 17 மாவட்டங் களில் அமைந்துள்ள மாநகரசபைகள், நகர சபைகள், பிரதேசசபைகள் ஆகியன உள்ளடங் கும் மொத்தம் 232 உள்ளுராட்சி அமைப் புக்களில் 228 உள்ளுராட்சி அமைப்புக்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது.

ஒரு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த கையோடு மற்றொரு உள்ளுராட்சித் தேர்தலோ அல்லது மாகாணசபைகளுக்கான தேர்தலோ நடைபெற்றால் நாடாளுமன்றத் தேர்த லில் வெற்றியீட்டிய கட்சியோ கட்சிகளின் கூட்டோ அத் தேர்தல்களிலும் வெற்றிநடை போடும் வாய்ப்பு பெருமளவு உள்ளமை அறிவு சார்ந்தும் அனுபவம் சார்ந்தும் தெரிகின்ற உண்மைகளாகவுள்ளன. ஏனெனில், ஒரு குறு கிய காலத்துக்குள் வாக்காளர்களின் பண்புசார், அளவுசார் நடத்தைக் கோலங்கள் மாறாமல் அப்படியே இருக்கும் வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி. (UPFA)

(III ஆம் பக்கம் பார்க்க)

| மாகாணத்தின் மாவட்டங்கள் | 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் | மாகாண சபை தேர்தல் | வித்தியாசம் |
|---|---|---|---|
| 1) மேல் மாகாணசபை | | | |
| கொழும்பு மாவட்டம் | 414688 | 322658 | 92035 |
| களுத்துறை மாவட்டம் | 291208 | 224914 | 66294 |
| கம்பஹா மாவட்டம் | 509963 | 392881 | 117082 |
| 2) வட மத்திய மாகாணசபை | | | |
| அனுராதபுர மாவட்டம் | 212943 | 187977 | 24966 |
| பொலநறுவை மாவட்டம் | 106243 | 91067 | 15176 |
| 3) தென் மாகாணசபை | | | |
| காலி மாவட்டம் | 306385 | 238285 | 68100 |
| மாத்தறை மாவட்டம் | 241235 | 182076 | 59159 |
| அம்பாந்தோட்டை மாவட்டம் | 178895 | 141283 | 37612 |
| 4) ஊவா மாகாணசபை | | | |
| பதுளை மாவட்டம் | 178634 | 169197 | 9437 |
| மொனராகலை மாவட்டம் | 117456 | 97878 | 19578 |
| 5) சப்பிரகமுவா மாகாணசபை | | | |
| கேகாலை மாவட்டம் | 214267 | 185112 | 29155 |
| இரத்தினபுரி மாவட்டம் | 261450 | 213619 | 47831 |
| 6) மத்தியமாகாணசபை | | | |
| கண்டி மாவட்டம் | 268131 | 244595 | 23536 |
| நுவரேலியா மாவட்டம் | 82945 | 89192 | 6247* |
| மாத்தளை மாவட்டம் | 108259 | 92510 | 15749 |

## யாரோடு நோவோம்...?

தமிழ்த்தினப்போட்டிகள் தற்போது பாடசாலைகளிலும், கோட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன. பாடசாலை மட்டத்தில் மாணவர்களைத் தேர்ந் தெடுப்பதற்கும், உரிய பயிற்சிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும், உரிய பயிற்சிகளை வழங்குவதற்கும் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ளவேண்டியிருப்பதாக அதிபர் ஒருவர் சொன்னார். ஆசிரியர்களும் தங்களது கணிப்பீட்டுப்பதிவுகளை ஒழுங்காகப் பேணுவதைவிடுத்து இத்தகைய பணிகளில் ஈடுபடுவதற்குப் பின் நிற்கிறார்கள். பெற்றோர் சிலரும் கூட பாடத்துக்கு அப்பால் சென்று படிப்பைக் கெடுக் கும் இத்தகைய போட்டிகளில் பங்குபற்றுவதிலிருந்து தம் பிள்ளைகளை விலக்கிவைக்கவே விரும்புகின்றனர்.

ஆக, சரியான தேர்வின்மை, போதிய பயிற்சியின்மை, பாடசாலைநேரத்துக்குப் புறம்பாக ரியூசனை இடைநிறுத்திப் பயிற்சிகளில் கலந்துகொள்ள மாணவர்கள் (சில ஆசிரியர்களும்) தயாரில்லாமை போன்ற காரணங்களால் போட்டி நிகழ்ச்சிகளில் தரமின்மை ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒரு கல்விக் கோட்டத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப்போட்டியில் இலக்கிய நயம் கூறும் பாடல் பிழையானதாக வழங்கப்பட்டிருந்தது. பாடநூலிலும் இடம்பெற்றுள்ள புரட்சிக்கவிஞரின் மேற்படி பாடலிலுள்ள பிழையை போட்டிக்காகத் தெரிவுசெய்து எழுதியவர்களோ, நயம் எழுதிய மாணவர்களோ, அவற்றை மதிப்பீடு செய்த நடுவர்களோ கண்டுகொள்ளவில்லை.

அதேபோல, சிறுகதை ஆக்கம் என்ற பெயரில் கதைகளும் கட்டுரைகளுமே பெரம்பாலும் எழுதப்பட்டிருந்தன. பலரது கதைகள் தமிழக மெகா சீரியல்களின் பிரதிபலிப்புக்கள். இவற்றை மதிப்பீடு செய்பவர்களின் இலக்கியத் தரத்தையும் கூட உய்த்துணரக்கூடிய வகையிலேயே மதிப்பீடுகளும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒருவருடைய புலமையை இனங்காண்பதிலுள்ள தவறே இத்தகைய போட்டிகளில் தகுதியற்ற நடுவர்களின் தேர்வுக்கு வழி செய்கிறது.. அதிகாரிகளின் வால் பிடிக்கும் கங்கரியங்கள் கைவந்தவர்களே புலமையாளர்களாயும், தமிழ் வல்லாளர் களாயும் மாறி விடுகின்றனர்.

தமிழ்த்தினப் போட்டிகளில் தேர்வு தொடர்பாகப் பாடசாலைகளுக்கிடையில் பாரபட்சங்கள் நேர்வதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய குளறுபடிகளுக்கெல்லாம் தகுதியான நடுவர்கள் இல்லாமையே காரணமாகும்.

- ஏகலைவன்.

# இந்திய மீனவரின் அத்துமீறல் தொடர்கதையாகும் அவலம்

கடந்த சில தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தங்களால் பெரும் பாதிப்புக்குள்ளாகி அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் துறைகளுள் கடற்றொழிலும் ஒன்றாகும். வடக்கு - கிழக்குக் கரையோரப் பிரதேசங்களில் சில இன்றும் உயர் பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுள்ளதோடு, கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளால் மீனவர்களின் உடைமைகள் நாசமாக்கப்பட்டு இயல்பான வாழ்வும் சீர்குலைக்கப்பட்டது.

இச் சமாதான காலத்தில் அதிலிருந்து மீள்வதற்காக ஒவ்வொரு கடற்றொழிலாளியும் முயற்சித்துக் கொண்டிருக்கும் நிலையில் அதை நசுக்கும் வகையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் காணப்படுகின்றது.

## கடல்வளங்கள்

இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட ஒப்பீட்டுரீதியில் கடல்வளங்கள் நிறைந்த பகுதி வடக்கு - கிழக்குப் பகுதியாகும். ஆழம் குறைந்த அகன்ற கண்டத்திட்டுக்களையும், சிறப்பு வாய்ந்த மன்னார் முத்துக்கடலடித்தள மேடை, பேதுரு மேடை ஆகியவற்றையும் பரந்த உவர் நீர்ப்பரப்புகளையும் பல நன்னீர் வாவிகளையும் கொண்டது வட கிழக்குக் கடற்பிரதேசம்.

ஏற்றுமதிப் பொருள்களான கடலட்டை, சிங்க இறால், இறால், சங்கு, கணவாய், நண்டு போன்றவையும் எமது பிரதேசத்திலேயே அதிகம் பிடிக்கப்படுகின்றன.

கடலக வளங்கள் நிறைந்து காணப்பட்ட போதும இன்று அவை பெருமளவில் வீழ்ச்சியடைந்து செல்கின்றன . 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரை யாழ். குடாநாட்டில் 45 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருந்த கடலுணவு உற்பத்தி அதன் பின்னர் மிக மோசமான வீழ்ச்சியை அடைந்தது.

இதற்குக் காரணங்களாகப் பலவற்றைக் கூறலாம். குறிப்பாக, உயர்பாதுகாப்பு வலயம், இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு

இந்திய மீனவர்கள் ஆரம்பக்காலங்களில் தமது கடல் பிரதேசங்களில் தொழிலை மேற்கொண்டனர். அங்கிருந்த வளங்கள் முழுவதும் அவர்களால் அழிக்கப்பட்டு வளப்பற்றாக்குறை ஏற்பட்டவுடன் எமது கடற்பிரதேசங்களை நோக்கிப் படையெடுத்தார்கள்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய கடற்பிரவேசங்களினால் எமது வளங்கள் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. புதுக்கோட்டை, இராமநாதபுரம், நாகபட்டினம் போன்ற பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான படகுகள் நெடுந்தீவு, மன்னார், வடமராட்சி ஆகிய கடற்பகுதிகளில் அத்துமீறிப்பிரவேசிக்கின்றன.

இந்திய மீனவர்களுக்கு அங்குள்ள வங்கிகள், நிறுவனங்கள் என்பன கடனடிப்படையிலும், உதவியாகவும் பெருமளவு பண வசதிகளைச் செய்து கொடுப்பதால் அவர்கள் நவீன உபகரணங்களைப் பயன்படுத்தித் தொழில் செய்கின்றார்கள்.

அவர்கள் மண்ணை மிக ஆழமாகத் தோண்டி எடுத்துச் சென்று தேவையான வளங்களை எடுத்து விட்டு மிகுதியானவற்றைக் கழித்து விடுகின்றார்கள். இதனால் கடல் இயற்கைத்தாவரங்கள், இயற்கைக்



கல், மணல் குறிப்பாக முருகைக்கற்பாறைகள் அழிவடைந்து செல்கின்றன. காலப்போக்கில் எமது கடல் பிரதேசம் வளங்களற்ற சூனியப்பிரதேசமாக மாறும் அபாயம் உண்டு.

இலங்கையின் வடமேற்கு, தெற்கு, கிழக்கு, போன்ற கரையோரங்களில் முருகைக் கற்பாறைத் தொடர்கள்அமைந்துள்ளன. இந்தப் பாறைத் தொடர்கள் இயற்கையான வேலிகளாக (Break Waters) நிலத்தைப் பாதுகாப்பதுடன், மணல் அரிப்பையும் குறைக்கின்றன.

சில கற்பாறைத் தொடர்களில் காணப்படும் நுண்ணங்கிகள் மருத்துவ ரீதியிலான இயல்புகளைக் கொண்டுள்ளன.

இக்கற்பாறைத் தொடர்கள் இந்திய மீனவர்களின் அளவிற்கு மீறிய மீன்பிடித்தலாலும், 'டைனமைற்' பயன்படுத்துதல், கடல் நிலத்தைத் தோண்டுதல் போன்றவற்றாலும் பாரிய அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. இதனால், கடலின் இயற்கைச் சமநிலை குழம்பும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

## பேச்சு

எமது கடல் வள அழிவைத் தடுக்கும் நோக்கத்துடன் கடந்த மே மாதம் 27 ஆம் திகதி கொழும்பில் இந்தியக் கடற்றொழில் சங்கத்திற்கும், வட - கிழக்குக் கடற்றொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட்டது.

இந்தியாவிலிருந்து கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களின் கடற்றொழிச் சங்கச் சம்மேளனத் தலைவரும் நிரபராதி மீனவர்களை விடுதலை செய்யும் ஒன்றிய அமைப்புத் தலைவருமான விவேகானந்தனும், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நாகபட்டினம் போன்ற மாவட்டங்களின் மீனவப் பிரதிநிதிகளும் -

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலிருந்து யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் பேராசிரியர் எஸ்.சூசையானந்தன், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரெட்ணம், யாழ்ப்பாணம், மன்னார் பிரதேசங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் பேச்சில் பங்கு கொண்டனர். இந்தப் பேச்சின்போது இந்தியத் தரப்பில் மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கரைக்குள் பிரவேசிப்பதைத் தடை செய்வதற்கு 3 மாத கால அவகாசம் கோரப்பட்டிருந்தது.

தலைமன்னாரிலிருந்து 3 மைல் தூரத்திலும், நெடுந்தீவிலிருந்து 5 மைல் தூரத்திலும், வடகடல் காரைநகர் பிரதேசத்திலிருந்து 10 கடல் மைல் தூரத்திலும் இந்திய மீனவர்கள் பிரவேசிப்பது முற்றாகத் தடைசெய்ய வேண்டுமென எமது கடற்றொழிலாளர்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டது. பேச்சின் முடிவில் இக்கோரிக்கை ஏற்கப்பட்டது.

இது தொடர்பான பேச்சுக்கள் நடத்தப்பட்டு இரு மாதங்கள் கூட நிறைவுறாத நிலையில் இன்னமும் இந்திய மீனவர்கள் அதிக எண்ணிக்கையில் அத்துமீறி எமது கடல் பிராந்தியத்தில் பிரவேசித்து வருவது பெரும் அடாவடித்தனமாகும்.

## சம்மேளனத்தலைவர் கருத்து

இது தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத்தலைவர் சி.தவரெட்ணத்திடம் கருத்துக் கேட்டபோது-

எமது மீன்பிடித் துறையின் பாரிய வீழ்ச்சிக்கு இந்திய மீனவர்களின் வருகையே முக்கிய காரணம். எமது கடற்றொழிலாளர்கள் வலுவி குறைந்தவர்களல்லர். வளங்கள் குறைவதாலேயே இத்துறை வீழ்ச்சியைச் சந்திக்கின்றது.

நாம் கொழும்பில் நடத்திய பேச்சு நம்பிக்கையானதாகத் தெரியவில்லை. ஏனெனில், பேச்சு நடந்து 2 மாதங்களாகியும் அதில் எடுக்கப்பட்ட முடிவை நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.

இவர்களின் அடாவடித்தனத்தை முற்றாகத் தடைசெய்வதற்கு எமக்குப் போதிய நிதிவசதிகள் இல்லை. சிறு நிதியுதவிகளைச் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் செய்கின்றன. இதன்மூலம், சில முன்னேற்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம்.

இந்திய மீனவர்கள் தொடர்பாக மீண்டும் இந்தியாவிற்குத் தகவல் அனுப்பினோம். இது தொடர்பாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினோம. வெகுவிரைவில் கடற்றொழில் அமைச்சையும், கடற்படை அதிகாரிகளையும் சந்தித்து இது தொடர்பாகக் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று கூறினார் அவர்.

எமது வளம் எமது பயன்பாட்டிற்குதவாமல் அந்நியரால் சுரண்டப்பட்டு எமது பொருளாதாரம் மழுங்கடிக்கப்படுவதை எமது அரசு உணர்ந்து இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். ★

**தீபா**

# ஜே.வி.பி.வளர்கிறது....

13ஆவது நாடாளுமன்ற தேர்தலில் பெற்றுக் கொண்ட செல்லுபடியான வாக்குகளுக்கும், நடந்துமுடிந்துள்ள ஆறு மாகாணசபைகளுக்கு மான தேர்தலில் பெற்றுக்கொண்ட செல்லுபடியான வாக்குகளுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை ஒரே பார்வையில் அட்டவணையில் காணலாம்.

✻ நுவரலியா மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட மாகாணசபைத் தேர்தலில் 6ஆயிரத்து 247 - வாக்குகளை சுதந்திர முன்னணி அதிகமாகப் பெற்றுள்ளது. நுவரேலியா மாவட்டத்தைத் தவிர ஏனைய 14 மாவட்டங்களிலும் அது பெற்ற வாக்குகள் வீழ்ச்சியடைந்துள்ளமையை அவதானிக்கலாம்.

## ஜே.வி.பி. ஈட்டியுள்ள வெற்றி

*நடந்து முடிந்துள்ள 13 ஆவது நாடாளு மன்றத் தேர்தலுக்கு ஊடாகவும் மாகாணசபைகளுக்கான தேர்தலுக்கு ஊடாகவும் ஜே.வி.பி.ஈட்டியுள்ள வெற்றி சிங்கள மக்கள் மத்தியில் அது மிகப்பலமான அரசியல் ஸ்தாபனமாக காலூன்றத் தொடங்கிவிட்டது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது.*

அத்துடன், இலங்கை அரசியலில் உடனடியாக ஜே.வி.பி. முதன்மை அரசியல் சக்தியாக பரிணமிக்காவிட்டாலும் அது இரண்டாவது பெரிய அரசியல் சக்தியாக மிக விரைவில் மாறிவிடும் என்பதே உண்மை.

## ஸ்ரீலங்கா சு.க. தேய்கின்றது

*பண்டாரநாயக்கா குடும்பத்தினரின் பாரம்பரிய அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் தளத்தைச் தேய்த்துச் சிதைப்பதன் மூலமே ஜே.வி.பி. வளர்ந்து ஓங்குகிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில சிரேஷ்ட அங்கத்தவர்கள், தமது கட்சியினர் ஜே.வி.பி. உடன்ஏற்படுத்திய புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) அமைக்கப்பட்ட விதம் பற்றியும் மிகவும் கவலையுற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டப்படத்தக்கது.*

## சமாதானம் முற்றிலும் கேள்விக்குள்ளாகும்!

*தென்னிலங்கையின் அரசியல் பாரம்பரியம் ஜே.வி.பியின் கைகளுக்குப் படிப்படியாக மாறுவது என்பது, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சமாதான வழிமுறைகளையும் முற்றி லும் கேள்விக்குள்ளாக்கும் விடயமாகும்.* அதிலும் ஜே.வி.பி. இலங்கை இனப்பிரச்சினை விவ காரத்தில் தீவிர இந்தியத் தலையீட்டைக் கோரிநிற்கும் இச்சூழல் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கையை அறவே இல்லாமல் செய்கின்றது. பேச்சுக்கள், அரசியல் தீர்வு தொடர்பாகதான் கொண்டுள்ள கடுமை யான நிலைப்பாடுகளுக்கு இந்திய ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஜே.வி.பி. இறங்கியுள்ளது. ★

# நேற்று வந்திருக்கலாமே.....


*அப்படி ஒரு பிரசுரம் அப்போதெல்லாம் உங்களுக் கும் ஒன்றாவது கிடைத்திருக் கும். திருப்பதி வெங்கடாசலபதி அல்லது வேறு கடவுளர்களின் பெயரால் அதிசயம் ஆனால் உண்மை, அற்பு தம் என்பன போன்ற தலைப்புக்களில் அவை எழுதப்பட்டி ருக்கும்.*

*உங்களுக்குத் தெரிந்தவர் அல்லது உங்களது பெயர் முகவரிகளை வேறு வழியில் பெற்ற எவராவது தம்மை யார் என்று காட்டிக்கொள்ளாமல் அநாமதேயக் கடிதமாக அதனை அனுப்பியிருப்பார்.*

*அதிலே குறிப்பிட்ட தெய்வமானது ஒருவரது கனவில் தோன்றியோ அந்த நோட்டீஸ் ஆசையை வெளியிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கும். அத்துடன் அது போல நீங்களும் ஒரு தொகைப் பிரதிகள் எடுத்து உங்களுக்கு அதனை அனுப்பியவர் உங்களை எவ்வளவு தூரம் பழிவாங்க நினைக்கிறாரோ அத்தனை பிரதிகள் என்றும் வைத்துக்கொள்ளலாம்) அவைகளை உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்கப்பட்டிருக்கும்.*

*அதெல்லாம் ஆண்டவனின் கட்டளை என்பது போலவும், அதனை அலட்சியம் செய்பவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மதித்துப் போற்றிப் பெருமையும் புகழும் பெற்றவர்கள் என்பதற்கும் ஒரு பட்டியல் அதிலே தரப்பட்டிருக்கும். அதெல்லாம்கூட விசாரித்து அறிந்துகொள்ள முடியாவிட்டாலும் நம் பக்கூடியது போலவே இருக்கும்.*

*ஒருவருக்கு இப்படி ஒரு பிரசுரம் கிடைத்தால் அவர் பாடு அதோ கதிதான் இருபத்தைந்து பிரதிகள் பண்ணி அனுப்பும் படி கேட்கப்பட்டிருந்தால். இருபத்தைந்து தாள்கள், இருபத்தைந்து சோடி கடித உறைகள் - முத்திரைகள் எல்லாம் சேகரித்துக் கொண்டு கடிதம் வரைய உட்கார வேண்டியதுதான். இன்வாதிகள் வாக்காளர் இடாப்பு, தொலைபேசி விவரக்கொத்துக்களிலிருந்து தமிழர்களின் இருப்பிடங்களை அறிந்து தாக்குவது போல இவர்களும் அப்படி எதையாவது பார்த்துத் தாக்குதல் மேற்கொள்வதுமுண்டு. என்ன செய்வது புண்ணியம் தான் கிடைக்காவிட்டாலும் பாவம் பிடித்துவிடக்கூடாது என்ற பயம்தான்.*




*அப்படியான கடிதம் கிடைத்து அதனைத் தபால் வெடிகுண்டு போல நினைத்துப் பதறுபவர்களும் உண்டு.. படிக்காதே... கிழித்தெறி என்று துடித்துப் போவார்கள். காரணம் அதன் பின் விளைவுதான்...*

*கடிதச்சுற்று வட்டமாகப் பரவிவந்த இந்தமுறை பின்னர் அச்சுப்பிரசுர முறைக்குத் தாவியது. அதற்குப் 'பிள்ளையார் சுழி' வைத்துக்கொடுத்த பெருமை அச்சுக்கூடக் காரராகத்தான் இருக்கவேண்டும். அதே கடித விவரம் துண்டுப் பிரசுரமாக அச்சிடப்பட்டுவெளியிட்டவரின் பெயர் விலாசத்துடன் அச்சகத்தின் பெயரும் கீழே குறிப்பிடப் பட்டிருக்கும். அப் பிரசுரங்களைத் தபாலில்தான் அனுப்பவேண்டுமென்பதில்லை. நோட்டீஸாக விநியோகிப்பவர்கள் இதனைக் கண்டும் ஓடி ஒழிப்பவர்கள் உண்டு. காரணம் அதே பின்விளைவுதான்...*

*துண்டுப்பிரசுரம் பெற்ற பயந்தாங்கொள்ளி ஒருவர் அச்சகத்துக்குச் சென்று இதுபோல நூறோ இருநூறோ அச்சிடவேண்டும் எனக்கேட்கிறார் என வைத்துக் கொள்வோம். அச்சக முதலாளி சிந்தனை வயப்பட்டவராக 'ச்சா... நீங்கள் நேற்று வந்திருக்கலாமே... நேற்றுத் தானே மாற்றரைக்கவைத்தோம்' என்று வந்தவருக்காக மனம் வருந்துவார். ஆனால் உள்ளே ஏற்கனவே தயாரித்த மாற்றர் அப்படியேதான் இருக்கும். அவரும் அப்படியான ஓடர்களை எதிர்பார்த்திருந்தவர்தானே பின்னர் வந்தவருக்காக மனமிரங்கி தாள்களின் செலவு அடிகூலியுடன் அச்சுக்கோர்த்த செலவையும் சேர்த்து வசூலிப்பார். 'மாற்றர்' அவர்கள் செய்ததெல்லாம் பெயர் விலாச மாற்றங்களே..!*

*அந்த அதிசயம் - அற்புதம் - பிரசுர விவகாரம் இப்பொழுது இங்கு மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. கதிர்காமத்திலே நடந்த அதிசயம், வேளாங்கண்ணி மாதாவின் அற்புதங்கள் போன்ற சில பிரசுரங்கள் என் பார்வைக்கும் எட்டியுள்ளன. இது கொம்பியூட்டர் காலமல்லவா? அதனால் அந்த அச்சிலேயே தற்போதைய பிரசுரங்கள் வெளிவருகின்றன.*

*யானைப்பசிக்கு சோளப்பொரி என்பது போலன்றி அதற்கு அதிக வேலை கொடுக்கவேண்டுமல்லவா? அதனால் நூறு என்றெல்லாம் உயர்ந்துவிட்டது. பிரசுரத்தின் அடியில் பெயர் முகவரிக்குப் பதில் பக்தன், அன்பன் என்றிருக்கும். ஓப் - செற் பிரின்டர்ஸ் என்று அந்த விவரமும் தரப்பட்டிருக்கும். (சிலவேளை இதற்கும் பிள்ளையார் சுழி வைத்த பெருமை இவர்களாகத்தான் இருக்குமோ என்னவோ...)*

*எல்லாம் சரி இந்த அதிசயம் அற்புதம் பிரசுரங்களைப் பெற்றுப் படித்தும்அதன்படி நடந்துகொள்ளாத எனக்கு என்ன நேரும் என்பதுதானே உங்கள் கவலை? அடுத்த வாரக்கட்டுரை எழுதுவதற்கு இவர் இருக்க மாட்டார் என்று உங்களில் சிலர் முணுமுணுப்பதுகூட எனக்குக் கேட்கிறது.*

**சண் அங்கிள்**

# 'ஒலிம்பிக்' சுவாரஸ்யங்கள்

உலகையே தன் பக்கம் கவரப்போகும் ஒலிம்பிக் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன. ஆரம்பத் தினத்திலிருந்து உலகின் பார்வையை அக்கம் பக்கம் நகரவிடாது கவர்ந்து வைத்திருக்கப் போகின்றது. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரம் ஒலிம்பிக் போட்டியை நடத்த சர்வதேச ஒலிம்பிக் குழு அனுமதி வழங்கியதிலிருந்து கடந்த 4 வருடங்களாகவே ஏதென்ஸ் நகரம் போட்டிகளை நடத்தத் தயாராகிவருகிறது. ஒலிம்பிக் போட்டிகளை நடத்த வெறும் விளையாட்டு மைதானங்க


பிரதான அரங்கம்

ளையோ, வீர வீராங்கனைகள் தங்க அறைகளையோ அமைத்து விட்டால் போதாது. ஆரம்ப விழாவுக்கு வரும் பிரதம விருந்தினர் முதல் போட்டிகளைக் கண்டுகளிக்க வரும் விளையாட்டு ரசிகர் வரை அனைவரையும் திருப்திபபடுத்தும் விதத்தில் ஏற்பாடுகள் அமைய வேண்டும் என்ற கவலையுடன் இருக்கிறது கிரேக்க அரசு. போதாக் குறைக்கு தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் வேறு ஏற்பாட்டாளர்களின் அடிவயிற்றைக் கலக்கிவருகிறது.

குறிப்பாக அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து வரும் வீர, வீராங்கனைகளை கண்ணுக்குள் வைத்துப் பாதுகாக்க வேண்டிய கட்டாயம் கிரேக்க அரசுக்கு ஆர்வக் கோளாறால் அந்த வீர, வீராங்கனைகள் ஏதென்ஸின் அழகை ரசிக்கிறோம் என்று கூறிக்கொண்டு எவருக்கும் தெரியாமல் எங்கேயாவது போய் வம்பில் மாட்டினால் தமது தலை உருளும் என்ற அச்சத்தில் தூக்கமின்றி இருக்கிறார்கள் கிரேக்கப் பாதுகாப்பு அதிகாரிகள்.

இத்தனையையும் சமாளித்துக்கொண்டு ஏற்பாடுகளை ஒரு வழியாக ஒப்பேற்றும் கிரேக்க அரசுக்கு விமர்சகர்கள் வடிவத்தில் அடுத்த தலைவலி வந்து சேர்ந்துள்ளது.

பாடுபட்டு விளையாட்டரங்குகளைக் கட்டிவைக்க அதில் ஆயிரம் குற்றங்களைக் கண்டு பிடிக்கிறார்கள் விமர்சகர்கள்.

பிரதான மைதானத்தின் கூரைப் பகுதி சரியில்லை. அவசர, அவசரமாகக் கட்டுமானம் மேற்கொண்டதால் மைதானத்தில் ஏகப்பட்ட குறைகள் என்கிறார் ஒரு விமர்சகர்.

சைக்கிளோட்டப் போட்டி இடம்பெறவுள்ள அரங்கில் காற்று வேகமாக வீசும்போது சைக்கிள் வீரர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்கிறது ஒரு பத்திரிகை.

வீர, வீராங்கனைகள் தங்குமிடம் சில மைதானங்களில் இருந்து தூரமாக உள்ளது. அவர்கள் மைதானத்துக்குப் போய்ச்சேர்வதற்குள் களைத்து விடுவார்களே? என்று அனுதாபப்படுகிறது ஒரு இணையத் தளச் செய்திச்சேவை.

இப்படித் தேடித் தேடிக் குறை கூறினால் என்னதான் செய்வார்கள் கிரேக்க அதிகாரிகள்?

"எல்லாம் எங்களுக்குத் தெரியும். ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கும்

**ஜே.கே.**

தினத்துக்கு முதல் நாள்தான் எமது ஏற்பாட்டுப் பணிகள் நிறைவு பெறும். ஆகவே, ஒலிம்பிக் போட்டி ஆரம்பிக்கும் போது எந்தக் குறையும் இருக்காது. வேண்டுமானால் அப்போது பாருங்கள்;

இப்படிக் கூறி விமர்சகர்களின் வாயை அடக்க முயற்சிக்கிறார்கள் அவர்கள். பின்னர் என்னதான் அவர்களால் செய்யமுடியும்.

ஒலிம்பிக் போட்டிக்கான ஏற்பாடுகளில் சிலவற்றை இங்கு தருகிறோம். அவற்றை அறிந்த பின்னர் கிரேக்க அதிகாரிகளின் ஆதங்கம் எவ்வளவு நியாயம் என்பதை உணரலாம்.

இதோ ஏதென்ஸ் நகரில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான ஏற்பாடுகள் குறித்த சில சுவாரஸ்யங்கள்.


டெனிஸ் மைதானம்

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகள் தொடங்குவதற்கு முன்பு, நகரில் 2 லட்சத்து90 ஆயிரம் மரங்கள் நடப்படுகின்றன. 10 லட்சத்துக்கும் மேலான செடிகள், புதர் போன்ற அமைப்பில் அங்கு அழகுக்கு அழகு சேர்க்கப்போகின்றன.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் சமயத்தில், தினமும் 4 லட்சம் உணவுகளை ஏதென்ஸின் உணவுச் சேவைத்துறை வழங்க வேண்டி இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒலிம்பிக் கிராமத்தில் தினமும் 22 ஆயிரம் பேருக்கு 24 மணி நேரமும் உணவுகள் தயாராகிக் கொண்டே இருக்கும். 1500 வகையான உணவுகள் தயார் செய்யப்படும். தினமும் 100 தொன் உணவுப் பொருள்கள் தயாராகும்.


படகுப்போட்டிக்கான ஏரி

ஒலிம்பிக் கிராமத்தில் ஒரு மணி நேரத்தில் 6 ஆயிரம் சாப்பாடுகள் என்ற கணக்கில் தயார் செய்யத் தேவைப்படும் பொருள்கள் 15 ஆயிரம் லீற்றர் பால், 30 ஆயிரம் முட்டைகள், 300 தொன் பழங்கள் மற்றும் காய்கறிகள், 120 தொன் இறைச்சி, 85 தொன் கடல் உணவுகள், 750 லீற்றர் தக்காளி சோஸ், 20 லட்சம் லீற்றர் நீர், 30 லட்சம் லீற்றர் பானங்கள் தேவை. இவற்றைத் தயார் செய்ய ஏதென்ஸ் உணவுத்துறையில் 17 ஆயிரம் பேர் பணி செய்வர்.

போட்டிகளின்போது, போக்குவரத்து வசதிக்காக, சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத எலெக்ட்ரிக் கார்களை ஹண்டாய் நிறுவனம் அளிக்கிறது.

16 ஆயிரம் வீரர்கள் மற்றும் அதிகாரிகள் தங்குவதற்கு வசதிகள கொண்ட ஒலிம்பிக் கிராமம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

போட்டிகள் தொடர்பான தகவல்களை 202 நாடுகளுடன் பரிமாறிக் கொள்ள கிரீஸ் 45 லட்சம் அச்சிடப்பட்ட தாள்களைப் பயன்படுத்தியுள்ளது.

ஒலிம்பிக் போட்டியின் தகவல் குறிப்பேடு ஆங்கிலம், பிரெஞ்சு. ஜேர்மன், இத்தாலி, ரஷ்யன், ஸ்பானிஸ் மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்ட பிறகு, அதை ஏந்திய முதலாவது வீரர் கிரீஸின் கோஸ்டாஸ் காட்சியோடிஸ். இவர் ஈட்டியெறியும் போட்டியில் சம்பியன்.

ஏதென்ஸ் நகரில் உள்ள எர்மல் இவான் ஜொலிஸ்டிரியா தெருவில் மிகப் பெரிய ஒலிம்பிக் அங்காடி திறக்கப்பட்டுள்ளது.

56 ஆண்டுகளில் முதல் முறையாக லண்டன் வழியாக ஒலிம்பிக் ஜோதி இம்முறை பயணித்துள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஒலிம்பிக் அரங்கத்தில் 72 ஆயிரம் பேர் அமர்ந்து விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்கலாம். 25 ஆயிரம் சதுர மீற்றர் அளவுக்குக் கூரை வேயப்பட்டுள்ளது. தரையிலிருந்து 80 மீற்றர் உயரத்தில் கூரை அமைந்துள்ளது.

---

*உலக வங்கியின் 2004ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி அறிக்கையின் தமிழ்ப்பிரதி கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில், உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலகத்தில் வெளியிடப்பட்டது. மூன்று பிரிவுகளாக வெளியிடப்பட்ட அறிக்கையில் 'இலங்கையும் உலகவங்கியும்' என்ற பிரிவின் ஒருபகுதி இங்கு பிரசுரமாகிறது.*

# புனர்நிர்மாணத்தின் மூலம் சமாதானத்தை ஸ்திரமாக்குதல்

உலக வங்கி. யுத்தத்தால் சீரழிந்த வடகிழக்கில் முனைப்பான உட்கட்டமைப்பை நிர்மாணிக்கவும். அத்தியாவசியச் சேவைகளுக்குப் புத்துயிரளிக்கவும் உதவி வழங்கியிருக்கிறது. அது. இந்தப் பிராந்தியத்தைப் புனரமைப்புச் செய்வதற்கென 31 மில்லியன் அமெரிக்க டொலரை. மேலதிகமாக வழங்கியது

இரண்டு தசாப்தங்களாக நிகழ்ந்த கொடூரமான இன மோதல் இலங்கை மக்கள் மீதும் அதன் பொருளாதாரம் மீதும் அழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது. 1983 ஆம் ஆண்டு மோதல் ஆரம்பமானது முதல் கடந்த 20 ஆண்டுகளில் 60 ஆயிரத்திற்கும் கூடுதலான உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன. குறிப்பாக குழப்பமான வடகிழக்குப் பிராந்தியத்தில் இருந்து 8 லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வன் செயல்கள். வறுமையை மேலும் முனைப்புள்ளதாககின. பிராந்தியத்தின் சமூக.பொருளாதாரக் கட்டமைவைச் சேதமாக்கின; பண்ணை உபகரணங்களும் நீர்ப்பாசன வசதிகளும் அழிக்கப்பட்டுள்ளன. கல்வி. சுகாதாரம் போன்ற துணை ஆதரவுச் சேவைகள் சீர்குலைந்தன. விவசாயப் பொருள் விநியோகங்களையும் கடனையும் பெறும் வாய்ப்பு. மிக மோசமான வீதி நிலைமைகள். தடைப்பட்ட விநியோக மற்றும் சந்தைப் படுத்தல் முறைகள் என்பன அறவே அற்றுப்போயின. இதனால். ஜீவனோபாயத்துக்காக விவசாயம். கால்நடை வளர்ப்பு அல்லது ஆழ்கடல் மீன்பிடித்தலை நம்பியிருந்த சுமார் மூன்றில் இரண்டு பங்கு மக்களின் வருமானம் பெரும் வீழ்ச்சி கண்டது.


நாடு சமாதான முயற்சிகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலைமையில். இப்பிராந்தியத்தில் சொத்துக்களை மீண்டும் கட்டியெழுப்பவும் சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளுக்குப் புத்துயிரளிக்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கி. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் போன்ற பிற சர்வதேச நிறுவனங்களுடன் உலக வங்கி இணைந்து உதவி வழங்கிற்று. 1988ஆம் ஆண்டு மோதல் இடைநிறுத்தப்பட்டிருந்த வேளையில். திருகோணமலை. அம்பாறை மாவட்டங்களில் வீதிகளையும். தொலைத்தொடர்பு வசதிகளையும் அமைக்கவும் புதிய வீடுகளை நிர்மாணிக்கவுமாக அவசரகால புனர்நிர்மாண. புனர்வாழ்வுத் திட்டத்தின் மூலம் உலக வங்கி 78 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியது. இப்பிராந்தியத்தில் பொருளாதாரத்தின ஆதாரமாக விளங்கும் விவசாயத்துக்காக நீர்ப்பாசனத்தைப் புதுப்பிக்கும் நோக்கத்துடன் வடகிழக்கு நீர்ப்பாசனமளிக்கப்பட்ட விவசாயத் திட்டத்தின் (கட்டம் 4) மூலம் உலக வங்கி தனது உதவியை அதிகரித்தது. தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கல்விசார்ந்த திட்டங்கள். மேம்படுத்தப்பட்ட பாட விதானங்கள். பாட நூல்கள். போதனை முறைகள் மூலம் சகிப்புத் தன்மை. சமூக ஒத்திசைவு போன்றவற்றைப் போற்றிவளர்க்கும் நோக்கமுடையவை.

இப்பிராந்தியத்துக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஆதரவை வழங்கும் வகையில். வடகிழக்கு அவசரகாலப்புனர்நிர்மாண வேலைத் திட்டத்துக்கு அமைய 45 மில்லியன் அமெரிக் டொலரை வழங்கும் வகையில் 2002 ஆம் ஆண்டில் உலக வங்கியின் செயற்றிட்டம் மறுசீரமைக்கப்பட்டது. முன்னர் மேற்கொள்ளப்பட்ட துரிதமான தேவைகள். மதிப்பிட்டு இனங்காணப்பட்ட தேவைகள். முதன்மைகளை ஆதாரமாகக் கொண்டு பொதுச் சுகாதாரம். நீர் விநியோகம் ஆகியவற்றை மேம்படுத்தவும் திரும்பி வரும் அகதிகளுக்கு ஜீவனோபாய வாய்ப்புக்களை மீளமைத்துக் கொடுக்கவும் இப்பகுதியில் வலுவான அமைப்புக்களை உருவாக்கவும் இந்தத் திட்டம் உதவுகிறது. இப்பிராந்தியத்துக்குச் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் கொண்டுவரும் இந்த முயற்சியில் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடனுமான பங்காளித்துவங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கியிருக்கின்றன. ★



நூல்வழிவில் வெளியிடப்பட்ட அறிக்கையின் 3 பிரிவுகளின் அட்டைப்படங்கள்

உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

**NEW KAMAAL CERAMICS,**
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

**JAFFNA CERAMICS,**
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

**VENKE IMPEX,**
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

LWL **லங்கா வோல்டைல் லிமிரெட்,**
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460 / (011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்




உங்கள் விளம்பரங்களையும் உதயனின் ஞாயிறு வர்ணப் பக்கத்தில் பிரசுரிக்க வேண்டுமா?
உதயன் விளம்பரப் பணிமனை தொ.பே: 222 2030, 3837
கொழும்பில் தொடர்புகளுக்கு தொ.பே: 011 4734401-3



# செய்மதி ஊடான தொலைபேசிச் சேவை

# 'மொபிட்டெல்' ஆரம்பித்து வைத்தது

இலங்கையில் தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கும் சுதேசிய நிறுவனமான 'மொபிட்டெல்' நிறுவனம் செய்மதி ஊடான தொடர்பாடல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. 'எம்.ஸட்' (M-sat) சேவை என்று இது அழைக்கப்படுகின்றது.

இலங்கையில் எந்த மூலையில் இருந்தும் நாட்டின் சகல பகுதிகளோடும் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய தன்மையே இச்சேவையின் சிறப்பம்சமாகும்.

சர்வதேச அளவில் தொடர்பாடல் சேவையில் ஈடுபடும் அசெஸ் (ACeS) நிறுவனத்துடன் இணைந்து வழங்கப்படும் இச்சேவை மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் செய்மதி மூலமான தொலைபேசி வசதி, இரண்டு நடைமுறைகளின் கீழ் வழங்கப்படுகின்றன.

ஒன்று - நிலையான இணைப்பு.

மற்றது - எங்கேயும் கொண்டு திரிந்து பயன்படுத்தும் கையடக்கத் தொலைபேசி இணைப்பு.

இப்போது தொலைத்தொடர்பு வசதிகளோ, கோபுரங்களோ, இணைப்பு ஏற்பாடுகளோ இல்லாத பின்தங்கிய பிரதேசத்திலும், கிராமப்புறங்களிலும் கூட - இந்த வசதி மூலம் தொலைபேசி இணைப்புக்களைத் தங்குதடையின்றி பெற்றுக் கொள்ள முடியும்.

வழக்கமாகக் கையடக்கத் தொலைபேசியை நாம் பயன்படுத்தும்போது, ஒதுக்குப்புறமான பிரதேசத்துக்கோ அல்லது பின்தங்கிய பகுதிகளுக்கோ அல்லது கிராமப்புறங்களுக்கோ அன்றி மிக அண்மையில் சம்பந்தப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்கள் இல்லாத இடத்துக்கோ சென்றால் தொலைத்தொடர்பு இல்லாமல் போய் விடும். தொலைத்தொடர்பு சமிக்ஞைகிட்டாமல் நாம் இவ்வசதியை இழப்போம்.

ஆனால், மொபிட்டெல் தற்போது அறிமுகப்படுத்திய முறையால் இந்தப் பிரச்சினை வராது. இத்தகைய கைத் தொலைப்பேசி வசதியைப் பெற்றவர் நடுக்காட்டிலோ அல்லது நடுக் கடலிலோ இருந்தும் கூட தொலைபேசி அழைப்பைப் பெறவோ அல்லது மேற்கொள்ளவோ முடியும்.

விண்ணில் அசைந்துத் திரியும் செய்மதி மூலமான தொலைத்தொடர்பு இது என்பதால் நிலையான இணைப்பைப் பெற்றவர்கள் வானை நோக்கியப்படியான அன்ரனாவை அமைக்க வேண்டியிருக்கும். கையடக்கத் தொலைபேசி வசதியைப் பெற்றவர்கள் சமிக்ஞை குறைவாக இருந்தால் அதைத் தெளிவுபடுத்துவதற்காக மூடிய இடங்களுக்குள் இருந்து திறந்த பிரதேசத்துக்கு வரவேண்டியிருக்கும்.

முல்லைத் தீவுக் காட்டிலோ, ஹபரணை நகரிலோ, சிவனொளிபாத உச்சியிலோ, பருத்தித்துறைக் கடலிலோ, நெடுந்தீவிலோ எங்கிருந்தும் இந்தக் கையடக்கத் தொலைபேசியை நீங்கள் பயன்படுத்தமுடியும். சர்வதேச ரீதியில் இதேவசதியை வழங்கும் நிறுவனங்களின் கட்டணத்துடன் ஒப்பிடும்போது மொபிட்டெல் மிகமிகக் குறைந்த கட்டணத்தையே அறவிடுகிறது.

### கையடக்கத் தொலைப்பேசி

மாதாந்தக் கட்டணம் 599 ரூபா. வெளிச்செல்லும் உள்ளூர் அழைப்புகளுக்கு ஒரு நிமிடத்துக்கு 40 ரூபா. உள்வரும் அழைப்புகளுக்கு முதல் மூன்று நிமிடங்களுக்கு கட்டணம் இல்லை. அதற்குப் பின் ஒவ்வொரு நிமிடத்துக்கும் முப்பது ரூபா.

வெளிச்செல்லும் சர்வதேச அழைப்புகளுக்கு மேலதிகமாக சர்வதேசக் கட்டணம் அறவிடப்படும்.

### நிலையான இணைப்பு

இதேபோன்று, நிலையான இணைப்புக்கு மாதாந்த கட்டணம் 499 ரூபா. வெளிச்செல்லும் உள்ளூர் அழைப்புகளுக்கு ஒரு நிமிடத்துக்கு 19 ரூபா. உள்வரும் அழைப்புகளுக்கு முதல் ஐந்து நிமிடங்களுக்குக் கட்டணம் இல்லை. மேலதிக ஒவ்வொரு நிமிடத்துக்கும் 9 ரூபா.

இணைப்புக் கட்டணமாக 2ஆயிரம் ரூபாவும், வைப்புத் தொகையாக 5ஆயிரம் ரூபாவும், சர்வதேச தொலைபேசி அழைப்பு இணைப்புக்கு மேலதிக வைப்புக் கட்டணமாக 5ஆயிரம் ரூபாவும் அறவிடப்படும்.

மேலதிகமாக ஐம்பதாயிரம் ரூபாவை வைப்புக் கட்டணமாகச் செலுத்துவதன் மூலம் சுமார் 25 நாடுகளுக்கு இந்தக் கையடக்கத் தொலைபேசி இணைப்பைக் கொண்டுசென்று பயன்படுத்தக் கூடிய 'Roaming' வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

செய்மதியூடான இத்தொடர்புச் சேவையின் அறிமுக வைபவம் சமீபத்தில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு கலந்துகொண்டு உரையாற்றிய நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் அதிகாரி கபில ஸ்ரீ சந்திரசேகர கூறியதாவது:-

தொலைத் தொடர்புத்துறையின் துரித வளர்ச்சி காரணமாக ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளும் மக்களின் தேவை குறிப்பிடத்தக்க வகையில் வளர்ந்துள்ளது. ஒருவர் எங்கிருந்தாலும் அவரின் தொடர்பாற்றலுக்கான கிராக்கியை இந்த அபிவிருத்தி மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. உலகின் எந்தத் தூரப்பகுதிகளுக்கும் உலகளாவிய தொடர்பை ஏற்படுத்த செய்மதித் தொலைபேசிகள் பயன்படுத்தப்படுகின்றன. நிலையான தொலைபேசித் தொடர்பினை வழங்க முடியாத அல்லது பொருளாதார ரீதியாகக் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தமுடியாத இடங்களுக்கு தொலைபேசி சேவைகளை வழங்குவதில் செய்மதி சேவைகள் வெற்றிகண்டுள்ளன.

விரிவான அலைவரிசைகளை வழங்குவதில் முன்னணியில் நிற்கும் மொபிட்டெல் லங்கா நிறுவனம் மாத்தளை, மொனறாகலை மாவட்டங்களில் 40 கிராமிய உப-தபால் நிலையங்களின் ஊடாக 'எம் - ஸெட்' என்றழைக்கப்படும் தனது செய்மதி தொலைபேசிச் சேவையை ஆரம்பிக்கிறது. இலங்கையின் தொலைத் தொடர்பு சேவைகள் விரிவாக்கப்படாத பகுதிகளுக்குத் தொலைத் தொடர்பு சேவைகள் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்படும் இச் சேவை மொபிட்டெலின் புவியியல் விரிவாக்கமாகும் - என்று கூறினார்.

மொபிட்டெல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் டீ சில்வா உரையாற்றும் போது கூறியதாவது:-

பின்தங்கிய பகுதிகளுக்குத் தொலைபேசிச் சேவையை வழங்கும் எங்களது செயற்பாட்டுடன் இலங்கையின் தூர பிரதேசங்களுக்கும் சேவைகளை வழங்கக்கூடிய தீர்வுகளையும் நாம் கண்டறிந்துள்ளோம். பிலிபைன்ஸிலும், இந்தோனேஷியாவிலும் நியாயமான விலையில் கிராமிய தொலைபேசிச் சேவையை வழங்குவதில் உயரிய நிலையை உருவாக்கிய 'ACeS' னால் வழங்கப்படும் இந்தச் செய்மதி சேவை நல்ல இலட்சியங்களை உடைய உயரிய சேவையாகும் - என்று கூறினார்.

சர்வதேச ஆசிய செலூலர் செய்மதி சேவையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அதி ரஹ்மான் அதிவோஸோ கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:-

இச்செய்திசேவையினை இலங்கையில் மொபிட்டெல் நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிப்பதில் பெருமைப்படுகின்றோம். செய்மதித் தொழில்நுட்பத்தை முதன்மையானதாக மாற்றுவதன் மூலம் ஆசிய செலூலர் செய்மதி சேவை 'ACeS' ஆசியாவின் பல பகுதிகளிலுள்ள கிராமிய மக்களுக்கு குறிப்பிடத்தக்க சேவைகளை வழங்கியுள்ளது.

இது 2001 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆசியப் பிராந்திய செய்மதித் தொலைத்தொடர்பு கம்பனியாகும். இது தனது சேவைகளை இலகு கட்டணத்தில் ஆசியா முழுவதிலும் விஸ்தரித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் இருந்து பாபுவா நியூகினியா, மொங்கோலியா முதல் இலங்கை வரை இச்சேவையைப் பயன்படுத்துகின்றனர். இது நிலையான மற்றும் நடமாடும் சேவைகளை வழங்குகின்றது.

இந்தோனேஷியா பெசிவிக் சட்லைட் நுசன்ரா நிறுவனம், பிலிப்பைன்ஸ் லோங்டிஸ் டெலிபோன் கம்பனி, தாய்லாந்து ஜெஸ்மீன் ஓவர்சீஸ் லிமிட்டெட், அமெரிக்க லொக்ஹீட் மாட்டின் குளோபர் டெலி கொமியுனிகேசன் லிமிட்டெட் போன்றவைகள் இதற்கு முன்னோடியாகும்.

மொபிட்டெல் 'ACeS' நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பக் கட்டமாக நடமாடும் மற்றும் நிலையான சேவையினை வழங்கும். இத்தகைய சேவையில் ஏனைய தொலைபேசி நிறுவனங்களால் அறவிடுகின்ற கட்டணங்களிலும் பார்க்க 70 சதவீதம் வரை குறைவான கட்டணங்களையே அறவிடும் - என்று கூறினார்.

இந்தச் செய்மதி தொடர்பாடல் சேவை அறிமுக வைபவத்தில் நிறுவனத்தின் தலைவர் சூகி அனன், சர்வதேச ஆசிய செலூலர் செய்மதி சேவையின் நிறைவேற்று அதிகாரி அதி ரஹ்மான் அதிவோஸோ, நிறுவனத்தின் சந்தைப் படுத்தல் அதிகாரி கபில ஆகியோர் உட்பட பத்திரிகையாளர்களும், நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இச் சேவை பற்றிய மேலதிக விவரங்களை 0712-717199 என்ற தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.

